www.padippakam.com

பாராளுமன்ற முறை வரலாற்று ரீதியில் காலாவதியாகிவிட்டது என்ற விசயத்தை, திரிபுவாதிகள் அதன் உண்மையான அர்த்தத்தில் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் பாராளுமன்றவாதிகளாக வெளிப்படுகிறார்கள். புறக்கணிப்புவாதிகள் எவ்வித ஆய்வும் இல்லாமல் அல்லது தவறான காரணங்களைக் கொண்டு பாராளுமன்ற முறை அரசியல் ரீதியிலும் காலாவதியாகிவிட்டது என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற முறையை வரலாற்று ரீதியில் காலாவதியாகிவிட்டது என்ற அடிப்படையில் தமது செயல் திட்டங்கள், நடவடிக்கைகள் அனைத்தையும் அமைத்துக் கொள்ளும்போதே அரசியல் ரீதியிலும் காலாவதியாகிவிட்டதா என்பதை உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வு, தயார் நிலை ஆகியவற்றின் நிலைமைகளை ஆய்வு செய்து முடிவுக்கு வருகிறார்கள். அதனடிப்படையில் அவர்கள் பாராளுமன்றம் பற்றி தமது அணுகுமுறையைச் சரியான செயலுத்தியாக கையாளுகிறார்கள்.

# முதலாளித்துவ பாராளுமன்றமும் கம்யூனிஸ்டு புரட்சியாளர்களும்

கார்முகில்

படிப்பகம்

www.padippakam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippokam.com

# முதலாளித்துவப் பாராளுமன்றமும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களும்

கார்முகில்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

முதற்பதிப்பு : அக்டோபர் 1983
இரண்டாம் பதிப்பு : சனவரி 2004

விலை : ரூ 30

ஜூலை 1981 புரட்சிக்கனல் இதழில் வெளிவந்தது. சில திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

# பொருளடக்கம்

I முதலாளித்துவப் பாராளுமன்றமும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களும்

1. பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகிவிட்டது என்பதன் உண்மையான பொருளும், முக்கியத்துவமும். .. 10
2. முதலாளித்துவப் பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதி ஆகிவிட்டதா என்பதன் பொருளும் முக்கியத்துவமும். .. 13
3. கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கு கொள்வதன் நோக்கமும் முறையும். .. 18
4. கம்யூனிஸ்டுகளும் பாராளுமன்றப் புறக்கணிப்பும் .. 22
5. முதலாளியப் பாராளுமன்றங்களின்பால் திரிபுவாதிகள் மற்றும் புறக்கணிப்புவாதிகளின் அணுகுமுறை .. 27
6. இந்தியாவில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகவில்லை .. 37
7. நிரந்தரப் புறக்கணிப்புக்குக் கூறப்பட்டுவரும் காரணங்கள் அனைத்தும் மார்க்சிய-லெனினியத் திற்கும் வரலாற்று உண்மைகளுக்கும் புறம்பானவை .. 43

II பாராளுமன்றப் பல்லக்கில் 'மார்க்சிஸ்ட்' கட்சி

1. 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மக்கள் ஜனநாயகம் மந்திர வித்தைக்காரனின் மாயாஜாலப் பிரகடனம். .. 69
2. பாராளுமன்றத்தில் 'மார்க்சிஸ்ட்'களின் புரட்சி .. 80

படிப்பகம்

www.padippakam.com

# முதலாளித்துவப் பாராளுமன்றமும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களும்

படிப்பகம்

www.padippakam.com

பாராளுமன்றமும், தேர்தலும் பற்றிய விசயத்தில் கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறையை மூன்று விசயங்கள் தீர்மானிக்கின்றன. ஒன்று பாராளுமன்றமுறை வரலாற்று வகையில் காலாவதியாகிவிட்டது என்ற விசயம், இரண்டாவது குறிப்பிட்ட நாட்டில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகிவிட்டதா இல்லையா என்ற விசயம், மூன்றாவதாக புரட்சிகரக் கட்சியின் பலம் அல்லது பலவீனம்.

பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகி விட்டது என்ற விசயத்தை திரிபுவாதிகள் அதன் உண்மையான அர்த்தத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் பாராளுமன்றவாதிகளாக வெளிப் படுகிறார்கள். புறக்கணிப்புவாதிகள் எந்தவித ஆய்வும் இல்லாமல் அல்லது தவறான காரணங்களைக்கொண்டு பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதியாகிவிட்டது என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகிவிட்டது என்ற அடிப்படையில் தமது செயல்திட்டங்கள், நடவடிக்கைகள் அனைத்தையும் அமைத்துக் கொள்ளும்போதே அரசியல் வகையிலும் காலாவதியாகிவிட்டதா என்பதை உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வு, தயார்நிலை ஆகியவற்றின் நிலைமைகளை ஆய்வு செய்து முடிவுக்கு வருகிறார்கள். அதன் அடிப்படையில் அவர்கள் பாராளுமன்றம் பற்றிய தமது அணுகுமுறையை சரியான செயலுத்தியாகக் கையாளுகிறார்கள்.

எனவே பாராளுமன்றம் மற்றும் தேர்தல் பற்றிய விசயத்தில் கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறைக்கும், திரிபுவாதிகள் மற்றும் புறக்கணிப்புவாதிகளின் அணுகுமுறைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு இருப்பது வியப்புக்குரியதல்ல.

படிப்பகம்

www.padippkam.com

# 1

## பாராளுமன்றமுறை வரலாற்று வகையில் காலாவதியாகிவிட்டது என்பதன் உண்மையான பொருளும், முக்கியத்துவமும்

பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகி விட்டது என்பதன் பொருளும், முக்கியத்துவமும் உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் முதலாளித்துவப் பாராளுமன்ற முறையின் சகாப்தம் முடிவுற்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சகாப்தம் தொடங்கி விட்டது என்பது தான். அதாவது உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி வர்க்க இயக்கம் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் பாராளுமன்ற ஜனநாயகத்தை அடைவதை நோக்கி அமைத்துக் கொள்ளக் கூடாது. மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அடைவதை நோக்கியே திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும். பாராளுமன்ற ஜனநாயக நிறுவனங்களைக் கட்டிக் காப்பதை தனது நோக்கமாகக் கொள்ளக் கூடாது. மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிறுவனங்களை அமைப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்க இயக்கம் முதலாளித்துவத்தை நிறுவுவதை தனது இலட்சியமாகக் கொள்ளக் கூடாது. மாறாக சோசலிசத்தை நிறுவுவதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பது தான்.

முதலாளித்துவப் பாராளுமன்ற முறை முதலாளித்துவத்தைக் கட்டிக் காப்பதற்கான ஒரு அரசியல் முறையே; அது முதலாளி வர்க்கத்தின் – சுரண்டும் வர்க்கத்தின் நலனை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்துகிறதேயன்றி ஒரு போதும் பாட்டாளி வர்க்கத்தின் – உழைக்கும் மக்களின் நலனைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில்லை. எனவே முதலாளியப் பாராளுமன்றங்கள் மூலம், அதற்கு பிரதிநிதிகளை அனுப்புவதன் மூலம் அதில் பெரும்பான்மை பெறுவதன் மூலம் உழைக்கும் மக்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை ஒரு போதும் செலுத்த முடியாது. பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவது பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுவதாகாது; முதலாளி வர்க்க ஆட்சியை அகற்றுவதும் ஆகாது. மாறாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் மூலம் அதைக் கைப்பற்றுவது என்பது முதலாளி வர்க்க ஆட்சியை மீண்டும் ஒரு முறை நிலை நிறுத்துவதேயாகும். உழைக்கும் மக்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை செலுத்த வேண்டுமானால் பாராளுமன்ற அமைப்பிற்கு வெளியே புதிதாக தமது புரட்சிகர அதிகாரத்திற்கான நிறுவனங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது முதலாளி வர்க்க – சுரண்டும் வர்க்க அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்து விட்டு பாட்டாளி வர்க்கம் புரட்சிகர வர்க்கங்களின் அதிகார நிறுவனங்களை (சோவியத் வடிவிலானவை) புரட்சிகரப் போராட்டங்களினூடே கட்டியமைக்க வேண்டும். அதற்காக மக்களைத் திரட்டவும் பயிற்றுவிக்கவும் வேண்டும்.



இம்மாபெரும் கடமைகளை 'சட்டசபை கோஷ்டியின் தொங்கு சதையாகவும், கிளையாகவும்' இருக்கும் ஒரு கட்சியால், பாராளுமன்றத் தேர்தல் எந்திரத்தின் தொங்கு சதையாகவும், தொழிற் சங்கங்களின் தயவில் உள்ள துணைக் கருவியாகவும் கருதிக்கொள்ளும் ஒரு கட்சியால் நிறைவேற்ற முடியாது. மாறாக ஸ்டாலின் கூறியது போல் 'தொழிற் சங்கங்களிலிருந்து பாராளுமன்றங்களில் உள்ள கட்சிக் குழுக்கள் வரை இதர எல்லா பாட்டாளி வர்க்க அமைப்புகளையும் வழி நடத்தும் வேலை செய்வதற்கான பாட்டாளி வர்க்கத்தின் மிக உயர்ந்த வர்க்க அமைப்பாக கட்சி இருக்க வேண்டும்' (கட்சியை புரட்சிக் கட்சியாக்குதல்)

சுருங்கச் சொன்னால் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகி விட்டது என்பதன் பொருளும், முக்கியத்துவமும் கீழ்க் கண்டவையே.

1. முதலாளித்துவப் பாராளுமன்றங்கள் இனியும் புரட்சிகர வர்க்கங்களின் அதிகார அமைப்பாக இல்லை. வரலாற்று வகையில் எதிர்ப் புரட்சிகர அமைப்பாக புரட்சியால் அழிக்கப்பட வேண்டிய அமைப்பாக மாறி விட்டது.
2. பாட்டாளி வர்க்க இயக்கத்தின் இலட்சியம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதாகவே இருக்கும். முதலாளிய ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதாக இருக்காது.

படிப்பகம்

www.padippkam.com



3. பாட்டாளி வர்க்கமும், புரட்சிகர வர்க்கங்களும் தமது அதிகாரத்திற்கான நிறுவனங்களை – சோவியத் வடிவ ஆட்சி அமைப்புகளை பாராளுமன்றத்துக்கு வெளியே புரட்சிகர போராட்டங்களினூடே தாமே அமைத்துக் கொள்ள வேண்டும்; முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிய வேண்டும்.
4. இம்மாபெரும் கடமைகளை நிறைவேற்ற பாட்டாளி வர்க்கத்திற்கும்,புரட்சிகர வர்க்கங்களுக்கும், எல்லா இன்னல் இடையூறுகளிலும் சரியாக வழிநடத்திச் செல்லக் கூடிய புரட்சிகரக் கட்சியாக - சட்டசபைக் கோஷ்டியின் தொங்கு சதையாகவோ, கிளையாகவோ அல்ல – கம்யூனிஸ்ட் கட்சி இருக்க வேண்டும்.

மேற்கண்ட முடிவுகள் பாராளுமன்றமும் தேர்தலும் பற்றிய விசயத்தில் கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறையின் மூலவுத்தி அம்சங்களைத் தெளிவு படுத்தி விடுகிறது. அதன் செயலுத்தி அம்சங்களை – அன்றாட உடனடி நடைமுறைக்கான விசயங்களை – பாராளுமன்ற முறை குறிப்பிட்ட நாட்டில் அரசியல் வகையிலும் காலாவதியாகிவிட்டதா என்ற கேள்விக்கான விடையே தீர்மானிக்கின்றது.

☆

# 2

# முதலாளித்துவப் பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதி ஆகிவிட்டதா என்பதன் பொருளும் முக்கியத்துவமும்

முதலாளித்துவப் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகிவிட்டது என்ற உண்மை அனைத்து நாட்டு பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கும் பொருந்துவதாகும். எனவே அது பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் சர்வதேச கம்யூனிஸ்டுகளிடையே மாறுபட்ட கருத்துக்களோ, விவாதங்களோ இல்லை.

எனினும் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியானது என்று உலக வரலாற்றின் கண்ணோட்டத்திலேயே கருதப்படுகிறது. உலக வரலாறு பல பத்தாண்டுக் கணக்கில் அளக்கப்படும் ஒன்று. உலக வரலாற்றின் அளவுகோலைக் கொண்டு அளக்கையில் பத்து அல்லது இருபது ஆண்டுகள் முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ கொள்வதால் மாறுபாடு ஏற்பட்டு விடுவதில்லை. உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் இது உத்தேசமாகக் கூட மதிப்பிட முடியாத ஒரு அற்ப விவகாரம். எனவே உலக வரலாற்றின் இந்த அளவுகோலை ஒவ்வொரு நாட்டின் அன்றாட அரசியல் நடைமுறையிலும் அப்படியே பிரயோகிக்க முடியாது.

எனவே உலக முழுவதிலும் உள்ள கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகி விட்டது என்ற அடிப்படையில் தமது திட்டங்களையும் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்ளும் அதே வேளையில் அது அரசியல் வகையில் தமது நாட்டில் காலாவதியாகிவிட்டதா என்பதை பருண்மையாக எதார்த்த நிலைமைகளை நிதானமாக ஆய்வு செய்து கண்டறிந்தே அன்றாட நடைமுறை அரசியலுக்கான செயலுத்தியாகப் பாராளுமன்ற அணுகுமுறை பற்றிய விசயத்தைத் தீர்மானிக்கிறார்கள்.

www.padippkam.com



பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகிவிட்டதா என்பதை எப்படித் தீர்மானிப்பது?

பாராளுமன்றத் தேர்தலை சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கத் தொடங்கியிருந்தாலும் அங்கு பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகி விட்டதாகத் தீர்மானிக்க முடியும் என்றும் அந்த நாடுகளில் பாராளுமன்றத் தேர்தலை கம்யூனிஸ்டுகள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும் சிலர் கருதுகின்றனர். இக்கருத்து லெனின் கருத்துக்கு மாறுபடுவதாகும். ஜெர்மன் பிராங்க்ஃபர்ட் இடதுசாரி குழுவினர், ஜெர்மனியில் பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதி ஆகிவிட்டது என்று வாதிட்டபோது அவர்களுக்கு லெனின் எழுதும் பதில் இங்கு நமக்கு உதவிகரமாய் இருக்கும். அவர் எழுதுகிறார். ''பாட்டாளி வர்க்கத்தினரில் லட்சக்கணக்கானோரும், எண்ணற்றோரும் இன்னமும் பொதுவாகப் பாராளுமன்ற முறையை ஆதரிப்பதோடன்றி அப்பட்டமான எதிர்ப் புரட்சித் தன்மை வாய்ந்தோராகவும் இருக்கையில், பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதி ஆகிவிட்டது என்று கூறுவது எப்படி? ஜெர்மனியில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் இன்னமும் காலாவதி ஆகிவிடவில்லை என்பது தெளிவு.... ஆலைத் தொழிலாளர்களில் லட்சக்கணக்கானோரும், எண்ணற்றோரும் வேண்டாம் ஓரளவு பெரிதான ***சிறுபான்மையினர்*** மட்டும்தான் கத்தோலிக்கப் பாதிரிமார்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றாலும் கூட – கிராமந்திர தொழிலாளர்களிலும் இதே போன்ற ***சிறுபான்மையினர்*** மட்டும் தான் நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும் பின்பற்றுகிறார்கள் என்றாலும் கூட – ஜெர்மானிய பாராளுமன்ற முறை அரசியல் வகையில் ***இன்னமும் காலாவதியாகிவிடவில்லை*** என்பதையே ***சந்தேகத்திற்கு இடமின்றிக்*** காட்டுகிறது.''

''இத்தகைய நாடுகளில் (பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகாத நாடுகளில்) புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி அதன் சொந்த வர்க்கத்தின் பிற்பட்ட பகுதியோரைப் போதம் பெறச் செய்யும் பொருட்டும், அடக்கி ஒடுக்கப்படும் வளர்ச்சி இல்லாத, அறியாமையில் வீழ்ந்த கிராமந்திர வெகுஜனங்களைத் தட்டி எழுப்பி போதம் பெறச் செய்யும் பொருட்டும், பாராளுமன்றத் தேர்தல்களிலும் பாராளுமன்ற அரங்கில் நடைபெறும் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்வது ***இக்கட்சியின் கடமையாகும்*** என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. முதலாளித்துவப் பாராளுமன்றங்களையும் இதரவகை பிற்போக்கு நிறுவனங்களையும் அகற்றிடும் பலம் உங்களிடம் இல்லாதவரை அவற்றில் **நீங்கள் வேலை செய்தே ஆக வேண்டும்.**'' (LCW31. P.58-59)



சிறுபான்மையோர் புறக்கணித்தால் அல்ல, சிறுபான்மையோர் பாராளுமன்ற முறை மீது நம்பிக்கை கொண்டிருந்தால் கூட அந் நாடுகளில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகவில்லை என்பதும், அந்நாடுகளில் பாராளுமன்ற நிறுவனங்களை அகற்றிடும் பலத்தைப் பாட்டாளி வர்க்கக்கட்சி பெறும் வரை அவற்றில் இருந்து கம்யூனிஸ்டுகள் வேலை செய்தே ஆக வேண்டும் என்பதும் லெனின் கருத்தாகும் என்பது தெளிவு.

ஆனால் வேறு சிலர் பாராளுமன்ற முறை நிலவும் போதே அதற்கு வெளியில் சோவியத் வடிவிலான மக்களின் அரசியல் அதிகார அமைப்புகள் நிறுவப்பட்டிருக்குமானால் அங்கு பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகிவிட்டதாகக் கருதமுடியும் என்றும், அங்கு தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால் இதுவும் லெனினியக் கருத்துகளுக்கு விரோதமானதாகும். ''கம்யூனிஸ்டுகளுக்கு பாராளுமன்றம் ஒரு கிளர்ச்சி மேடையே, ஆஸ்திரியாவில் உள்ள எங்களுக்கு' தொழிலாளர்களுடைய சோவியத்துகள் ஒரு கிளர்ச்சி மேடையாக இருக்கிறது. எனவே முதலாளித்துவ தேர்தல்களில் நாங்கள் பங்கெடுக்க மறுக்கிறோம். ஜெர்மனியில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள் இல்லாததால் அவர்கள் மாறான செயலுத்தியைக் கையாளுகிறார்கள்'' என்று ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகள் தமது புறக்கணிப்புத் தீர்மானத்தில் கூறியபோது லெனின் அதை மறுத்துரைத்து எழுதியது இங்கு கவனிக்கத் தக்கதாகும். அவர் எழுதுகிறார்.

''இந்த வாதம் தவறானதாகும் எனக் கருதுகிறேன். முதலாளித்துவப் பாராளுமன்றத்தை நம்மால் கலைக்க முடியாதவரை அதை எதிர்த்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வேலை செய்ய வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளிகள் பயன்படுத்துகின்ற முதலாளித்துவ ஜனநாயகக் கருவிகளை உழைக்கும் மக்களின் (பாட்டாளிகள் மட்டுமின்றி அரைப் பாட்டாளிகளும் சிறு விவசாயிகளும்) கணிசமான தொகையினர் நம்புகிறவரை

படிப்பகம்

www.padippkam.com



தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதியினர் குறிப்பாக பாட்டாளி வர்க்கமல்லாத உழைப்பாளி மக்கள் அதி முக்கியமானதாகவும் செல்வாக்குள்ளதாகவும் கருதுகிற **அதே மேடையிலிருந்து** இந்த வஞ்சகத்தை நாம் விளக்க வேண்டும்''.

மேலும் கூறுகிறார் : ''கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றித் தேர்தல்கள் – முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகத் **தங்களுடைய** சோவியத்துகளுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ளும் தேர்தல்கள் – நடத்த முடியாதிருக்கிற வரை, முதலாளித்துவ வர்க்கம் அரசு அதிகாரத்தை வகித்து மக்களின் பல்வேறு வர்க்கங்களைத் தேர்தல்களில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிற வரை, அந்த தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் மட்டுமின்றி எல்லா உழைப்பாளி மக்களிடையேயும் கிளர்ச்சி செய்யும் பொருட்டு நாம் பங்கெடுப்பது நமது கடமையாகும்''(LCW31.P.68)

எனவே பாராளுமன்றத்துக்கு வெளியே மக்களின் புரட்சிகரமான அதிகார அமைப்பான சோவியத்துகளை நிறுவியிருந்தால் அங்கு அரசியல் வகையிலும் பாராளுமன்றமுறை காலாவதி ஆகிவிட்டதாகக் கூறமுடியாது என்றும், மாறாக முதலாளித்துவப் பாராளுமன்றங்களுக்கு எதிராக உழைக்கும் மக்கள் மட்டுமே பங்குகொள்ளும் தேர்தலை நடத்தும் பலத்தையும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் பலத்தையும் நாம் பெற்றிருக்க வேண்டும் என்றும் லெனின் கூறியிருப்பதைக் காணமுடியும். ரசியாவில் புரட்சிக்குப் பின்னும் பாராளுமன்றத்தில் போல்ஷ்விக் கட்சி பங்குகொண்ட நடவடிக்கைகள் இதற்கு உதாரணமாகும். அரசியல் வகையில் பாராளுமன்றமுறை ரசியாவில் காலாவதியாகிவிட்டது என்று கருத வேறு எங்கும்விட அதிக வாய்ப்பிருந்தும் பாராளுமன்ற முறையை உண்மையிலேயே அரசியல் வகையில் காலாவதியாகச் செய்வதற்கு, கலைப்பதற்கு போல்ஷ்விக் கட்சி அதில் பங்குகொண்டது என்பது வரலாற்று உண்மையாகும்.

மேலும் வேறு சிலர் கருதுவது போல் பாராளுமன்ற முறை நீண்ட காலம் இருந்து வந்திருந்தால் அது அரசியல் வகையில் காலாவதியாகிவிட்டது என்ற கருத்தும் தவறானதேயாகும்.



பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகிவிட்டது என்ற பிரச்சினையைப் பற்றி விவாதிக்கும் போது லெனின் மேலும் கூறுகிறார். ''இங்கு எழும் கேள்வி முதலாளித்துவப் பாராளுமன்றங்கள் அதிக காலம் இருந்துள்ளனவா அல்லது சிறிது காலம்தான் உள்ளனவா என்பதல்ல. பெரும் திரளான உழைப்பாளி மக்கள் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும் முதலாளித்துவ ஜனநாயகப் பாராளுமன்றத்தைக் கலைக்கவும், (அல்லது கலைக்கப்பட அனுமதிக்கவும்) எந்த அளவுக்கு (சித்தாந்த வகையிலும், அரசியல் வகையிலும், நடைமுறையிலும்) தயாராய் இருக்கிறார்கள் என்பதே இங்கு எழும் கேள்வி.''

மேற்கண்ட மேற்கோள்களிலிருந்து, பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதியாகி விட்டது என்ற முடிவுக்கு வர கீழ்க்கண்ட காரணங்கள் தேவை என்பதை உணர முடியும்.

1. பாராளுமன்றங்களை அகற்றிடும் பலத்தை பாட்டாளி வர்க்கக்கட்சி பெற்றிருக்க வேண்டும்.
2. பாராளுமன்றத்துக்கு வெளியே சோவியத் அமைப்புகள் இருக்க வேண்டும்.
3. பெருந்திரளான உழைப்பாளி மக்கள் பாராளுமன்றத்தைக் கலைக்கவும், அரசியல், சித்தாந்த வகையிலும், நடைமுறையிலும் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும் தயாராய் இருக்க வேண்டும்.
4. கம்யூனிஸ்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி சோவியத்துகளுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்குகொள்ளும் தேர்தல்களை நடத்த முடிகின்ற நிலைமை இருக்க வேண்டும்.

இந்நிலைமைகள் இல்லாவிட்டால், கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் **ஓரளவுக்கு பெரிய அளவிலான சிறுபான்மை உழைக்கும் மக்கள்** பாராளுமன்ற முறை மீது நம்பிக்கை கொண்டிருந்தால் கூட அந்த நாட்டில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகவில்லை என நிச்சயமாகத் தீர்மானிக்க முடியும்.

☆

படிப்பகம்

www.padippkam.com

# 3

# கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்குகொள்வதன் நோக்கமும் முறையும்.

பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகாத நாடுகளில் பாராளுமன்றத் தேர்தல்களிலும், பாராளுமன்ற அரங்கில் நடைபெறும் போராட்டங்களிலும் பங்கெடுத்துக் கொள்வது பாட்டாளி வர்க்கக்கட்சியின் கடமையாகும். அவ்வாறு பங்குகொள்வதன் மூலமே பிற்பட்ட நிலையில் உள்ள வெகுஜனப் பகுதியோருக்கு பாராளு மன்றத்தைக் கலைப்பதன் அவசியத்தை நடைமுறையில் நிரூபிக்கவும், பாராளுமன்றத்தை வெற்றிகரமாய் கலைக்கவும், மிகப் பெருந்திரளான வெகுஜனங்கள் சோவியத் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவும் பாட்டாளி வர்க்கக் கட்சி வகை செய்ய முடியும்.

முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதன் நோக்கம் இதுதான். இதற்காகவே அவர்கள் முதலாளித் துவப் பாராளுமன்றத்தில் நுழைகிறார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அங்கே அவர்கள் என்ன செய்வார்கள்?

1. தொழிலாளர்களையும், உழைப்பாளி மக்களையும் வஞ்சிக்கும் ஊழல் மலிந்த இந்த முதலாளித்துவ நிறுவனங்களின் வஞ்சகத்தை அதே பாராளுமன்ற மேடையிலிருந்து அம்பலப்படுத்துவார்கள்.
2. ஜனநாயகம் பற்றி வாய்ச்சொற்களைப் பயன்படுத்தி நிதி மோசடிகளையும், எல்லாவிதமான வஞ்சகங்களையும் மூடி மறைப்பதற்கும், தொழிலாளிகளை வஞ்சிப்பதற்கும் உரிய ஒரு சாதனமாக இருந்து வரும் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை அதே நிறுவனத்தில் இருந்து அம்பலப்படுத்துவார்கள்.
3. தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகள் பக்கம் ஓடிய துரோகக் கும்பல்கள் புரியும் ஒவ்வொரு காரியத்தையும் அம்பலப் படுத்துவார்கள்.



4. முதலாளிய கட்சிகளுக்குள்ளும், குழுக்களுக்குள்ளும் உள்ள உறவுகள் மிக அடிக்கடி தம்மை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்திக் கொள்கின்றன ; சமுதாயத்தில் உள்ள எல்லா வர்க்கங்களுக்கும் இடையே நிலவும் உறவுகள் அவற்றில் பிரதிபலிக்கின்றன. எனவே முதலாளித்துவப் பாராளுமன்றத்திலே அதனுள்ளிருந்தே கட்சிகள்பால் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் போக்கு, பண்ணைத் தொழிலாளிகள்பால் நிலப்பிரபுக்கள் கடைப்பிடிக்கும் போக்கு, ஏழை விவசாயிகள்பால் பணக்கார விவசாயிகள் கடைப்பிடிக்கும் போக்கு, அலுவலக ஊழியர்பால், சிறு உடைமையாளர்கள்பால் பெரு முதலாளிகள் கடைப்பிடிக்கும் போக்கு இவை போன்ற அனைத்துப் போக்குகளின் உண்மை களையும் மக்களுக்கு விளக்குவார்கள்.**(LCW31P.268-269)**

முதலாளித்துவப் பாராளுமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தி அதன் உள்நுழையும் கம்யூனிஸ்டுகள் அதை எப்படி சாதிப்பார்கள்? அதற்குக் கட்சி முழுவதும் பகிரங்கமாக செயல்பட வேண்டுமா? கட்சி முழுவதும் பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுக்குமா? நிச்சயமாக இல்லை. மாறாக பாராளுமன்றத்தில் செயல்படுவதற்கென்று தனியாக ஒருகட்சிக் குழு அமைக்கப்படும். அதுவே செயல்படும். இத்தகைய குழுக்களை அமைப்பது கடினமானதுதான் எனினும்அதை செய்தே ஆகவேண்டும் என்கிறார் லெனின்.

சில நாடுகளில் பாராளுமன்றத்தில் புரட்சிகரமான பாராளுமன்றக் குழுவினைத் தோற்றுவிப்பது மிகமிகக் கடினமான தாக இருக்கலாம். ஆனால் பிற்போக்குப் பாராளுமன்றங்களைப் புரட்சிகர நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் கடுமையான பணியைத் 'தட்டிக்கழிப்பதன்' மூலம் நிலைமையை சமாளிக்க முயலக்கூடாது. ஒரு புதிய சமுதாயம் அமைக்க விரும்பும் கம்யூனிஸ்டுகள் பற்றுறுதியும் திடநம்பிக்கையும் கொண்ட வீரமிக்க கம்யூனிஸ்டுகளாலான சிறந்த பாராளுமன்றக் குழு ஒன்றினைப் பிற்போக்குப் பாராளுமன்றத்தில் நிறுவிக் கொள்வதில் உள்ள சிரமங்களைக் கண்டு அஞ்சக்கூடாது என்றும் லெனின் போதிக்கிறார்.

இத்தகைய குழுக்களின் பணி பற்றியும் அதன் மீது கட்சியின் கட்டுப்பாடு குறித்தும் 'கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது

www.padippkam.com



காங்கிரசினுடைய அடிப்படைப் பணிகள் குறித்த ஆய்வுரைகளில்' லெனின் குறிப்பிடுகிறார்.

''கட்சி உறுப்பினர்களால் ஆகிய பாராளுமன்றக் குழுவின் மீது கட்சி விசேசமான கருத்தும், கவனமும் செலுத்த வேண்டும். இக்குழுவினர் முதலாளித்துவ பிரதிநிதித்துவ உறுப்புகளில் (முக்கியமாய் தேசிய மற்றும் ஸ்தல, நகர இன்னபிற பிரதிநிதித்துவ உறுப்புகளில்) உறுப்பினர்களாய் இருப்பவர்கள். இந்த பிரதிநிதித்துவ மன்றத்திற்கு பிற்பட்ட குட்டி முதலாளிய தப்பெண்ணங்களில் ஊறிப்போன உழைப்பாளி மக்களில் பெரும்பகுதியினர் மதிப்பளிக்கின்றனர். எனவே வெகுஜனங்களிடம் பிரச்சாரமும் கிளர்ச்சியும் நிறுவன ஒழுங்கமைப்பும் செய்யவும் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை சோவியத்துகளின் தேசிய காங்கிரசைக் கொண்டு கலைத்திடுவது எவ்வளவு நியாயமானது என்பதை அவர்களுக்கு விளக்கவும் இந்தப் பிரதிநிதித்துவ மன்றத்தைப் பயன்படுத்துவது கம்யூனிஸ்டுகளுக்கு இன்றியமையாதத் தேவையாகி விடுகிறது. மறுபுறத்தில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரலாறு அனைத்திலுமே முக்கியமாய் முன்னேறிய நாடுகளில் முன்பின் கண்டறியா மோசடிக்கும், நிதித்துறையிலும் அரசியல் துறையிலும் மக்களை ஏய்க்கவும், பதவி வேட்டைக்கும், வஞ்சத்துக்கும், மக்களை ஒடுக்கவுமான மிகப்பெரிய அல்லது மிகப்பெரியவற்றில் ஒன்றான அரங்காய் பாராளுமன்றம் இருக்கிறது. ஆகவே கம்யூனிஸ்டு கட்சிகளும் மூன்றாவது அகிலத்தில் இணைந்திருக்கும் எல்லாக் கட்சிகளும் தமது பாராளுமன்றக் குழுக்கள் குறித்து மிகவும் கண்டிப்பான போக்கை அனுசரிக்க வேண்டும். இக்குழுக்கள் இக்கட்சிகளின் மத்திய கமிட்டிகளுடைய முழுக் கண்காணிப்புக்கும் மேற்பார்வைக்கும் உட்படுத்தப்படுதல் பிரதானமாய் புரட்சிகரத் தொழிலாளர்களால் ஆனதாய் இருத்தல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுடைய சொற்பொழிவுகள் கண்டிப்பான கம்யூனிஸ்டு கண்ணோட்டத்திலிருந்து கட்சிப் பத்திரிக்கைகளிலும் கட்சிக் கூட்டங்களிலும் கவனமாகப் பகுத்தாராயப்பட வேண்டும். இரண்டாவது அகிலத்தின் மனப்பான்மையை வெளியிடுவோர் பாராளுமன்றக் குழுக்களிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். இவ்வாறு பலவும் செய்யப்படுதல் வேண்டும்.'' (LCW 31. P. 192-193)



பாராளுமன்றக் குழுக்களின் செயற்பாடுகள் புரட்சிகர இயக்கத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு அதன் மீது கட்சியின் நேரடிக் கட்டுப்பாடும் கண்காணிப்பும் தேவையாகும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்சி பாராளுமன்ற கோஷ்டியின் தொங்கு சதையாக மாறிவிடும் அபாயம் எப்போதும் இருக்கிறது. இத்தகைய பாராளுமன்றக் குழுக்களை உருவாக்கி அவற்றைக் கட்டுப்பாட்டோடு இயக்கும் பலம் கட்சிக்கு இல்லையென்றால் அந்த பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத்தில் பங்கு கொள்வதன் நோக்கம் அதிக இடங்கள் பெறுவதல்ல. மாறாக மக்களின் அரசியல் உணர்வை உயர்த்துவது மட்டுமே. பாராளுமன்றத்தில் பெறும் இடங்கள் வெகுஜனங்களுடைய அரசியல் உணர்வை எந்த அளவுக்கு உயர்த்த உதவுகின்றனவோ அந்த அளவுக்கே முக்கிய மானவை. வெகுஜனங்களை மேலும் உயர்வான அரசியல் உணர்வு நிலைக்கு உயர்த்துவதற்கும் அவர்களை ஒழுங்கமைப்பதற்கும் மட்டுமே பாராளுமன்ற இடங்கள் முக்கியத்துவமுடையவை; இதற்காக மட்டுமே – இதை சாதிக்க எந்த அளவுக்கு அவை உதவுகின்றனவோ அந்த அளவுக்கு மட்டுமே – பாராளுமன்ற இடங்கள் தேர்தல் இயக்கங்கள் அனைத்தும் முக்கியத்துவம் உடையவையாகும்.

சுருங்கச் சொன்னால் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகாத நாடுகளில் பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும், பாராளுமன்றங்களின் வேலையிலும் பங்கெடுத்துக் கொள்வது கம்யூனிஸ்டு அகிலம் கருதுவது போல் ஒரு 'பிழையற்ற செயலுத்தி' ஆகும்.

படிப்பகம்

www.padippkam.com

# 4

# கம்யூனிஸ்டுகளும் பாராளுமன்றப் புறக்கணிப்பும்

பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகாத நிலையில் – பாராளுமன்றத்தைக் கலைக்கவும் சோவியத் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவும் மக்கள் தயாராய் இல்லாத நிலையில் – கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத் தேர்தல்களிலும், பாராளுமன்ற அரங்குகளில் நடைபெறும் போராட்டங்களிலும் பங்குகொள்ள வேண்டிய அவசியம் பற்றியும், பாராளுமன்றக் கட்சிக்குழு மீது கட்சியின் கட்டுப்பாடுகள் பற்றியும் நாம் பேசிக் கொண்டிருப்பதால் இந்நாடுகளில் எந்தக் காலத்திலும் பாராளுமன்றப் புறக்கணிப்பே இருக்காது என்று லெனினியம் கருதுவதாக அர்த்தம் இல்லை. ''புரட்சிப் பேரலையால் ஆதரிக்கப்படும் நிலையில்'', ''புதிய தாக்குதலைத் தொடுப்பதற்கு இன்னொரு சாதனமாக'' இருக்கும்போது புறக்கணிப்பை லெனினியம் ஆதரிக்கிறது. ஆனால் எங்குமே நிரந்தரப் புறக்கணிப்பை லெனினியம் ஆதரிக்கவில்லை.

போல்ஷ்விக்குகளின் வரலாற்றைத் தொகுத்துரைக்கும்போது லெனின் எப்போதெல்லாம் புறக்கணிப்பது சரியானது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். 1905இல் டூமாவை போல்ஷ்விக்குகள் பகிஷ்கரித்ததைப் பற்றி அவர் கூறுகிறார்.

''இந்த பாராளுமன்றம் (டூமா) 1905 அக்டோபரில் மூண்ட புரட்சியால் துடைத்தெறியப்பட்டுவிட்டது. அக்காலத்தில் புறக் கணிப்பே பிழையற்றதாக இருந்தது. ***பிற்போக்கான பாராளு மன்றங்களில் பங்கு கொள்ளாது இருப்பது பொதுவாக சரியானதே என்பதல்ல காரணம்.*** எதார்த்த நிலைமையை நாங்கள் பிழையின்றி மதிப்பிட்டோம் என்பதே காரணம். வெகுஜன வேலைநிறுத்தங்கள் முதலில் அரசியல் வேலைநிறுத்தமாகவும், முடிவில் ஓர் எழுச்சியாகவும் வேகமாய் வளர்ச்சியுற்று வந்தன என்பதே அப்போதிருந்த எதார்த்த நிலைமை. தவிரவும் முதலாவது



பிரதிநிதித்துவசபை கூட்டப்படுவதை ஜாரின் கையில் விட்டுவிடுவதா, அல்லது அதனைப் பழைய ஆட்சியிடமிருந்து பறிப்பதற்கு முயற்சி செய்வதா என்பதே அக்காலத்திய போராட்டத்தின் மையப் பிரச்சினையாக இருந்தது. **எதார்த்த நிலைமை இதையொத்த தாக இருக்கும் என்ற நிச்சயம் இல்லாதபோதும் இருக்க முடியாத போதும் இதையொத்த ஒரு போக்கும் இதே வளர்ச்சி வேகமும் இருக்குமென்ற நிச்சயமில்லாதபோதும் இருக்க முடியாத போதும் புறக்கணிப்பு சரியானதல்ல.**'' (அழுத்தம் எமது)(LCW31.P.35)

அதாவது 1905 புரட்சியின்போது புரட்சிப் பேரெழுச்சி ஜார் எதேச்சதிகாரத்தை முற்றாகத் துடைத்தெறிவதை நோக்கி – ஒரு புரட்சி அரசை நிறுவுவதை நோக்கி – முன்னேறிக்கொண்டிருந்தது. அப்போது டூமாவை அறிவித்ததன் மூலம் புரட்சிப் பேரெழுச்சியை திசைதிருப்பி விடுவதற்கு ஜார் திட்டமிட்டான். ஜார் திட்டத்தை முறியடித்து புரட்சிப் பேரெழுச்சியை ஒரு புரட்சிகர அரசை நிறுவுவதை நோக்கி இட்டுச்செல்வதற்கே டூமா புறக்கணிப்பு முன்வைக்கப் பட்டது. பின்வந்த ஆண்டுகளில் இத்தகைய நிலைமைகள் இல்லை. எனவே 1906, 1907, 1908 ஆண்டுகளில் புறக்கணிப்பை முன் வைத்தது தவறு என லெனின் கூறுகிறார். 1905 ஐ ஒத்த நிலைமைகள் இருக்கும்போது புறக்கணிப்பு அவசியம் எனக் கூறுகிறார்.

மேலும் கட்சி பலவீனமாய் இருக்கும்போது, முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் பற்றுறுதியும், திடநம்பிக்கையும் கொண்ட கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களைக் கொண்ட பாராளுமன்ற கட்சிக் குழுவை கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் கட்டி இயக்கும் அளவுக்கான பலம் பெற்றிராத போது ''பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும் பாராளுமன்றங்களின் வேலைகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் பிழையற்ற செயலுத்தி'' என்ற லெனினியக் கோட்பாட்டை வெற்றிகரமாக செயல்படுத்த முடியுமா? இத்தகைய பலவீனமான நிலையில் புரட்சிகரக் கட்சியானது பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வது அதன் தொங்கு சதையாக மாறிவிடும் அபாயம் கொண்டதாகும். எனவே புரட்சிகரக் கட்சி தனது பலவீனத்தை மனம் திறந்து மக்களிடம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். இவ்வாறு மக்களிடம் மனம்திறந்து பகிரங்கமாக ஒப்புக்கொண்டால் மக்கள் புரட்சியாளரின் ஆதரவாளராய் இருப்பதற்கு பதில் எதிராளிகளாக பாராளுமன்ற முறையின் ஆதரவாளர்களாக மாறுவர்

படிப்பகம்

www.padippakam.com



என்ற அபாயமும் இருக்கிறது. ஆனால் அதுதான் உண்மையாக இருக்கிறது. புரட்சிகரக் கட்சிக் குழுவைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் பாராளுமன்றத்தில் இயக்கும் பலம் பெறாத கட்சி தனது பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக மனம் திறந்து ஒப்புக் கொள்வதுடன் கூடவே பாராளுமன்றத்துக்கு வெளியிலிருந்து அதை அம்பலப்படுத்தும் பணியைச் செய்வதும், தனது எல்லா உறுப்பினர்களையும் (பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் உட்பட) தனது கட்சிக் கட்டுப்பாட்டிற்கு கீழ்ப் படிந்து நடக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடியதான உண்மையான கட்டுப்பாடுள்ள பலம் வாய்ந்த கட்சியைக் கட்டுவதை பிரதான பணியாகக் கொள்வதும் அவசியமாகும். அவ்வாறின்றி பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கான தயாரிப்புகளைச் செய்வது சாத்தியமில்லை.

இத்தாலியக் கம்யூனிஸ்டுகள் (தோழர் பொர்டிகோவும் அவருடைய ஆதரவாளர்களும்) பாராளுமன்றப் புறக்கணிப்பை ஆதரித்த போது அதற்கு பதிலளித்து கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் – 1920, ஆகஸ்டு 2) லெனின் ஆற்றிய சொற்பொழிவு இவ்விசயத்தை தெளிவுபடுத்த உதவும். அவர் கூறுகிறார்:

''உண்மைகளை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். பாராளுமன்றமானது வர்க்கப் போராட்ட அரங்காய் இருந்து வருகிறது. தோழர் பொர்டிகோவும், அவருடைய கருத்தோட்டங்களை ஏற்றுக் கொண்டவர்களும் வெகுஜனங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்டு குழு ஒன்று செயல்படுவது சாத்தியமே என்பதற்கு ஜெர்மனி இந்த உதாரணத்தைக் கொடுத்துள்ளது. எனவே, 'பலம் வாய்ந்த வலுவான ஒழுங்கமைப்பு கொண்ட ஒரு கட்சியைக் கட்டுவதில் நாங்கள் பலவீனமாய் இருக்கிறோம்' என்று நீங்கள் வெகுஜனங்களிடம் பகிரங்கமாய், மனம் திறந்து சொல்ல வேண்டும், அதுதான் உண்மை, அதைத்தான் சொல்ல வேண்டும். ஆனால் வெகுஜனங்களிடம் சென்று உங்கள் பலவீனத்தை ஒப்புக் கொண்டால், அவர்கள் உங்கள் ஆதரவாளர்களாய் இருக்க மாட்டார்கள். எதிராளிகளாகவே இருப்பார்கள், அவர்கள் பாராளுமன்ற முறையின் ஆதரவாளர்களாகி விடுவார்கள். 'தொழிலாளத் தோழர்களே, நாங்கள் மிகவும் பலவீனமாய் இருக்கிறோம், பாராளுமன்றத்தில் உள்ள கட்சி உறுப்பினர்களைக் கட்சிக்குக் கீழ்ப்படிய வைக்கவல்ல கட்டுப்பாடுள்ள கட்சியினை எங்களால் கட்ட முடியவில்லை' என்று சொல்வீர்களாயின் தொழிலாளர்கள் உங்களை விட்டு துறந்து விடுவார்கள். ''பலமில்லாத இந்த சோணிகளைக் கொண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எப்படி நிறுவுவது'' என்றுதான் அவர்கள் தம்மைத் தாமே கேட்டுக் கொள்வார்கள்.



மேலும் அவர் கூறுகிறார்: ''தனது எல்லா உறுப்பினர்களையும் தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப் படிந்து நடக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடியதான உண்மையான கட்டுப்பாடு வாய்ந்த கட்சியைக் கட்ட நீங்கள் தொழிலாளர்களை தயார் செய்யாவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு உங்களால் ஒரு நாளும் தயார் செய்ய முடியாது. பல புதிய கம்யூனிஸ்டு கட்சிகள் பாராளுமன்றங்களில் பங்குகொள் வதை நிராகரிப்பதானது அவற்றின் பலவீனத்திலிருந்து எழும் போக்கேயாகும். இதை நீங்கள் ஒப்புக் கொள்ள விரும்பாததற்கும் உங்களுடைய பலவீனம்தான் காரணம் என நினைக்கிறேன். உண்மையான புரட்சிகர தொழிலாளர்களில் மிகப் பெரும்பாலோர் எங்களைத் தான் பின்பற்றுவர், உங்களுடைய பாராளுமன்ற எதிர்ப்பு உரைகளை எதிர்த்துப் பேசுவர் என்பதில் எனக்கு சந்தேகமில்லை'' **(LCW 31. P. 256)**

புரட்சிகரக் கட்சிகள் தமது பலவீனத்தை மக்களிடம் ஒப்புக் கொள்ள வேண்டும். அதனால் மக்கள் தம்மை எதிராளிகளாகக் கருதினாலும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதுதான் உண்மை. தமது பலவீனத்தைக் களைந்திட பலம் வாய்ந்த ஸ்தாபனக் கட்டுப்பாடு மிக்க கட்சியைக் கட்ட வேண்டும். பாராளுமன்ற கட்சிக் குழுவையும் கட்டுப்படுத்தும் மெய்யான கட்டுப்பாடு மிக்க கட்சியாக அது இருக்க வேண்டும். அவ்வாறின்றி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைக் கட்டியமைப்பது சாத்தியமில்லை. பெரும்பாலான கட்சிகள் புறக்கணிப்புத் தீர்மானங்கள் எடுப்பதற்குக் காரணம் அவற்றின் பலவீனமே என்பது லெனின் கருத்தாகும்.

எனவே ஒரு பலவீனமான புரட்சிகரக் கட்சி தமது பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக மனம் திறந்து ஒப்புக் கொண்டு தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட வேண்டும்; பலம் வாய்ந்த கட்டுப்பாடான கட்சியைக் கட்டும் பணியை முதற் பணியாகக் கொண்டு தமது பலவீனத்தைக் களைய வேண்டும் என்பது தெளிவு. அவ்வாறின்றி பரந்துபட்ட மக்களை புரட்சிகரக் கட்சியின் பின் அணிதிரட்டுவதோ புரட்சிகர அதிகாரத்திற்கு தயார்படுத்துவதோ சாத்தியமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



தொகுப்பாகச் சொன்னால் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகாத நாடுகளில் ''பாராளுமன்றத் தேர்தல்களிலும் பாராளுமன்ற நடவடிக்கைகளிலும் பங்கேற்கும் பிழையற்ற செயலுத்தியை '' உயர்த்திப் பிடிக்கும் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் கீழ்க்கண்ட மூன்று நிலைமைகளில் புறக்கணிப்பை மேற் கொள்ளுகிறார்கள்.

1. புரட்சிகர மக்களின் எழுச்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்று வதை நோக்கி வீறு கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கும் போது அவற்றை திசை திருப்பி விடுவதற்கான சாதனமாக ஆளும் வர்க்கங்களால் முன் வைக்கப்படும் பாராளு மன்றங்களையும், தேர்தல்களையும் புறக்கணிக்கிறார்கள்.

2. பாட்டாளி வர்க்கக் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, முதலாளி வர்க்கத்தை எதிர்த்து, தங்களுடைய சோவியத்து களுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கு கொள்ளும் தேர்தலை நடத்த முடிகிற போது, பெருந்திரளான வெகுஜனங்கள் சோவியத் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு பாராளுமன்றத்தைக் கலைக்கத் தயாராய் இருக்கும் போது – அதாவது பாராளு மன்றத்தைக் கலைக்கும் பலத்தை கம்யூனிஸ்டுகள் பெறும் போது (அப்போது பாராளுமன்றம் அரசியல் வகையிலும் காலாவதியாகிறது) கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றங்களையும், தேர்தல்களையும் புறக்கணிக்கிறார்கள்.

3. பாட்டாளி வர்க்கக் கட்சி முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் செயல்படுவதற்கான பற்றுறுதியும், திடநம்பிக்கையும் கொண்ட சிறந்த புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளாலான பாராளுமன்றக் கட்சிக் குழுவைத் தனது கட்டுப் பாட்டின் கீழ்க் கட்டி இயக்கும் ஸ்தாபன பலம் பெற்றிராத போது, பலம் வாய்ந்த, கட்டுப் பாடான கட்சியைக் கட்டுவதை முன்னிறுத்தி பாராளுமன்றத்தையும் தேர்தலையும் புறக்கணிக்கிறார்கள். தமது பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக மனம் திறந்து ஒப்புக் கொள்கிறார்கள்.

இதற்கு மாறாக இந்நிலைமைகள் இல்லாத போதும், நிரந்தரமாகவும் புறக்கணிப்புத் தீர்மானங்களை மேற்கொள்வது புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளின் முறையல்ல. நிரந்தரப் புறக்கணிப்பை எந்த நிலைமையிலும் லெனினியம் ஏற்றுக் கொள்ளவில்லை. ☆

# 5

# முதலாளியப் பாராளுமன்றங்களின்பால் திரிபுவாதிகள் மற்றும் புறக்கணிப்புவாதிகளின் அணுகுமுறை

திரிபுவாதிகள் மற்றும் புறக்கணிப்புவாதிகளின் அணுகுமுறை கம்யூனிஸ்டுகளின் அணுகு முறையிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டுள்ளது. பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியாகி விட்டது என்பதை அதன் உண்மையான அர்த்தத்தில் திரிபுவாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை. அதனால்

1. பாராளுமன்றத்தை வெறும் பிரச்சார மேடையாக மட்டும் அவர்கள் பார்ப்பதில்லை. மாறாக சட்டம் இயற்றுவதற்கான அதிகார அமைப்பாகவும், ஆளும் வர்க்கங்களைக் கட்டுப் படுத்துவதற்கான கடிவாளமாகவும் கருதுகிறார்கள்.

2. பாராளுமன்றப் பங்கேற்பை மக்களுடைய அரசியல் உணர்வை வளர்ப்பதற்கான சாதனமாகப் பார்ப்பதில்லை. மாறாக அதிக சீட்டுகள் பெற்று மந்திரி சபையை அமைப்பதை நோக்கமாகக் கொள்கிறார்கள்.

3. பாராளுமன்றத்துக்கு வெளியே மக்களின் அதிகாரத்திற்குரிய அமைப்புக்களை நிறுவுவதற்காக வேலை செய்வதில்லை, மாறாக பாராளுமன்ற வேலைகளையும், தொழிற் சங்க வேலைகளையும் பிரதானமாகக் கொண்டு அதன் தொங்கு சதையாகவும் துணைக் கருவியாகவும் கட்சியை மாற்றுகிறார்கள்.

4. மந்திரி சபையைக் கைப்பற்றுவது முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் நிலை நாட்டுவது என்பதாகக் கருதுவதில்லை, மாறாக அதை பாட்டாளி வர்க்க் ஆட்சி என வர்ணிக்கிறார்கள்.

5. பாராளுமன்ற முறையை அரசியல் வகையில் காலாவதியாகச் செய்வதற்கு – பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும், சோவியத்

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கும் – வேலை செய்வதற்குப் பதிலாக ஆளும் வர்க்கங்களிடமிருந்து பாராளுமன்றத்திற்கு ஆபத்து எனக் கூறி அதை காக்கும் காவலர்களாக வேலை செய்கிறார்கள்.

6. சுருங்கச் சொன்னால் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதல்ல, முதலாளிய ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதே இவர்களுடைய செயல்திட்டங்களின் நோக்கமாக இருக்கிறது. புரட்சி பற்றியும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றியும் இவர்கள் பேசுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான வெறும் வாய்ப்பந்தல்களாகவே இருக்கின்றன. பாராளுமன்றத்துக் குள்ளும், வெளியிலும் வேலை செய்வதாகக் கூறுவது சோவியத் பாணியிலான மக்கள் அரசியல் அதிகார நிறுவனங்களை அமைப்பதற்காக அல்ல; மாறாக பாராளுமன்றத்தில் அதிக சீட்டுக்கள் பெறுவதற்கும் மந்திரிசபையைப் பிடிப்பதற்கு மேயாகும்.

எனவே இயல்பாகவே திரிபுவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொண்டாலும் இரண்டுக்கும் இடையே அதன் பணிகள், நோக்கங்களுக்கிடையே அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது.

திரிபுவாதிகளுக்கு கம்யூனிஸ்ட்கட்சி என்பது பாராளுமன்ற தேர்தல் எந்திரத்தின் ஒரு தொங்குசதை, தொழிற்சங்கத்தின் தயவில் உள்ள ஒரு துணைக்கருவி. ஆனால் கம்யூனிஸ்டுகளுக்கு கட்சி என்பது தொழிற்சங்கங்களிலிருந்து பாராளுமன்றக் குழுக்கள் வரை இதர எல்லா வகை பாட்டாளிவர்க்க அமைப்புகளையும் வழிநடத்தும் வேலையைச் செய்வதற்கான பாட்டாளிவர்க்கத்தின் மிக உயர்ந்த வர்க்க அமைப்பாகும்.

திரிபுவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் பாராளுமன்றத்தில் பங்குகொள்வது தோற்றத்தில் ஒன்றாக இருப்பினும் அதன் வேறுபாட்டைப் பற்றி லெனின் தெளிவாகக் கூறுகிறார்.

''சட்டசபை நடவடிக்கைகளை ஏற்று அதில் பங்குகொள்வது, சட்டசபை அங்கத்தினராய் இருப்பதைப் பயன்படுத்துவது என்பதில் பலவகைகள் இருக்கின்றன. ஒரு சிலர் அரசாங்கத்தாரிடம் நல்ல பெயர் வாங்கி வாலைக் குழைத்து சலுகை பெறுவதற்கு சட்டசபை அரங்கினைப் பயன்படுத்துகின்றனர். அல்லது சிகட்சே



கும்பல் செய்தது போல் அனைத்து விசயங்களிலும் தம் கையை கழுவி விட்டு விடுவதற்குப் பயன்படுத்துகின்றனர். மற்றவர்கள் கடைசி வரையில் தாம் புரட்சிகரமாய் இருப்பதற்கான மிகக் கடினமான சூழ்நிலையிலும் சோசலிஸ்டுகள் என்ற முறையிலும் சர்வதேசியவாதிகள் என்ற முறையிலும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுவதற்காக சட்டசபை அங்கத்தினர் பதவியை, முறையைப் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலரது சட்டசபை பணிகள் அவர்களுக்கு அமைச்சரவைப் பதவியைத் தருகின்றன. மற்றவர்களுடைய சட்டசபை முறை அவர்களைச் சிறைச்சாலைக்கு இட்டுச் செல்கின்றன; நாடு கடத்தலில் தள்ளுகின்றன; கடுங்காவல் பணியிலே கொண்டு சேர்க்கின்றன. ஒரு சிலர் முதலாளிகளுக்கு பணியாற்றுகின்றனர். மற்றவர்கள் பாட்டாளிகளுக்குப் பணியாற்று கின்றனர். அந்த ஒரு சிலர் சமூக ஏகாதிபத்தியவாதிகள், மற்றவர்கள் புரட்சிகர மார்க்சிஸ்டுகள்''

– சோசலிசமும் – போரும்

போல்ஷ்விக் வரலாற்றில் ஸ்டாலின் குறிப்பிடுகிறார்,

''அரசாங்க டூமாவிற்கு நடக்கவிருந்த தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வது என்று போல்ஷ்விக்குகள் தீர்மானித்தனர். ஆனால் மென்ஷ்விக்குகள் செய்தது போல் ஒரு கோஷ்டியாக அமர்ந்து ''சட்டம்'' இயற்றும் வேலையைச் செய்வதற்காக போல்ஷ்விக்குகள் டூமாவிற்குள் போகவில்லை. புரட்சியின் நலன்களுக்குச் சாதகமான ஓர் அரசியல் மேடையாக அதை பயன்படுத்துவதற்காகச் சென்றார்கள். இதற்கு மாறாக கான்ஸ்டிடியூஷனல் டெமாக்கிரட்டுகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும், டூமாவில் கான்ஸ்டிடியூஷனல் டெமாக்கிரட்டுகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும் மென்ஷ்விக் மத்தியக் குழு வற்புறுத்தியது. ஏனெனில் டூமா ஜார் அரசாங்கத்திற்கு கடிவாளம் பூட்டக் கூடிய சட்டசபையாக அவர்களுக்குப் பட்டது.''

–போல்ஷ்விக் வரலாறு

கம்யூனிஸ்டுகள் தேர்தலில் பங்கு கொள்வதன் நோக்கம் பற்றி லெனின் தெளிவாகவே கூறுகிறார்.

''இவர்கள் (கம்யூனிஸ்டுகள்) பாராளுமன்றத்தில் இடங்களைப் பிடிப்பதற்கு மட்டும் முயற்சிக்கக் கூடாது. மாறாக

படிப்பகம்

www.padippakam.com



மக்களைச் சிந்திக்கச் செய்ய முயற்சிக்க வேண்டும்; மக்களைப் போராட்டத்தில் இழுக்க வேண்டும்; முதலாளிகளின் கூற்றினை ஏற்றுக்கொண்டு அது நிறுவியுள்ள எந்திரத்தையும், அது நியமித்துள்ள தேர்தல்களையும், அது மக்களுக்கு விடுத்துள்ள அறைகூவல்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தை அதன் சொற்களைக் கொண்டே மடக்கவேண்டும். (பெரிய வேலைநிறுத்தக் காலங்களிலும், பரவலான வெகுஜனக் கிளர்ச்சி மிகவும் தீவிரப்படும் நேரமும் நீங்கலாக) தேர்தல் நேரங்கள் தவிர முதலாளித்துவ ஆட்சியின் கீழ் வேறு எந்த நேரத்திலும் போல்ஷ்விசம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு விளங்க வைக்க முடியாது. மேற்கு ஐரோப்பாவில் இதைச் செய்வது மிகவும் கடினம். அமெரிக்காவில் மிகக் கடினம். ஆனால் இதைச் செய்யமுடியும், செய்தே ஆகவேண்டும், முயற்சிகள் இல்லாமல் கம்யூனிசத்தின் நோக்கங்களை அடைய முடியாது'' **(LCW31.P.99)**

சுருங்கச் சொன்னால் :

1. கம்யூனிஸ்டுகளுக்கு பாராளுமன்றம் ஒரு அரசியல் பிரச்சார மேடை. தேர்தல் மக்களைத் திரட்டுவதற்கும், பிரச்சாரம் செய்வதற்குமான ஒரு அரங்கு. ஆனால் திரிபுவாதிகளுக்கு பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகார அமைப்பு; ஆளும் வர்க்கங்களுக்கு கடிவாளம் பூட்டக்கூடிய சட்டசபை.

2. திரிபுவாதிகள் முதலாளிகளுக்கு சேவை செய்கின்றனர். அதனால் அவர்களுடைய சட்டசபைப் பணி அவர்களுக்கு பல சலுகைகளைத் தருகின்றன; மந்திரிப் பதவியைத் தருகின்றன. ஆனால் கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகளாகவும், புரட்சிக்காரர்களாகவும் தமது கடமைகளை பாராளுமன்ற அங்கத்தினராய் இருந்துகொண்டு ஆற்றுகின்றனர். அதனால் அவர்களுக்கு சிறையும் கடுங்காவலும் நாடு கடத்தலும் பரிசாகக் கிடைக்கிறது.

கம்யூனிஸ்டுகளும், திரிபுவாதிகளும் ஒரே நேரத்தில் பாராளுமன்றத்திலும், தேர்தலிலும் பங்கேற்பினும் அவர்களுடைய பாராளுமன்றப் பணிகளிலும், நோக்கங்களிலும், அடிப்படையிலேயே வேறுபாடு இருப்பதை அனைவரும் உணர முடியும். நிலவும் முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு பாராளுமன்றத்திற்கு வெளியே புரட்சிகர மக்களின் அதிகாரத்திற்கான



சோவியத் வடிவிலான நிறுவனங்களை அமைப்பதையும் அதற்காக மக்களைத் திரட்டுவதையும், நோக்கமாகக் கொள்ளாமல் பாராளுமன்றத்தை நிரப்புவதையும் மந்திரிசபையைக் கைப்பற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு தமது செயல் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்ளும் திரிபுவாதிகளே பாராளுமன்றவாதிகள் ஆவார்கள். இவர்களுடைய பாராளுமன்றப் பங்கேற்புக்கும் புரட்சிகர நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளுவதற்காக கம்யூனிஸ்டுகள் கையாளும் பாராளுமன்றப் பங்கேற்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

புறக்கணிப்புவாதிகள் மந்திரி பதவிகள் அடைவதை தமது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிவதில் கம்யூனிஸ்டுகளைப் போலவே அவர்களும் உறுதியாக இருக்கிறார்கள். திரிபுவாதிகளைப் போல் பாராளுமன்றங்களின் தொங்கு சதையாக, தொழிற் சங்கங்களின் தயவில் இருக்கும் துணைக் கருவியாக கட்சியை இவர்கள் கருதவில்லை; ஆனால் பாராளுமன்றங்களை ஒரு பிரச்சார மேடையாகக் கூட பயன்படுத்த முடியாது, கூடாது என்கிறார்கள். பாராளுமன்ற முறையை அரசியல் வகையில் காலாவதியாகச் செய்வதற்காக அதன் உள்ளிருந்தே செய்ய வேண்டிய பணிகளைப் புறக்கணிக்கிறார்கள்; ஒரு நாட்டில் பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதி ஆகிவிட்டதா என்பதை ''எதார்த்த நிலைமைகளிலிருந்து நிதானமாக'' பரிசீலித்து உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வு, தயார் நிலை ஆகியவற்றிலிருந்து முடிவுக்கு வர இவர்கள் தயாராய் இல்லை; மாறாக பாராளுமன்ற முறை தமக்குக் காலாவதி ஆகிவிட்டதாலேயே வர்க்கத்துக்கும் மக்களுக்கும் காலாவதியாகி விட்டது எனக் கருதுகிறார்கள்; பாராளுமன்றம் பிற்போக்கானதாகவும், ஊழலும், லஞ்சமும் வஞ்சமும் நிறைந்ததாகவும் இருப்பதாலேயே அதை கம்யூனிஸ்டுகள் ஒரு பிரச்சார மேடையாகப் பயன்படுத்த முடியாது, கூடாது என்கிறார்கள். இதன் மூலம் மிகப் பின்தங்கிய வர்க்கப் பகுதியினரையும், மக்களையும் போதம் பெறச் செய்வதற்கும் ஒன்று திரட்டுவதற்கும் தவறி விடுகிறார்கள். பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் சோவியத் அதிகாரத்தை ஏற்பதற்கும் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களை தயார் படுத்த வேண்டிய பணியை – பாராளுமன்ற முறையை அரசியல் வகையில் காலாவதியாகச் செய்ய அதனுள்ளிருந்தே ஆற்ற வேண்டிய பணியை இவர்கள் புறக்கணிக்கிறார்கள். அதாவது பாராளுமன்றத்தை அகற்றிடும் பலம்

www.padippakam.com



பெறும் வரை கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றி சோவியத்துகளுக்கான தேர்தல் நடத்தும் வரை – முதலாளிகள் தேர்தல் நடத்தி அதில் பங்கெடுக்குமாறு அனைத்து மக்களையும் அழைக்கும் வரை அதில் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை (சில விஷேசமான நிலைமைகள் தவிர) இவர்கள் புறக்கணிக்கிறார்கள். அதாவது இவர்கள் நிரந்தரப் புறக்கணிப்பையே போதிக்கிறார்கள். இவர்களுக்கு வர்க்கத்தின் கட்சியாக மக்களின் கட்சியாக சிந்திக்கத் தெரிவதில்லை என்று லெனின் கூறுவது உண்மையே. அரசியல் வகையாக பாராளுமன்ற முறை காலாவதியாகாமல் இருக்கும்போது, அதில் பங்கெடுத்து பின்தங்கிய மக்களைப் போதம் பெறச் செய்ய வேண்டிய பணியை – பாராளுமன்றத்தைக் கலைப்பதன் அவசியத்தை சித்தாந்த, அரசியல், நடைமுறை வகையில் நிரூபிக்கும் பணியை தட்டிக் கழிக்கிறார்கள்; மிகச் சுலபமாக பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தை தூற்றுவது, பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பது ஆகியவற்றால் தமது புரட்சிகர உணர்வை மட்டும் வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம் உண்மையில் இவர்கள் முதலாளித்துவ செல்வாக்குகளுக்கு எதிரான போராட்டத்தை நடத்துவதற்கு பதில் தட்டிக் கழிக்கிறார்கள்; பாராளுமன்றப் பணிகளைச் கண்டு அஞ்சுகிறார்கள். எனவேதான் அவர்களைப் பார்த்து லெனின் கூறினார் :

> ''எனது அருமை புறக்கணிப்புவாதிகளே, பாராளுமன்ற எதிர்ப்பாளர்களே, நீங்கள் உங்களை உக்கிரமான புரட்சியாளராக நினைத்துக் கொள்கிறீர்கள். ஆனால் உண்மையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் தலை தூக்கும் முதலாளித்துவ செல்வாக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒப்பளவில் அற்பமான இன்னல்களைக் கண்டு அஞ்சுகிறீர்கள். ஆனால் உங்களுடைய வெற்றி – அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை கவிழ்த்து பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்று கொள்வதானது - மேலும் பெரிய அளவில் இதே இன்னல்களைத் தோற்றுவிக்கும். இன்று உங்களை எதிர் நோக்கும் சிறிய இன்னல்களைக் கண்டு சிறுபிள்ளை போல் நடுங்குகிறீர்கள். ஆனால் நாளைக்கும் அதற்கு மறுநாளும் இதே இன்னல்களை எல்லை இன்றி கூடுதலான அளவில் சமாளிப்பதற்குக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும். முழுமையாகவும் தீர்க்கமாகவும் கற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.'' (LCW 31. P. 114-115)



முதலாளித்துவச் செல்வாக்குகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக அவற்றைக்கண்டு அஞ்சி பாராளுமன்ற பணிகளையே புறக்கணிக்கும் புறக்கணிப்புவாதிகள் கம்யூனிஸ்டுகளைப்பற்றி வேறு விதமாகக் கூறுகிறார்கள்.

அவர்களைப்பற்றி ஸ்டாலின் கூறுகிறார்:

> ''சமூக ஜனநாயகவாதிகள் (கம்யூனிஸ்டுகள்) புரட்சிக்காரர்கள் என்பதை அராஜகவாதிகள் ஏற்க மறுக்கிறார்கள். நீங்கள் புரட்சிக்காரர்கள் அல்ல, நீங்கள் பலாத்காரப் புரட்சியை நிராகரிக்கிறீர்கள். ஓட்டுமுறையில் மட்டுமே நீங்கள் சோசலிசத்தை நிலைநாட்ட விரும்புகிறீர்கள் என்று கூறுகிறார்கள்.''

மேலும் கம்யூனிஸ்டுகளைப் பற்றி அராஜகவாதிகள் கூறுகிறார்கள்:

> ''சமூக ஜனநாயகவாதிகள் புரட்சியையும் புரட்சிகர போராட்டத்தையும் ஆயுதம் தாங்கிப் போராடுவதையும் ஏற்றுக் கொள்வதில்லை. நீங்கள் திறந்த உள்ளத்துடன் ஆயுதம் கேட்டால் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டையே கொடுப்பார்கள். முதலாளியத்திற்கும் தற்போதுள்ள முதலாளித்துவ அமைப்பு முழுவதற்கும் விசுவாசமாக நடப்பதாக உறுதி கூறிவிட்டு சமாதானத்துடன் கூடிய சட்டப்பூர்வமான முறையே புரட்சிக் காரர்களுக்குத் தகுந்த செயலுத்தி என்று அவர்கள் ஆணித்தரமாகக் கூறுகிறார்கள். துப்பாக்கிகளாலும், ஆயுதங்களாலும் சண்டை போடுவது முதலாளித்துவப் புரட்சிமுறை. ஓட்டுரிமை, பொதுத் தேர்தல் இவற்றின் மூலம்தான் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்; அதன்பிறகு சட்டசபையில் பெரும்பான்மை அங்கத்தினர்களின் பலத்தாலும், சட்டங்கள் இயற்றுவதாலும் சமுதாயத்தை ஒழுங்குபடுத்த முடியும் என்று சமூக ஜனநாயகக் கட்சி பகிரங்கமாகப் பறைசாற்றுகிறது.''
>
> – ஸ்டாலின் – ''சோசலிசமா? அராஜகவாதமா?''

பிற்போக்கு நாடாளுமன்றங்களைப் புரட்சிகர நோக்கங்களுக்காக ஒரு அரசியல் மேடையாய் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முதலாளித்துவ நாடாளுமன்றங்களையும் இதரப் பிற்போக்கு நிறுவனங்கள் அனைத்தையும் அகற்றிடும் பலம் பெறாதவரை அவற்றில் வேலை செய்தே ஆகவேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் கூறுவதையே

படிப்பகம்

www.padippakam.com



அராஜகவாதிகள் மேற்கண்டவாறு திரித்துப்புரட்டி அவதூறு பொழிகிறார்கள் என்பது தெளிவு.

''நாடாளுமன்ற அரங்கையும், நாடாளுமன்றத் தேர்தல்களையும் கம்யூனிஸ்டு முறையில் பயன்படுத்திக் கொள்ளமுடியாத, இன்னும் அதிகமாக பயன்படுத்திக் கொள்ள விரும்பாத தலைவர்களுக்கு எதிராக மிகவும் கடுமையான, தாட்சண்யமற்ற, சமரசத்திற்கு இடமற்ற குற்ற விமர்சனம் செய்யுங்கள்'' என்று லெனின் கூறியது இத்தகையவர்களைப் பற்றித்தான்.

இப்போது திரிபுவாதிகள், புறக்கணிப்புவாதிகள், புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் ஆகியோர் பாராளுமன்றத்தை அணுகும் முறையைக் கீழ்க்கண்டபடி தொகுக்க முடியும்.

1. திரிபுவாதிகள் பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்டு அதில் பெரும்பான்மை பெறுவதையும் கட்டிக்காப்பதையும் தமது நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்கள். இவர்களுக்கு பாராளுமன்ற ஜனநாயக முறையை அழித்துவிட்டு அதற்கு மேலான பாட்டாளி வர்க்க ஜனநாயக ஆட்சியை நிறுவும் திட்டம் செயல்பாடுகள் இல்லை. இவர்கள் பாட்டாளிவர்க்கத்தின் துரோகிகள். பாராளுமன்றவாதிகள் எந்தச் சூழ்நிலையிலும் பாராளுமன்றப் புறக்கணிப்பை எதிர்க்கிறார்கள். பாராளுமன்றத்தை ஓர் அரசியல் மேடையாக அல்லாமல் அதிகார அமைப்பாக கருதுகிறார்கள், மக்களைச் சிந்திக்க வைப்பதற்காக அல்ல அதிகச் சீட்டுகள் பிடிப்பதற்காகவும், மந்திரிப் பதவியை அடைவதற்காகவும், சலுகைகள் பெறுவதற்காகவுமே இவர்கள் தேர்தலில் நிற்கிறார்கள். பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதி ஆகிவிட்டது என்பதை இவர்கள் அதன் உண்மையான அர்த்தத்தில் ஏற்றுக் கொள்வதில்லை.

2. புறக்கணிப்புவாதிகள் பாராளுமன்ற முறையை அடியோடு வெறுத்து அருவருத்து ஒதுக்குகிறார்கள். ஆனால் அம்முறையின் போலித்தனத்தை அம்பலப்படுத்தி அதன் மீது பின்தங்கிய மக்களுக்குள்ள நம்பிக்கையையும், பாராளுமன்றத் தப்பெண்ணங்களையும் களைய அதனுள் இருந்து பணி செய்ய வேண்டியதைப் பற்றிய லெனினிய வழிகாட்டுதலை இவர்கள்



ஏற்றுக்கொள்வதில்லை. இவர்கள் மக்களையும் முன்னணிப் படையையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் அரசியல் அறிவுபெற உதவுவதில்லை. பாராளுமன்றமுறை தமக்குக் காலாவதியாகிவிட்டதாலேயே மக்களுக்கும் வர்க்கத்துக்கும் காலாவதியாகிவிட்டதாகக் கருதுகின்றனர். அவர்களுக்கு ஒரு வர்க்கத்தின் கட்சியாக வெகுஜனங்களின் கட்சியாக செயல்படத் தெரியவில்லை. இதனால் மக்களிடமிருந்து தனிமைப்படுகிறார்கள். வெறும் வாய்ச் சவடால்காரர்களாக இருக்கிறார்கள். பாராளுமன்ற முறையை அரசியல் வகையில் காலாவதியாக்குவதற்கு எந்த பணியும் செய்யாமல் அரசியல் வகையில் காலாவதியாகி விட்டது போல் செயல்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் தீர்மானிக்கிறார்கள். நிரந்தரப் புறக்கணிப்பு – புறக்கணிப்புவாதம் – அவர்களுடைய முழக்கமாக இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் புரட்சிகர நோக்கங்களுக்காக பிற்போக்குப் பாராளுமன்றங்களைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி பேசினால் ''ஓட்டுச் சீட்டு மூலம் ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பவர்கள்'' என்றும், ''ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டவர்கள்'' என்றும் அவதூறு பேசுகிறார்கள்.

3. கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற ஜனநாயகத்திற்காகப் போராடவில்லை. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்காகவே போராடுகிறார்கள்; அதற்கான மேடைகளில் ஒன்றாகவும், மக்களின் அரசியல் உணர்வை வளர்ப்பதற்கான கருவிகளில் ஒன்றாகவும் பாராளுமன்றத்தினைப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தவறுவதில்லை. பாராளுமன்றப் பங்கேற்பு என்பது கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரை ஒரு செயலுத்திப் பிரச்சினையே. ''புரட்சிப் பேரலையால் ஆதரிக்கப்படும் நிலையில்'' ''புதிய தாக்குதலைத் தொடுப்பதற்கான இன்னொரு சாதனமாக இருக்கும்போது'' புறக்கணிப்புத் தீர்மானங்களை அவர்கள் எடுக்கிறார்கள். பாராளுமன்ற முறை அரசியல் வகையிலும் காலாவதியாகும் போதும், மக்களின் புரட்சிகர அதிகாரத்திற்கான போராட்ட எழுச்சியை திசைதிருப்புவதற்கான சாதனமாக பாராளுமன்றமும் தேர்தலும் ஆளும் வர்க்கங்களால் முன்வைக்கப்படும் போதும், பாராளுமன்றப் பங்கேற்பு

படிப்பகம்

www.padippakam.com



செயலுத்தியை நடைமுறைப் படுத்த வேண்டிய புரட்சிகரக் கட்சி அதற்கான ஸ்தாபன பலம் இல்லாதிருக்கும் போதும் (ஆகிய மூன்று நிலைமைகளில்) கம்யூனிஸ்டுகள் தேர்தலையும், பாராளுமன்றங்களையும் புறக்கணிக்கிறார்கள். நிரந்தரப் புறக்கணிப்பு அல்லது நிரந்தரப் பங்கேற்பு என்பது அவர்களுடைய தீர்மானம் அல்ல. புறக்கணிப்பு வாதத்தையும், பாராளுமன்ற வாதத்தையும் அவர்கள் நிராகரிக்கிறார்கள். கட்சி பலவீனமாய் இருக்கும்போது தமது பலவீனத்தை மக்களிடம் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார்கள். பலமான கட்சியைக் கட்டுவதை முன்னிறுத்தி புறக்கணிப்பை மேற்கொள்கிறார்கள்.

பாராளுமன்றம், தேர்தல் பற்றிய விசயத்தில் லெனினிய அணுகுமுறை இன்று பொருந்தாது என்று சிலர் கருதுகின்றனர். அது ரசியாவுக்கு மட்டுமே பொருந்தும் என்று வேறு சிலரும் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று வேறு சிலரும் அந்தக் காலத்திற்கு மட்டுமே பொருந்தும் (இந்தக் காலத்திற்கு அல்ல) என்று வேறு சிலரும் கருதுகின்றனர். லெனின் மீது பக்திகொண்டு அவருடைய பெயரை ஜபிப்பதற்கு தவறாத இவர்கள் லெனினிய அணுகுமுறையைப் பற்றி நாம் பேசினால் லெனின் ஏதோ சில நூல்களில், கட்டுரைகளில் கூறிய விசயத்தை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டு வாதிடுவதாகக் கூறுகிறார்கள். அல்லது அதில் சொல்லப்பட்டிருக்கும் விசயங்கள் இன்று இந்தியாவிற்குப் பொருந்தாது என்று ஒரு வரியில் கழித்துக் கட்டுகிறார்கள். லெனின் ஒரு கட்டுரையில் எழுதினாரா? ஒரு புத்தகத்தில் எழுதினாரா? அல்லது பல புத்தகங்களில் பல கட்டுரைகளில் எழுதினாரா? என்பதை வைத்து லெனின் கூறியது சரியா, பொருந்துமா என்று ஆய்வு செய்வது விஞ்ஞானப்பூர்வமான அணுகு முறையல்ல என்று இவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லுகிறோம். நமது நாட்டுக்குப் பொருந்தாது. இந்தக் காலத்திற்கு பொருந்தாது என்றால் லெனினியம் ஒரு சர்வதேச கோட்பாடு என்பதையும் இந்த சகாப்தம் லெனினிய சகாப்தம் என்பதையும் மறுக்கிறார்களா என்பதை இவர்கள் தெளிவு படுத்த வேண்டும்; அது மட்டுமின்றி இந்த நாட்டுக்கு லெனினியம் எப்படிப் பொருந்தாது என்பதையும் லெனினிய சகாப்தம் எப்போது முடிவுற்றது. இப்போது என்ன சகாப்தம் என்பதையும் அவர்கள் விளக்க வேண்டும். உண்மையான கம்யூனிஸ்டுகள் இத்தகைய பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க மாட்டார்கள்.

☆

# 6

## இந்தியாவில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதியாகவில்லை

பாராளுமன்றம் மற்றும் தேர்தல் பற்றிய விசயத்தில் கம்யூனிஸ்டுகள் தமது அணுகுமுறையை மார்க்சிய-லெனினிய அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும். அகநிலைப் பார்வைகளும் வெறும் புரட்சிகர மனப்பாங்குமே இப்பிரச்சினை குறித்து சரியான முடிவுக்கு வரப் பயன்படமுடியாது. முன்னணிப்படை மட்டுமின்றி உழைப்பாளி மக்கள் அனைவரின் வர்க்க உணர்வு , தயார்நிலை இவற்றின் எதார்த்த நிலவரத்தை நிதானமாகக் கவனித்து மதிப்பீடு செய்வது இப்பிரச்சினை குறித்து மேலும் சரியான முடிவுக்கு வர அவசியமாகும்.

இந்தியப் பாராளுமன்றமும், பிற பிரதிநிதித்துவ அமைப்புகளும் (மாநில சட்டமன்ற, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்ற அமைப்புகள்) முதலாளித்துவ முறையிலான பிரதிநிதித்துவ அமைப்புகளே என்பதில் சந்தேகம் இல்லை. முதன்முதலாக காலனிய இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே இவ்வமைப்புகளை அறிமுகப்படுத்தியது. புரட்சிகர இந்திய மக்களின் எழுச்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனிய ஆதிக்கத்தைத் தூக்கிஎறியும் திசையில் முன்னேறுவதைத் தடுக்கவும், திசைதிருப்பிவிடவும் முதலாளித்துவப் பாராளுமன்ற முறையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. பின்னர் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அதிகாரத்திற்கு வந்த இந்தியப் பிற்போக்கு ஆளும்வர்க்கங்கள் அதே காரணத்திற்காகவே பாராளுமன்ற அமைப்பை விரிவுபடுத்தினர். மக்களின் நலனுக்கு எதிராக ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ அமைப்பு என்ற அதன் தன்மையை மேலும் இது

படிப்பகம்

www.padippkam.com



விரிவு படுத்துவதாகவே இருந்தது. எனவே முதலாளித்துவப் பாராளு மன்றங்கள்பால் கம்யூனிஸ்டுகளின் அணுகுமுறையைப் பற்றிய லெனினியக் கோட்பாடுகளையே இந்தியப் பாராளுமன்றம்பால் கம்யூனிஸ்டுகள் கொள்ளவேண்டிய அணுகுமுறையை தீர்மானிப் பதற்கும் பிரயோகிக்கவேண்டும்.

முதலாவதாக, பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதி ஆகிவிட்டது என்ற லெனினிய முடிவு அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கும் பொருந்தும் முடிவாகும். இதில் மாறுபட்ட கருத்துகளோ, விவாதங்களோ கம்யூனிஸ்டுகளுக்கு இல்லை. எனவே இம்முடிவின் அடிப்படையில் அமையக் கூடிய அணுகுமுறை இந்தியப் பாராளுமன்றம் பற்றிய அணுகு முறைக்கும் பொருந்துவதாகும். எனவே அதிலிருந்து நாம் கீழ்க் கண்ட முடிவுகளுக்கு வர முடியும்.

1. இந்தியப் பாராளுமன்றம் இனியும் புரட்சிகர வர்க்கங்களின் அதிகார அமைப்பாக இல்லை. எனவே வரலாற்று வகையில் புரட்சிக்கு எதிரான இவ்வமைப்பு கலைக்கப் படவேண்டியதாகும்.

2. பாட்டாளி வர்க்கக் கட்சி முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தை அடைவதை இலக்காகக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, சோசலிசத்தை அடைவதையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

3. பாட்டாளி வர்க்கக் கட்சியின் நடைமுறை, செயல்திட்டங்கள் அனைத்தும் இப்பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதையும் மந்திரி சபையைக் கைப்பற்றுவதையும் நோக்கி அல்ல, மாறாக பாராளுமன்றத்துக்கு வெளியே புரட்சிகர மக்களின் அரசியல் அதிகாரத்திற்கான அதிகார நிறுவனங்களை நிறுவுவதை நோக்கியே இருக்க வேண்டும்.

4. பாட்டாளி வர்க்கக் கட்சி பாராளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளைப் பிரதானமாய் கொண்ட கட்சியாய் இருக்கக் கூடாது. சட்ட சபை கோஷ்டியின் அல்லது பாராளுமன்ற தேர்தல் எந்திரத்தின் தொங்கு சதையாகவோ தொழிற் சங்கங்களின் தயவில் உள்ள துணைக் கருவியாகவோ இருக்கக் கூடாது, மாறாக எந்த நிலைமையிலும் சமாளித்துக் கொண்டு, இடையூறுகளை வென்று, உழைக்கும் மக்களின் அதிகாரத்திற்கான



போராட்டத்திற்குத் தலைமை தாங்கக் கூடிய புரட்சிகரக் கட்சியாக இருக்க வேண்டும். தொழிற் சங்கங்கள் முதல் பாராளுமன்றக் குழு வரை அனைத்து பாட்டாளி வர்க்க அமைப்புகளையும் வழி நடத்தும் உயர்ந்த மட்ட பாட்டாளி வர்க்க அமைப்பாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, இந்தியாவில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகிவிட்டதா என்பது பற்றி எதார்த்த நிலைமைகளிலிருந்து முடிவுக்கு வர வேண்டும். பாட்டாளி வர்க்கக் கட்சி பலவீனமாக உள்ளது. அது பாராளுமன்ற அமைப்பை அகற்றும் பலத்தைப் பெற்றிருக்கவில்லை. சோவியத் வடிவிலான மக்கள் புரட்சிகர அதிகார அமைப்புகள் எப்பகுதியிலும் கட்டப்பட்டிருக்க வில்லை. இந்நிலையில் சோவியத் வடிவிலான மக்களின் புரட்சிகர அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதற்கும், பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும் பெருந் திரளான மக்கள் தயார் நிலையில் இருக்க முடியாது. அது மட்டுமின்றி ஓரளவு பெரிய அளவிலான சிறுபான்மையோர் மட்டும் அல்ல, பெரும்பாலான உழைக்கும் மக்கள் கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும், முதலாளிகளையும் மற்றும் இவ்வர்க்கங்களின் அமைப்புகளான அரசியல் கட்சிகள், மத, சாதீய அமைப்புகளையும் பின்பற்றுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருக்கிறது. ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் பாராளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களும், சாதீய, மத, இனக் கலவரங்களும் இதற்கு வெளிப்படையான சான்றுகளாகும். இந்நிலையில் இந்தியாவில் பாராளுமன்ற முறை அரசியல் வகையில் காலாவதி ஆகிவிட்டது எனத் தீர்மானித்தால் அது லெனினிய அணுகுமுறைக்கு விரோதமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்நிலைமைகள் மிகப் பின்தங்கிய பெரும் பகுதியான உழைக்கும் மக்களை அரசியல் வகையில் போதம் பெறச் செய்வதற்கும் – பாராளுமன்றத்தைக் கலைப்பதன் அவசியம் பற்றியும், சோவியத் வடிவிலான அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதன் அவசியம் பற்றியும் சித்தாந்த, அரசியல், நடைமுறை வகையில் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு – நடைமுறையில் பாராளுமன்ற முறையை அரசியல் வகையிலும் காலாவதியாகச் செய்வதற்கும் பாராளுமன்ற தேர்தல்

படிப்பகம்

www.padippkam.com



களிலும் பாராளுமன்ற அரங்கில் நடைபெறும் போராட்டங்களிலும் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளின் பாராளுமன்றக் குழு ஒன்று பங்குகொண்டு செயல்படவேண்டும் என்பதையும், அதைத் திட்டமிட்டு தனது கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுத்துவது கட்சியின் கடமை என்பதையும் வலியுறுத்துகின்றன.

ஒருபுறம் பின்தங்கிய மக்களைப் போதம்பெறச் செய்யவேண்டிய கடமை புரட்சியாளர்களின் முன் இருக்கிறது. இன்னொருபுறம் இந்தப் பாராளுமன்ற அமைப்புகள் ஊழல் மலிந்ததாய் வஞ்சகம் நிறைந்ததாய் இருப்பதால் பாராளுமன்றத்தில் செயல் படுவதற்காக அனுப்பப்படும் குழு மீது கட்சி அதிக கவனமும் கண்காணிப்பும் வைத்திருக்க வேண்டும். எனவே அதில் மிகச்சிறந்த கம்யூனிஸ்டுகள் மட்டுமே பங்குகொள்ளும்படி பார்த்துக்கொள்வது, வெகுஜனங்கள் இடையே நேரடி கிளர்ச்சிப் பணிகளுக்கு அவர்களை அனுப்புவது, அவர்களுடைய நடவடிக்கைகள், பேச்சுக்கள் அனைத்தும் அவ்வப்போது கட்சிக்கமிட்டிகளில் அலசி ஆராயப்படுவது, திரிபுவாத நிலைக்கு சீரழியும் உறுப்பினர்கள் வெளியேற்றப்படுவது போன்றவற்றின் மூலம் கவனமும், கண்காணிப்பும் கட்சியால் செலுத்தப்படுவதும், இக்குழுவின் மீது கட்சியின் மத்தியக் குழுவே முழுக்கண்காணிப்பையும் வைத்திருப்பதும் அவசியமாகும்.

பாராளுமன்றக்குழு பாராளுமன்றத் தேர்தல்களையும், பாராளுமன்றத்தையும் பிரச்சார அரங்குகளாகப் பயன்படுத்தும். கம்யூனிசத்தையும், கம்யூனிஸ்ட் கொள்கைகளையும் விளக்குவதற்கும், ஆளும் வர்க்கங்களின் வஞ்சனைகளையும், மோசடிகளையும் அம்பலப்படுத்துவதற்கும், துரோகிகளையும், அவர்களுடைய மோசடிகளையும் அம்பலப்படுத்துவதற்கும் பாராளுமன்றக் குழுக்கள் பாராளுமன்ற அரங்குகளைப் பயன்படுத்தும். பல்வேறு வர்க்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்கள் மோதும் அரங்காக பாராளுமன்றம் இருப்பதால் ஒவ்வொரு வர்க்கமும் பிறவர்க்கங் களின்பால் கொள்ளும் போக்கையும் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டிலிருந்து இக்குழு விளக்கும். பாராளுமன்ற அமைப்புக்கு வெளியே சோவியத் வடிவிலான மக்களின் புரட்சிகரமான அமைப்புகளை நிறுவும் கட்சியின் பணிக்கு உதவக்கூடிய துணை உறுப்பாகவே இது செயல்படும். பாராளுமன்ற அமைப்பைக் கலைப்பதும் சோவியத்அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதும் ஏன் அவசியம்



என்பதை அரசியல்,சித்தாந்த, நடைமுறை வகையில் வெகுஜனப் பகுதியோருக்கு விளங்கவைக்கவும் நடைமுறையில் அதைச் சாதிக்கவும் இக்குழு பணிபுரியும். மக்களுக்கும், புரட்சிக்கும் சேவை செய்கின்றவர்கள் என்ற அடிப்படையிலும் சர்வதேசியவாதிகள், சோசலிஸ்டுகள், புரட்சியாளர்கள் என்ற அடிப்படையிலும் இக்குழு தனது பாராளுமன்ற பணியை நிறைவேற்றும். எல்லா புரட்சியாளர்களையும் போலவே இது ஆளும் வர்க்கங்களின் அடக்குமுறையையும், ஒடுக்குமுறையையும் சற்று கூடுதலாகவே எதிர்கொள்ளும்.

இத்தகைய பாராளுமன்றக் குழு ஒன்றைக் கட்டி அதன் மீது கட்டுப்பாடும் கண்காணிப்பும் செலுத்தும் பலம் கட்சிக்கு இல்லாதபோது கட்சி தனது அமைப்பு பலவீனத்தின் காரணமாக பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதாக மக்களுக்கு வெளிப் படையாகவே அறிவிக்கும்.

கம்யூனிஸ்டுகளின் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகளை திரிபுவாதிகள் மற்றும் நவீனத் திரிபுவாதிகளின் பாராளுமன்ற நடவடிக்கைகளோடு ஒப்பிடுவது அடிப்படையிலேயே தவறாகும். ஏனெனில் திரிபுவாதிகளுக்கும், நவீனத் திரிபுவாதிகளுக்கும் பாராளுமன்றம் ஒரு பிரச்சார மேடையல்ல; மாறாக சட்டமியற்றும் ஒரு அதிகார அமைப்பு, ஆளும் வர்க்கங்களுக்கு கடிவாளமாய் இருக்கும் ஒரு அரங்கு. இவர்களுக்கு பாராளுமன்றத்தில் யாருடனும் கூட்டுச் சேர்ந்தாவது – எத்தகைய சமரசத்திற்குப் போயாவது அதிகச் சீட்டுகள் பெறுவதும் மந்திரிசபை அமைப்பதுமே லட்சியம். இவை மந்திரிசபை அமைத்துவிட்டால் அதுவே பாட்டாளி வர்க்க ஆட்சி. இவைகளின் லட்சியம் எந்த முதலாளியக் கட்சியின் லட்சியத்தையும்விட உயர்வானதல்ல. இக் கட்சிகளின் செயல்திட்டங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் பிரதானமாக இந்த லட்சியத்தை நோக்கியே இருக்கின்றன; எனவே பாராளுமன்ற தேர்தல் எந்திரத்தின் தொங்கு சதையாகவும் பாராளுமன்றக் கோஷ்டிகளின் தொங்கு சதையாகவும் இக்கட்சிகள் உள்ளன. பாராளுமன்ற முறையைக் காலாவதியாக்குவதல்ல, அதைக் கட்டிக்காப்பதே இவற்றின் நோக்கம். ஆளும் வர்க்கங்களிடமிருந்து பாரர்ளுமன்ற அமைப்புக்கு ஆபத்து வருவதாக முன்கூட்டியே கண்டறிந்து எல்லா முதலாளித்துவக் கட்சிக்கும் முன்பாக பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பதை – பாராளுமன்றங்களுக்கு வெளியில்

படிப்பகம்

www.padippkam.com



மக்களுடைய சோவியத் வடிவிலான அரசியல் அதிகார அமைப்பைக் கட்டுவதையல்ல – இலட்சியமாகக் கொண்டிருப்பவையே திரிபுவாத, நவீனத் திரிபுவாதக் கட்சிகள். பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் வேலை செய்வதாக இவை கூறுவது சோவியத் வடிவிலான புரட்சிகர மக்கள் அதிகாரத்தை நிறுவுவதற்காக அல்ல, மாறாக பாராளுமன்றத்தில் அதிக இடங்களைப் பிடிக்கவும், மந்திரி சபையைக் கைப்பற்றவும்தான். எனவே இக்கட்சிகளின் அகராதியில் புரட்சிகர பலாத்காரமோ, ஆயுதப் போராட்டமோ இடம் பெறுவதில்லை. இவை அவ்வப்போது புரட்சி பற்றியும் சோசலிசம் பற்றியும் பேசுவதெல்லாம் (அதுவும் அமைதியான வழிமுறைகளில்தான் முயற்சிக்குமாம்) வெறும் ஏமாற்றுப் பேச்சுக்கள் என்பதற்கு மேல் எவ்வித முக்கியத்துவமும் அற்றவை. இவை லெனினை ஏற்றுக் கொண்டிருப்பதாய் கூறினாலும் பாராளுமன்ற முறை வரலாற்று வகையில் காலாவதியானதை அதன் உண்மையான அர்த்தத்தில் ஏற்றுக் கொள்ளாத, இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளின் நிலைக்கு இழிந்து விட்ட பாராளுமன்றவாத, திரிபுவாதக் கட்சிகளேயாகும்.

இக்கட்சிகளின் செயல்பாட்டிலிருந்து புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியின் செயல்பாடுகள் அடிப்படையிலேயே வேறுபட்டதாகும். எனவே திரிபுவாதக் கட்சிகளின் பாராளுமன்ற நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுவது முடியாது, கூடாது.

☆

# 7

# நிரந்தரப் புறக்கணிப்புக்குக் கூறப்பட்டு வரும் காரணங்கள் அனைத்தும் மார்க்சிய–லெனினியத்திற்கும் வரலாற்று உண்மைகளுக்கும் புறம்பானவை

நிரந்தரப் புறக்கணிப்புக்கு பல்வேறு மா - லெ குழுக்களால் வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. ஆனால், பாராளுமன்றங்களுக்கான தேர்தல்களிலும், பாராளுமன்றங்களின் வேலைகளிலும் பங்கெடுத்துக் கொள்வது பிழையற்ற செயலுத்தி என்று அங்கீகரிக்கும் லெனினியம் கீழ்க்கண்ட நிலைமைகளில் மட்டுமே புறக்கணிப்பை வலியுறுத்துகிறது.

1. புரட்சிகர மக்களின் எழுச்சி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வீறுகொண்டு முன்னேறிக் கொண்டிருக்கும் போது, அவற்றை திசைதிருப்பி விடுவதற்கான சாதனமாக ஆளும் வர்க்கங்களால் முன்வைக்கப்படும் பாராளுமன்றங்களும் தேர்தல்களும் புறக்கணிக்கப் படும்.(உதாரணம் : 1905 டூமா புறக்கணிப்பு)

2. பாட்டாளி வர்க்கக் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளி வர்க்கத்தை எதிர்த்து, தங்களுடைய சோவியத்து களுக்காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்குகொள்கின்ற தேர்தலை நடத்த முடிகிறபோது, பெருந்திரளான வெகுஜனங்கள் சோவியத் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு பாராளுமன்றத்தைக் கலைக்கத் தயாராய் இருக்கும்போது – அதாவது பாராளு மன்றத்தைக் கலைக்கும் பலத்தை கம்யூனிஸ்டுகள் பெற்றிருக்கும் போது (அப்போது பாராளுமன்றம் அரசியல் வகையிலும்

படிப்பகம்

www.padippkam.com



காலாவதியாகிறது) – கம்யூனிஸ்டுகள் முதலாளிய பாராளுமன்றங்களையும், பாராளுமன்றத் தேர்தல்களையும் புறக்கணிப்பர். (ஆதாரம் : ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகளுக்கு லெனின் எழுதிய கடிதம்)

3. பாட்டாளிவர்க்கக் கட்சி, முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் செயல்படுவதற்கான பற்றுறுதியும்,திடநம்பிக்கையும் கொண்ட சிறந்த புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளாலான பாராளுமன்றக் கட்சிக்குழுவைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கட்டி இயக்கும் பலம் பெற்றிராதபோது பலம் வாய்ந்த, கட்டுப்பாடான கட்சியைக் கட்டுவதை முன்னிறுத்தி பாராளுமன்றங்களையும், தேர்தல்களையும், பாட்டாளி வர்க்கக் கட்சி புறக்கணிக்கும். (ஆதாரம்: கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் லெனின் பேச்சு)

இந்த நிலைமைகள் இருக்கும்போது மட்டுமே புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி புறக்கணிப்புத் தீர்மானங்களை எடுக்க வேண்டும். இந்நிலைமைகள் இல்லாதபோதும் அல்லது நிரந்தரமாகவும் புறக்கணிப்புத் தீர்மானங்களை எடுப்பது லெனினியக் கோட்பாட்டிற்கு விரோதமானதாகும். மாறாக, இந்தியாவில் பல மா-லெ குழுக்கள் நிரந்தரப் புறக்கணிப்புக் கொள்கைகளை முன்வைக்கின்றன. மேலும் அதற்கு தத்துவார்த்த அடிப்படை கற்பிக்கவும், வரலாற்றுச் சான்று காட்டவும் முயலுகின்றன. இத்தகைய முயற்சிகளுக்கு நிச்சயமான தோல்விகள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவையாகும்.

இத்தகைய முயற்சிகள் சிலவற்றை இப்போது நாம் பரிசீலிக்கலாம்.

முதலாவதாக ''இந்தியாவில் இருக்கும் பாராளுமன்ற நிறுவனங்கள் முதலாளித்துவ நிறுவனங்கள் அல்ல'' என்றும் ''நிலப்பிரபுத்துவ நிறுவனங்கள்'' (ஏ.ஐ.சி.சி.ஆர். தீர்மானம்) என்றும் முதலாளித்துவப் பாராளுமன்றங்களில் பங்குகொள்வது பற்றியே லெனின் கூறியுள்ளதால் நிலப்பிரபுத்துவ பாராளுமன்றங்களுக்கு இது பொருந்தாது என்றும் கூறப்படுகிறது.

இது தவறானதாகும். ஏனெனில் சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி, சர்வஜன வாக்குரிமை, கமுக்க ஓட்டுமுறை போன்றவை



பாராளுமன்றத்தை நிலப்பிரபுத்துவ நிறுவனமாகக் காட்டவில்லை. மாறாக, முதலாளித்துவ நிறுவனமாகவே காட்டுகிறது. மிக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் பாராளுமன்ற அமைப்புகளில் உள்ள முதலாளிய ஜனநாயக உரிமை இந்தியப் பாராளுமன்ற நிறுவனங்களுக்கு இல்லை என்பதையும், இந்த பாராளுமன்ற நிறுவனம் ஏகாதிபத்தியம் உருவாக்கிய பாராளுமன்ற அமைப்பின் தொடர்ச்சியாக இருக்கிறது என்பதையும் வைத்து இது முதலாளியப் பாராளுமன்றமல்ல எனக்கூறுவது தவறானதாகும். மிக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலேயே கூட பாராளுமன்ற உரிமைகள் ஒரே மாதிரியாக இல்லை. பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் வேறுபாடு உள்ளது. ஏன் ஜார்கால ரசியாவில் வைக்கப்பட்ட டூமாவிற்கு என்ன உரிமை இருந்தது? அனைத்து மக்கள் வாக்குரிமை கூட அதில் இல்லை. எனவே ஜனநாயக உரிமைகளின் வேறுபட்ட அளவு பாராளுமன்ற அமைப்பு முதலாளித்துவத் தன்மை பெற்றதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அளவுகோல் அல்ல. ஏனெனில் முதலாளித்துவ அமைப்புகள் தான் பாராளுமன்ற முறையையே உருவாக்குகின்றன. பாராளுமன்றம் என்பதே முதலாளிய வர்க்கத்தின் நிறுவனமே தவிர நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் நிறுவனமல்ல.

இந்திய முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் கொண்டிருப்பதாலும் ஏகாதிபத்தியத் தரகு வர்க்கமாய் இருப்பதாலும் ஒரு பின்தங்கிய நாடாக இருக்கிறது. அதனால் நிலப்பிரபுத்துவ சக்திகளும், பிற்போக்கான சக்திகளும் பாராளுமன்றத்தில் பங்கெடுக்கவும், பயன்படுத்தவும் முடிகிறது. இது பாராளுமன்றத்தின் முதலாளியத் தன்மையை மாற்றுவதில்லை. ஜாரின் இரசியாவில் கூட டூமாவைக் கூட்டியவனும் அதன் தீர்மானகரமான சக்தியாக இருந்தவனும் எதேச்சதிகார ஜார்தான்.

பிரிட்டனில் பாராளுமன்றக் கூட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் உரிமை ''மகாராணியாருக்கே'' கொடுக்கப்பட்டது. நீண்ட காலமாக பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்தது. இவையெல்லாம் அந்நாடுகளின் வரலாற்றுப்பூர்வமான காரணங்கள் முதலாளியப் பாராளுமன்றங்களுக்கு ஏற்படுத்தும் தன்மைகளே தவிர வேறொன்றுமல்ல. இவையெல்லாம் இந்நாடுகளின் பாராளுமன்றங்களின் முதலாளியத் தன்மையினை மறுத்துவிட வில்லை. இந்தியப் பாராளுமன்ற அமைப்பும் அதற்கே உரிய சமூக அமைவின்

படிப்பகம்

www.padippkam.com



குணங்களைப் பெற்றிருக்கிறது. இக்குணங்கள் அதன் முதலாளியத் தன்மையை அழித்துவிட முடியாது.

இந்தியாவில் பாராளுமன்ற முறை முதன்முதலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முதலாளிகளால் புகுத்தப்பட்டது. 1947க்குப் பின் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து அதிகாரத்தைப் பெற்ற தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகளால் அது விரிவுபடுத்தப்பட்டது என்ற வரலாற்று உண்மை இந்தியப் பாராளுமன்றம் முதலாளித்துவ நிறுவனமல்ல என்பதை நிரூபிப்பதில்லை.

இரண்டாவதாக, முதலாளித்துவப் புரட்சி நடந்த நாடுகளில் தான் பாராளுமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் முதலாளித்துவப் புரட்சி நடக்காத இந்தியாவில் பாராளுமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்றும் சிலர் கூறுகின்றனர்.

இது ஆதாரமற்றதும், தவறானதும் ஆகும். ருஷ்யாவில் போல்ஷ்விக்குகள் அங்கு முதலாளியப் புரட்சி நடக்கும் முன்னும் நடந்த பின்னும் அதாவது ஜனநாயகப் புரட்சிக்கட்டத்திலும், சோசலிசப் புரட்சிக்கட்டத்திலும் (இரண்டு கட்டங்களிலுமே) டூமாவில் பங்குகொண்டு செயல்பட்டிருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். மேலும் சீனத்தில் "பயன்படுத்திக் கொள்வதற்கு இங்கு ஒரு பாராளுமன்றம் இல்லை" (யுத்தமும், மூலவுத்தியும் பற்றிய பிரச்சினைகள்) என்று மாவோ எழுதியபோது அந்நாட்டில் ஒரு முதலாளித்துவப் புரட்சி நடந்திருக்கவில்லை என்பதும் வரலாற்று உண்மையாகும். எனவே முதலாளித்துவப் புரட்சி நடந்த நாடுகளில் தான் பாராளுமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இவர்கள் கூறுவது மேற்கண்ட வரலாற்று உண்மைகளுக்கு புறம்பானதும் லெனின்,மாவோ ஆகியோரின் புரட்சிகர நடைமுறைக்கு எதிரானதும் ஆகும்.

மூன்றாவதாக, முதலாளித்துவ நாடுகளின் பாராளுமன்றங்கள் முற்போக்கானதாக இருக்கும் என்றும் முதலாளியப் புரட்சி நடக்காத நாடுகளில் பாராளுமன்றங்கள் பிற்போக்கானதாய் இருக்கும் என்றும் எனவே அத்தகைய நாடுகளில் (நமது நாட்டிலும் தான்) கலந்துகொள்வது 'புரட்சியின் முன்னேற்றத்திற்குத் தடை' (ஏ.ஐ.சி.சி.ஆர். தீர்மானம்) என்றும் சிலர் கருதுகின்றனர்.



இதுவும் வரலாற்று உண்மைகளுக்கும் லெனினிய நடைமுறைக்கும் புறம்பானதாகும். மிகப் பிற்போக்கான டூமாவில் தான் – முதலாளியப் புரட்சி நடக்கும் முன்பும் பின்பும் போல்ஷ்விக்குகள் பங்கு கொண்டனர் என்பது வரலாறு. "1906இல் போல்ஷ்விக்குகள் டூமாவைப் புறக்கணித்தது சிறிய பிழையே என்றாலும், நிவர்த்திக்கக் கூடியதே என்றாலும் பிழையே ஆகும். 1907, 1908 ஆகிய அடுத்து வந்த ஆண்டுகளில் டூமா புறக்கணிப்பு மிகக் கடுமையான, நிவர்த்திக்க முடியாத அளவுக்கு கடினமான பிழையாகி விட்டது" என்று 1920இல் லெனின் எழுதினார். இக்காலங்களில் முதலாளித்துவப் புரட்சி ரஷ்யாவில் நடக்கவில்லை என்பதையும் டூமா மிகப் பிற்போக்கானதாகவே இருந்தது என்பதையும் சொல்ல வேண்டியதில்லை. அங்கிருந்த டூமாவைப் பற்றி ஸ்டாலின் குறிப்பிடுகிறார்.

"ஜாருடைய தேர்தல் சட்டங்கள் ஜனநாயகத்திற்கு விரோதமானவை என்பதில் சந்தேகம் இல்லை. சகல மக்களுக்கும் ஓட்டுரிமை அளித்து தேர்தல் நடத்தப்பட வில்லை. ஜனத் தொகையில் பாதிப் பேருக்கு மேல் இருக்கும் பெண்களுக்கும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கும் ஓட்டுப் போடும் உரிமையே இல்லை. தேர்தல்கள் சமமாகவும் இல்லை. ஓட்டுப் போடக் கூடியவர்கள் நான்கு விதமாக பிரிக்கப்பட்டிருந்தார்கள். விவசாய (நிலச்சுவான்தார்) தொகுதிகள், நகர முதலாளிகள் தொகுதிகள், விவசாயிகள் தொகுதிகள், தொழிலாளிகள் தொகுதிகள். தேர்தல்கள் நேரடியாக நடக்கவில்லை. அநேகவித கட்டங்களைக் கடக்கவேண்டும். கமுக்க ஓட்டுரிமை இல்லை. இலட்சக்கணக்கான தொழிலாளர் தலைமீதும், விவசாயிகள் தலை மீதும் உட்காரக்கூடிய விதத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளிகளுக்கும் மிகப்பெரும்பான்மை டூமாவில் கிடைப்பதற்கு சட்டம் உத்திரவாதம் அளித்தது" (போல்ஷ்விக் வரலாறு) இப்படிப்பட்ட பிற்போக்கான பாராளுமன்றத்திலேயே போல்ஷ்விக்குகள் பங்கு கொண்டனர்.

பாராளுமன்றங்களின் பிற்போக்குத் தனங்களைக் கூறி அதனால் பாராளுமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுகின்றவர் களுக்கு எதிராக லெனின் கூறுகிறார் : "போல்ஷ்விக்குகள் ஆகிய நாங்கள் படு மோசமான, எதிர்ப் புரட்சி பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொண்டோம். இவ்வாறு பங்கு கொண்டதானது ருஷ்யாவின் முதலாவது முதலாளித்துவப் புரட்சிக்கு (1905–க்கு) பிறகு,

படிப்பகம்

www.padippkam.com



இரண்டாவது முதலாளித்துவப் புரட்சிக்கும் (1917 பிப்), பிற்பாடு சோசலிசப் புரட்சிக்கும் (1917 அக்) பாதையைச் செப்பனிட்டுத் தருவதில் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு பயனுள்ளதாக இருந்ததுடன் கூடவே அத்தியாவசியமானதாகவும் இருந்தது என்பதை அனுபவம் தெளிவுபடுத்துகிறது.'' எனவே நிரந்தரப் புறக்கணிப்புக்கு பாராளுமன்றங்களின் பிற்போக்குத் தன்மை ஒரு காரணமாக இருக்க முடியாது என்பது தெளிவு.

நான்காவதாக, பாராளுமன்றத்தைப் பயன்படுத்துவது என்றவுடன் அதை உள்ளிருந்துதான் பயன்படுத்த வேண்டுமா? அதில் பங்கெடுக்காமல் வெளியிலிருந்தே பயன்படுத்தலாமே என்று சிலர் கருதுகின்றனர். இயல்பாகவே பாராளுமன்றப் பிரதிநிதிகளின் அருவருக்கத்தக்க நடத்தை, போலித்தனம், திரிபுவாதிகளின் துரோகம், ஏமாற்று போன்றவற்றைப் பார்த்து, பாராளுமன்றங்களில் பங்கெடுப்பது இந்த நிலைக்கு புரட்சியாளர்களை இட்டுச் சென்று விடும் என்ற அச்சத்தால் இவ்வாறு அவர்கள் கருதுகின்றனர். ''சரியான முதற்கோள்களிலிருந்து பெறப்படும் தவறான முடிவுகள்'' என்ற கட்டுரையில் லெனின் கூறுவது இவர்களுக்கு சரியான பதிலாக அமையும். அவர் கூறுகிறார்.

''பாராளுமன்றப் பணி ஒரு வகை செயற்பாடாகும். பத்திரிக்கைத் துறைப் பணி மற்றொரு வகை செயற்பாடாகும். இவ்விரு துறைகளிலும் ஈடுபட்டுள்ளோர் உண்மையான கம்யூனிஸ்டுகளாய் இருப்பின், உண்மையாகவே பாட்டாளி வர்க்க வெகுஜனக் கட்சியின் உறுப்பினர்களாய் இருப்பின், இவை இரண்டின் உள்ளடக்கம் கம்யூனிஸ்டு இயல்புடையதாய் இருக்க முடியும், இருக்கவும் வேண்டும். பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நோக்கங்களுக்காக முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டும், முதலாளித்துவ அறிவுத்துறைவாத தப்பெண்ணங்களையும் அதனுடைய செல்வாக்கின் விளைவுகளையும் அகற்றிடும் பொருட்டும், குட்டி முதலாளிய சுற்றுச் சார்பின் எதிர்ப்பினை பலவீனப்படுத்தும் பொருட்டும், (இறுதியில் அறவே இவ் வெதிர்ப்பின் சுற்றுச் சார்பினை உருமாற்றி விடும் பொருட்டும்) பாட்டாளி வர்க்கம் சமாளித்தாக வேண்டிய இன்னல்களையும் அது



தீர்வு காண வேண்டிய தனி வகையான பிரச்சினைகளையும் தவிர்ப்பது, இவ்விரு துறைகளில் எதனிலும் - முதலாளித்துவத்திலும், முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் காலத்திலும் - வேறு எந்த செயல் துறையிலும் சாத்தியமல்ல.''

''கடைக் கோடியான இடதுசாரி அராஜகவாதிகளும், சிண்டிகலிஸ்டுகளும் பிறரும் பாராளுமன்ற முறையை எதிர்த்து அனல் பறக்க பேசியும், முதலாளித்துவ வழியில் சீரழிந்துவிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சோசலிஸ்டுகளை எள்ளி நகையாடியும், அவர்களுடைய பதவி மோகத்தைச் சாடியும், இன்ன பலவாறாக எதிர்த்த போதிலும், பத்திரிகைத் துறை வாயிலாகவும், தொழிற்சங்க வேலைகள் வாயிலாகவும் தாமும் இதே வகையான முதலாளித்துவப் பிழைப்பு நடத்தியதற்கு 1914 – 18 யுத்தத்திற்கு முன்பு எல்லா நாடுகளிலும் நாம் எண்ணற்ற உதாரணங்களைப் பார்க்கவில்லையா? பிரான்சை மட்டும் எடுத்துக் கொள்வதாயின் ரூவோ, மெர்ஷெயும் இதற்கு எடுத்துக்காட்டு அல்லவா?''

'' பாராளுமன்றத்தில் பங்கு கொள்வதை 'நிராகரிப்பவர்கள்' தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளே முதலாளித்துவ ஜனநாயகத்தின் செல்வாக்குகள் செயல்படுவதை எதிர்த்திடும் கடினமான பிரச்சினைக்கு இது போன்ற 'சிக்கலற்ற சுலபமான' புரட்சிகரமானது என்று கூறிக் கொள்ளப்படும் முறையில் தீர்வு கண்டு விடலாம் என நினைப்பதில் அவர்களுடைய சிறுபிள்ளைத்தனம்தான் வெளிப்படுகிறது. உண்மையில் அவர்கள் தமது சொந்த நிழல்களிடமிருந்து ஓடி விட முயல்கிறார்கள்; இன்னல்களைக் காண விரும்பாது கண்களை மூடிக் கொள்கிறார்கள்; வெறும் சொற்களைக் கொண்டு இவற்றை ஓட்டி விட எத்தனிக்கிறார்கள். மான வெட்கமற்ற படுமோசமான பதவி மோகம், பாராளுமன்ற இடங்களை முதலாளித்துவ வழியில் பயன்படுத்திக் கொள்ளுதல், பாராளுமன்ற செயற்பாட்டை அப்பட்டமான சீர்திருத்தவாத இழிசெயலாய் மாற்றுதல், மட்டரகமான குட்டி முதலாளித்துவ பழமைவாதம் ஆகிய இவை யாவும் எங்கும் – தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு வெளியே மட்டுமின்றி அதனுள்ளும் – முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்படும் சகஜமான பெருவழக்கான இயல்புகள் என்பது மறுக்க

படிப்பகம்

www.padippkam.com



முடியாததாகும். இதே முதலாளித்துவமும் முதலாளித்துவ சுற்றுச்சார்பும் (முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப்பட்ட பிறகும் கூட இது மிகமிக மெதுவாகவே மறைகிறது; ஏனெனில் விவசாயிகள் இடையறாது முதலாளித்துவ வர்க்கத்தை உயிர்பெறச் செய்கிறார்கள்) செயற்பாடு, வாழ்க்கை இவற்றின் எல்லாத் துறைகளிலும் சாராம்சத்தில் இதே போன்ற முதலாளித்துவ பதவி மோகத்தையும், தேசியவெறிப் போக்கையும் குட்டி முதலாளித்துவ கொச்சைத்தனத்தையும் இன்னும் பிறவற்றையும் உண்டாக்குகின்றன.

''எனது அருமை புறக்கணிப்புவாதிகளே! பாராளுமன்ற எதிர்ப்பாளர்களே! நீங்கள் உங்களை உக்கிரமான புரட்சி யாளர்களாக நினைத்துக் கொள்கிறீர்கள்; ஆனால் உண்மையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் தலைதூக்கும் முதலாளித்துவச் செல்வாக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒப்பளவில் அற்பமான இன்னல்களைக் கண்டு நீங்கள் நடுங்கி விடுகிறீர்கள்; ஆனால் உங்களுடைய வெற்றி – அதாவது முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்த்து பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று கொள்வதானது – மேலும் பெரிய அளவில் எல்லையின்றிப் பெரிய அளவில் இதே இன்னல்களையே தோற்றுவிக்கும். இன்று உங்களை எதிர்நோக்கும் சிறிய இன்னல்களைக் கண்டு சிறு பிள்ளைகளைப்போல் நடுக்க முறுகிறீர்கள். ஆனால் நாளைக்கும் அதற்கு மறுநாளும் இதே இன்னல்களை எல்லையின்றி கூடுதலான அளவில் சமாளிப் பதற்கும் கற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும், முழுமை யாகவும், தீர்க்கமாகவும் கற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.''

''சோவியத் ஆட்சி அதிகாரத்தில், உங்களுடையதும் எங்களுடையதுமான பாட்டாளி வர்க்கக் கட்சிக்குள், மேலும் பெரிய எண்ணிக்கையில் முதலாளித்துவ அறிவுத்துறையினர் நுழைந்து கொண்டு விடுவார்கள். அவர்கள் சோவியத்து களுக்குள்ளும், நீதிமன்றங்களுக்குள்ளும் நிர்வாகத்தினுள்ளும் நுழைந்துகொண்டு விடுவார்கள். ஏனெனில் முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட மானுடத்தின் துணை கொண்டில்லாது வேறு



எவ்வழியிலும் கம்யூனிசத்தை கட்டி எழுப்பி விட இயலாது. முதலாளித்துவ அறிவுத் துறையினரை நம் பக்கத்துக்குச் சென்று உருமாறும் படியும் நம்முடன் ஒன்று கலக்கும்படியும் புனர் போதம் அளிக்க வேண்டுமேயல்லாது அவர்களை விலக்கித் தள்ளி விடவோ ஒழித்துக் கட்டி விடவோ முடியாது. எப்படிப் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் கூட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையில் நீண்ட நெடிய போராட்டம் நடத்தி, புனர் போதம் அளிக்க வேண்டுமோ, அவ்வாறே அறிவுத் துறையினருக்கும் அளிக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தினர் அவர்களுடைய குட்டி முதலாளியத் தப்பெண்ணங்களை நினைத்த மாத்திரத்தில், ஒரு நொடியில் மந்திர ஜாலத்தால், தெய்வ கடாட்சத்தால், விட்டொழித்து விடுவதில்லை, ஒரு கோசம் அல்லது தீர்மானம் அல்லது சட்டத்தை வெளியிட்டு இதைச் செய்துவிட முடியாது. குட்டி முதலாளித்துவ செல்வாக்குகளை எதிர்த்து கடினமான நீண்டதொரு வெகுஜனப் போராட்டம் நடைபெறும் போதுதான் அவர்கள் இதை விட்டொழிக்கிறார்கள். சோவியத் ஆட்சியில் இதே பிரச்சினைகள் – பாராளுமன்ற எதிர்ப்பாளர்கள் இன்று இவ்வளவு டாம்பீகமாகவும், அகம்பாவத்துடனும், அலட்சிய மாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும், நினைத்த மாத்திரத்திலேயே ஒதுக்கித் தள்ளி விடலாம் என நினைக்கும் இதே பிரச்சினைகள்– சோவியத்துகளின் உள்ளும், சோவியத் நிர்வாகத்தின் உள்ளும், சோவியத் வழக்குரைஞர்கள் இடையிலும் (ருஷ்யாவில் நாங்கள் முதலாளித்துவ வழக்கறிஞர் அமைப்பை ஒழித்துவிட்டோம். இது முற்றிலும் சரியே; ஆனால் 'சோவியத் ' வழக்கறிஞர்கள் என்ற பெயரில் இவ்வமைப்பு திரும்பவும் உயிர் பெற்று வருகிறது) எழுந்து வருகின்றன. சோவியத் பொறியியலாளர்களிடையிலும் சோவியத் பள்ளி ஆசிரியர்களிடையிலும், சலுகைகள் பெற்றுள்ள – அதாவது மிக உயர்ந்த தேர்ச்சிப் பெற்று மிகச் சார்ந்த நிலையில் உள்ளவர்களான – சோவியத் ஆலைத் தொழிலாளர்களிடையிலும் முதலாளித்துவ நாடாளுமன்ற முறைக்குரிய தீய இயல்புகள் யாவும் இடையறாது அப்படியே புத்துயிர் பெற்றெழுவதை நாம் காண்கிறோம். இந்தத் தீமையை படிப்படியாகத்தான் – பாட்டாளிவர்க்க நிறுவன ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு இவற்றின் அடிப்படையில் நடைபெறும் அயராத, இடைவிடாத, நீண்ட

படிப்பகம்

www.padippkam.com



போராட்டத்தைத் திரும்பவும் நடத்துவதன் மூலமே – வெற்றி கண்டு வருகிறோம்.''

''முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தில், நம்முடைய, அதாவது தொழிலாளிகளுடைய கட்சியிலிருந்து, முதலாளித்துவ பழக்கவழக்கங்களை களைந்திடுவது மிகவும் ''கடினமானதே''. முதலாளித்துவ தப்பெண்ணங்களால் படுமோசமாய் ஊழல் படுத்தப்பட்ட வழக்கமான நாடாளுமன்றத் தலைவர்களைக் கட்சியிலிருந்து விலக்குவதும் ''கடினமானதுதான்''. முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து வரும் (சொற்பமேயாயினும்) அத்தியாவசிய எண்ணிக்கையோரைப் பாட்டாளிவர்க்க கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படியச் செய்வதும் ''கடினமானதே''. தொழிலாளி வர்க்கத்திற்குரிய முழுத் தகுதியும் சிறப்பும் வாய்ந்த கம்யூனிஸ்ட் குழு ஒன்றை முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் நிறுவுவதும் ''கடினமானதுதான்'' பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் முதலாளித்துவப் பாராளுமன்ற வெற்றுப்பணிகளில் ஈடுபடாது வெகுஜனங்களுக்கிடையிலான பிரச்சாரம், கிளர்ச்சி நிறுவன ஒழுங்கமைப்பு ஆகிய அவசர அவசிய பணிகளில் கவனம் செலுத்தும்படி உறுதி செய்துகொள்வதும் ''கடினமானதுதான்.'' இவை யாவும் ''கடினமானவையே'' என்பதில் ஐயமில்லை. ரஷ்யாவில் இவை கடினமானவையாகவே இருந்தன. முதலாளித்துவ வர்க்கம் மேலும் பன்மடங்கு பலம் வாய்ந்த தாகவும், முதலாளித்துவ ஜனநாயக பாரம்பரியங்கள் மேலும் வலிமை மிக்கனவாகவும், இன்னபிற நிலைமைகளுக்குரிய மேலைய ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இவை மிகமிகக் கடினமானவையாகவே இருக்கும்.''

''ஆயினும் இந்தக் ' கடினமான பணிகள்'' யாவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போதும் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பிறகும் வெற்றிபெறும் பொருட்டு எப்படியும் பாட்டாளி வர்க்கம் கட்டாயமாய் தீர்வு காண வேண்டியிருக்கும் இதே வகையான பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில் குழந்தைப் பிள்ளையின் விளையாட்டே ஆகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் கோடானு கோடி விவசாயிகளுக்கும் சிறு உடைமையாளர்களுக்கும் லட்சக்கணக்கான அலுவலக சிப்பந்திகளுக்கும் அதிகாரிகளுக்கும் முதலாளித்துவ



அறிவுத்துறையினருக்கும் புனர்போதம் அளிப்பது, அவர்கள் எல்லோரையும் பாட்டாளி வர்க்க அரசுக்கும் பாட்டாளி வர்க்கத் தலைமைக்கும் கீழ்ப்படியச் செய்வது, அவர்களுடைய முதலாளியப் பழக்க வழக்கங்களையும் பாரம்பரியங்களையும் இல்லாதொழியச்செய்வது –மெய்யாகவே பிரமாண்டமான இந்தப் பணிகளுடன் ஒப்பிடுகையில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் உண்மையான பாட்டாளிவர்க்கக் கட்சியின் உண்மையான கம்யூனிஸ்டு குழு ஒன்றை உருவாக்குவது குழந்தைப் பிள்ளைக்குரியதென சொல்லத்தக்க அளவுக்கு எளியதே ஆகும்.''

''பாராளுமன்ற எதிர்ப்பாளர்களும், இடதுசாரி தோழர்களும், இது போன்ற சிறிய இன்னலை இப்போது சமாளிக்கத் தெரிந்து கொள்ளவில்லை என்றால், அவர்கள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைச் சாதிக்கும் திறனற்றவர்களாகவும் முதலாளித்துவ அறிவுத்துறையினரையும் முதலாளித்துவ ஏற்பாடுகளையும் விரிவான அளவில் கீழ்ப்படச் செய்யவும், புனரமைக்கவும் முடியாதவர்களாகவும் இருக்க வேண்டும். அல்லது அவர்கள் அவசர அவசரமாய் தமது பயிற்சியை நிறைவுறச் செய்ய வேண்டியதாகி, இந்த அவசரத்தின் விளைவாய் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்குத் தீங்கிழைப்போரும், வழக்கமானதை விட அதிகமான தவறிழைப்போரும், சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலான பலவீனத்தையும் திறனின்மையையும் வெளிப்படுத்து வோருமாகவே இருக்கவேண்டும் என்று துணிந்து கூறலாம்.''

''முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப்பட்டு, அதற்குப் பிற்பாடு சிறுவீதப் பொருளாதாரமும், சிறுவீதப் பண்ட உற்பத்தியும் பூரணமாக மறைந்தொழியும் வரை, முதலாளித்துவ சூழ்நிலையும், சொத்துடைமை பழக்க வழக்கங்களும், குட்டி முதலாளிய மரபுகளும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளும் வெளியிலும்– செயற்பாட்டுத் துறைகளில் ஒன்றே ஒன்றான பாராளு மன்றத் துறையில் மட்டுமின்றி தவிர்க்க முடியாதபடி சமூகச் செயற்பாட்டின் ஒவ்வொரு துறையிலும், எல்லா கலாச்சார, அரசியல் துறையிலும் விதிவிலக்கின்றி – பாட்டாளி வர்க்கப் பணிக்கு தீங்கிழைத்தே வரும், செயற்பாட்டின் ஏதேனும் ஒரு துறையில் எழும் 'விரும்பத்தகாத' பிரச்சினைகள் அல்லது

படிப்பகம்

www.padippkam.com



சங்கடங்களில் ஒன்றைப் புறக்கணிக்கவோ, அதிலிருந்து வேலியிட்டுப் பிரித்துக்கொண்டு விடவோ முயலுவது மிகப்பெரும் தவறாகும். பிற்பாடு இதற்காகக் கட்டாயம் வருந்தவேண்டியே வரும். விதிவிலக்கு இன்றி ஒவ்வொரு வேலைத்துறையிலும் செயற்பாட்டு அரங்கிலும் பாண்டித்தியம் பெறவும், எல்லா இன்னல்களையும் சமாளிக்கவும், முதலாளித்துவப் பழக்க வழக்கங்கள், பிற பாரம்பரியங்கள் யாவற்றையும் ஒழித்திடவும் நாம் கற்றுக்கொண்டாக வேண்டும். பிரச்சினையை வேறு எந்த விதமாக எடுத்துரைப்பதாயினும் அது வெறும் விளையாட்டாகவே சிறுபிள்ளைத்தனமாகவே இருக்கும்.''

**(LCW 31. P. 113-117)**

''பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தைத் தூற்றுவதால் மட்டுமோ, பாராளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதை நிராகரிப்பதால் மட்டுமோ ஒருவர் தமது புரட்சிகர மனோபாவத்தை வெளிப்படுத்திக் கொண்டு விடுவது மிக மிகச் சுலபம் – ஆனால் இந்தச் சுலபத்தின் காரணமாய் இது மிக,மிகக் கடினமான ஒரு பிரச்சினைக்குரிய தீர்வாகி விடுவதில்லை'' என்று 'இடதுசாரி கம்யூனிசம் இளம்பருவக் கோளாறு' என்ற நூலில் லெனின் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்து நிரந்தரப் புறக்கணிப்பை நியாப்படுத்துவதற்காக இன்னும் சில வாதங்கள் வைக்கப்படுகின்றன.

தேர்தலில் பங்கெடுப்பது என்பது கட்சியை வெளிப்படைக் கட்சியாக மாற்றிவிடும் என்றும் கமுக்கக் கட்சி முறைக்கு தேர்தல் பங்கெடுப்பு விரோதமானது என்றும் சிலர் கூறுகின்றனர்.

ரசிய போல்ஷ்விக் கட்சியின் வரலாற்றைப் படித்திருந்தால் ஒரு கமுக்கக் கட்சியே பாராளுமன்றப் பங்கெடுப்பையும் வெற்றிகரமாக நடத்தியிருப்பதையும் சட்டவிரோத முறைகளோடு சட்டப்பூர்வ முறையையும், கமுக்க முறைகளோடு வெளிப்படை முறைகளையும் இணைக்கும் கம்யூனிஸ்டுகளின் நடைமுறையில் ஒரு பகுதியே பாராளுமன்றப் பங்கேற்பு என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் படித்திருப்பது என்று சொல்வதைவிட பார்த்திருப்பது டாங்கே, ராஜேஸ்வரராவ், ராமமூர்த்தி கும்பலை மட்டுமே. அதனால்தான் அவர்களுக்கு இப்படி ஒரு சந்தேகம்



தோன்றுகிறது. திரிபுவாதிகளின் பாராளுமன்ற நடவடிக்கைகளை மட்டுமே பார்த்திருக்கும் அவர்கள் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளின் சர்வதேச அனுபவங்களைப் படிக்க வேண்டும்.

அடுத்து பாராளுமன்றத்தில் பங்கெடுப்பது என்றால் முதலாளித்துவச் சட்டங்களை ஏற்றுக்கொண்டுதானே போகமுடியும், அதை எதிர்த்து எப்படிப் போராடுவது? எனவே பாராளுமன்றத்தில் பங்கேற்பது திரிபுவாதம் என்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொண்ட பிற நாடுகளில் ஆயுதப்போராட்டம் பற்றி கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத்தில் பேசினர் என்றும் இந்தியாவில் அவ்வாறு பேசும் உரிமை இல்லை என்பதால் பங்கெடுப்பது தவறு என்றும் சிலர் கருதுகின்றனர்.

பாராளுமன்றத்தில் பங்குகொள்வது மட்டுமல்ல எந்த முதலாளித்துவ நிறுவனத்தை கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொள்வதென்றாலும் அதன் சட்ட வரம்புகளை ஒப்புக்கொள்வதன் மூலமே முடியும். அதனால் எல்லா முதலாளிய நிறுவனங்களையும் கம்யூனிஸ்டுகள் புறக்கணிப்பதில்லை. மாறாக பாராளுமன்றம் உள்ளிட்ட முதலாளிய நிறுவனங்களைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொள்வது என்பது கம்யூனிஸ்டுகளின் புரட்சிகர நோக்கங்களுக்காக சட்டவிரோத, தலைமறைவு வேலையுடன் சட்டப்பூர்வ, வெளிப்படை நடவடிக்கைகளை இணைக்கும் நடவடிக்கையில் ஒரு பகுதியே. இத்தகைய முறையன்றி பின்தங்கிய மக்களை அரசியல் போதம் பெறச் செய்வது இயலாது. அதாவது பாராளுமன்றம் உள்ளிட்ட முதலாளிய நிறுவனங்களை பயன்படுத்துவதின் நோக்கம் அவற்றை உடைத்தெறிவதன் அவசியத்தையும், சோவியத் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தையும் மக்களுக்கு போதிப்பதற்கு மட்டும்தானே தவிர அந்த நிறுவனங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு கட்டிக்காப்பதற்கல்ல. எனவே தான் பாராளுமன்றங்களில் செயல்படும் திரிபுவாதிகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை லெனின் தெளிவுபடுத்துகிறார். திரிபுவாதிகளுக்கு அவர்களுடைய பணிக்காக சலுகைகளும், மந்திரி பதவியும் கிடைக்கிறது. கம்யூனிஸ்டுகளுக்கு சிறைச்சாலையும், கடுங்காவலும், நாடுகடத்தலும் கிடைக்கிறது என்கிறார். எனவே பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதா, பங்கெடுப்பதா என்பதல்ல கேள்வி. மாறாக பாராளுமன்றத்தைப்

படிப்பகம்

www.padippkam.com



பயன்படுத்துவது திரிபுவாதிகளுடைய முறையிலா புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளின் முறையிலா என்பதே கேள்வி.

வேறு சிலர் கருதுவது போல் ஆயுதப் போராட்டம் பற்றி பேசுவதற்காகவே கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத்திற்கு போகிறார்கள் என்பதும் தவறு. மாறாக பாராளுமன்றம் என்பது வர்க்கப் போராட்டங்களின் காட்சியாக இருப்பதை லெனின் சுட்டிக்காட்டுகிறார். பல்வேறு வர்க்கங்களின், கட்சிகளின் போக்குகள் அங்கு வெளிப்படுகின்றன. அவற்றை அம்பலப்படுத்துவதற்கும், ஆளும் வர்க்கங்களின் ஆளும்வர்க்க நிறுவனங்களின் ஊழல்கள், லஞ்சங்கள், மோசடிகள் ஆகியவற்றை அதன் அரங்கிலிருந்தே அம்பலப்படுத்து வதற்கும் பாராளுமன்றத்தில் பங்கு கொள்வது அவசியம் என்கிறார் லெனின். அவர் கூறுகிறார்:

''தொழிலாளர்களையும், உழைக்கும் மக்களையும் வஞ்சிக்கும் ஊழல் மலிந்த இந்த முதலாளித்துவ நிறுவனத்தின் வஞ்சகத்தை அதன் மேடையிலிருந்தே அம்பலப்படுத்து வதற்காகவே கம்யூனிஸ்டுகளாகிய நாம் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் நுழைகின்றோம்.''

''தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளிகள் பயன்படுத்துகிற முதலாளித்துவ ஜனநாயகக் கருவிகளை உழைக்கும் மக்களில் (பாட்டாளிகள் மட்டுமின்றி அரைப் பாட்டாளிகளும் சிறு விவசாயிகளும்) கணிசமான தொகையினர் நம்புகிறவரை, தொழிலாளிகளின் பிற்பட்ட பகுதியினர் – குறிப்பாக பாட்டாளி வர்க்கமல்லாத உழைக்கும் மக்கள் – அதிக முக்கியத்துவமானதாகவும் செல்வாக்கானதாகவும் கருதுகிற அதே மேடையிலிருந்து இந்த வஞ்சகத்தை நாம் விளக்கவேண்டும்.''

''பாராளுமன்றத்திலே முதலாளித்துவ கட்சிகளுக்குள்ளும், குழுக்களுக்குள்ளும் உள்ள உறவுகள் அடிக்கடி தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. முதலாளித்துவ சமுதாயத்தில் எல்லா வர்க்கங்களுக்கு இடையேயும் நிலவும் உறவுகளை அவை பிரதிபலிக்கின்றன. எனவே தான் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் அதனுள் இருந்தே கம்யூனிஸ்டுகளாகிய நாம் கட்சிகள்பால் வர்க்கங்கள் கடைப்பிடிக்கும் போக்கு, பண்ணைத் தொழிலாளிகள்பால் நிலப்பிரபுக்கள் கடைப்பிடிக்கும் போக்கு,



ஏழை விவசாயிகள்பால் பணக்கார விவசாயிகள் கடைப்பிடிக்கும் போக்கு, அரசு ஊழியர்கள்பால், சிறு உடைமையாளர்கள்பால் பெருமுதலாளிகள் கடைப்பிடிக்கும் போக்கு இப்படியே அனைத்து வகைப் போக்குகளையும் அவற்றின் உண்மைகளையும் மக்களுக்கு அளிக்கவேண்டும்.''

''மக்களின் விருப்பத்தை வெளியிடுவதாகக் கூறிக்கொண்டு பணக்காரர்கள் மக்களை ஏய்ப்பதை மறைப்பதற்கு பயன்படுகின்ற, ஜனநாயகம் பற்றிய வாய்ச்சொற்களைப் பயன்படுத்தி தொழிலாளர்களை வஞ்சிப்பதற்குரிய சாதனமாக இருந்து வருகின்ற முதலாளித்துவப் பாராளுமன்றத்தை அதன் உள்ளிருந்தே கம்யூனிஸ்டுகளாகிய நாம் முரணின்றி அம்பலப்படுத்தவேண்டும்.''

**(LCW31.P.268)**

இவை போக நிரந்தரப் புறக்கணிப்பை ஆதரித்து, பாராளு மன்றப் பங்கேற்பை (பாராளுமன்றவாதத்தை அல்ல) எதிர்த்து மா.அ.க.வினர் வீரதீரமாக ஆனால் வேடிக்கையாக சிலவாதங்களை முன் வைத்துள்ளனர். அவர்களுடைய வாதங்கள் அனைத்தும் புறக்கணிப்பு வாதத்திற்கு மார்க்சிய சாயம் பூசும் முயற்சியே அன்றி வேறல்ல.

அவர்களுடைய அரசியல் தீர்மானம்(1977) கூறுகிறது. ''தேர்தலில் பங்கெடுக்க வேண்டும் என்பவர்கள் ரஷ்யப் பொதுவுடைமைக் கட்சி டூமாவில் என்ன நிலைமைகளில் எவ்வாறு பங்கேற்றது என்பதைக் கற்றுக்கொள்ள மறுக்கின்றனர். ஜனநாயக உரிமையற்ற எதேச்சதிகார ஜார் ஆட்சியில் 'மக்கள் பிரதிநிதி சபை கொடு' என்ற முழக்கத்தை, திட்டத்தை, இலக்கை அடிப்படை யாகக் கொண்ட செயலுத்தியை வைத்துப் போராடினர். ஆனால் அதிகாரமற்ற டூமா என்ற அமைப்பை ஜார் நிறுவினான். செயலுத்தியின் முழக்கத்தில் ஒரு பகுதியாவது நிறைவேறியதால் பங்குகொண்டு அதை அம்பலப்படுத்த வேண்டிய கடப்பாடு எழுந்தது.''

மா.அ.க.வினர் எப்படி வேண்டுமானாலும் வரலாற்றைப்புரட்டி எழுதுவார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. போல்ஷ்விக் கட்சியின் செயலுத்தி முழக்கத்தில் ஒரு பகுதி நிறைவேறியதால் டூமாவில் போல்ஷ்விக்குகள் பங்குகொண்டனர் என்றால் 1905லேயே (அப்போதுதான் டூமா நிறுவப்படுகிறது) பங்கு கொண்டிருக்கவேண்டும். ஆனால் போல்ஷ்விக்குகள் 1905 டூமாவைப் புறக்கணித்தார்கள்.

படிப்பகம்

www.padippkam.com



1906லும் புறக்கணித்தார்கள். 1905இல் புறக்கணித்தது சரியானது என்றும் 1906இல் புறக்கணித்தது தவறானது என்றும், 1907, 1908இல் புறக்கணித்தது நிவர்த்திக்க முடியாத அளவுக்கு கடினமான தவறு என்றும் லெனின் கூறினார். உண்மையில் போல்ஷ்விக்குகள் பாராளுமன்றத்தில் பங்கு கொண்டதற்கு காரணம் அதை 'அரசியல் மேடையாக' கம்யூனிஸ்டுகளின் புரட்சிகர நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவேயன்றி தங்கள் 'செயலுத்தியில் ஒரு பகுதி' நிறைவேறியதால் அல்ல. இது மா.அ.க.வினரின் கற்பனை, வரலாற்றுப் புரட்டு; உண்மையில் வரலாறு இதற்கு நேர் எதிரானது. ஜார் அமைத்த டூமா மக்களின் அதிகாரத்திற்கான புரட்சிகரப் போராட்டங்களை திசைதிருப்பிவிடும் நோக்கம் கொண்டது என்பதாலேயே 1905இல் போல்ஷ்விக்குகள் டூமாவைப் புறக்கணித்தனர் என்பதே உண்மை.

அடுத்து ''இன்று மக்கள் மேலும் மேலும் உள்ளூர் பிரச்சினைகளின் அடிப்படையில் தேர்தலைப் புறக்கணித்து வருகின்றனர். இந்த சமயத்தில் தேர்தலில் நிற்பது என்ற செயலுத்தி மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதாகும்'' என மா.அ.க. அரசியல் தீர்மானம் மேலும் கூறுகிறது.

மக்கள் உள்ளூர் பிரச்சினைகளின் அடிப்படையில் தேர்தலைப் புறக்கணிப்பது அமைதி வழிப்பட்ட பொருளாதாரப் போராட்டமே அன்றி வேறல்ல. மக்கள் தேர்தல், பாராளுமன்றம், அரசு ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விட்டதன் வெளிப்பாடோ, மக்கள் தமக்கென்று தனியாக சோவியத் வடிவிலான அரசியல் அதிகார அமைப்புகளை நிறுவிக்கொண்டதன் விளைவோ அல்ல, மாறாக அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை என்பதனால் வருவதாகும். இது ஜனநாயகத்திற்கு சாதகமான விசயமல்ல, மாறாக, இது பாசிஸ்டுகளுக்குச் சாதகமானதாகும். மக்களின் பொருளாதார வகைப்பட்ட புறக்கணிப்பை 'அரசியல் உணர்வின்' வளர்ச்சியாகக் காட்ட முயல்வது அப்பட்டமான பொருளாதாரவாதமே அன்றி வேறல்ல. இது மார்க்சியத்திற்கு விரோதமானது. மக்களை அரசியல் வகையில் தயார்படுத்த வேண்டிய அவசியத்தை, அதற்கான அரசியல் ஸ்தாபன போராட்ட வடிவங்களை முன்வைக்க வேண்டியதன் அவசியத்தை இது மறுத்து விடுகிறது. பாராளுமன்றத்தைக் கலைக்கவும் சோவியத் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவும் (சோவியத் இன்னும் உருவாகாத நிலையில்) மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பது போன்ற பொய்த் தோற்றத்தை இது ஏற்படுத்துகிறது.



அது மட்டுமல்ல சில இடங்களில் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கத் தொடங்கி விட்டதால் நிரந்தரப் புறக்கணிப்பே சரியானது என்பது லெனினிய நடைமுறைக்கு எதிரானதாகும். ரஷ்யாவில் (1917 அக்) ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு கூட போல்ஷ்விக்குகள் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கெடுத்ததைப் பற்றி லெனின் கூறுகிறார். அது அவசியமாக இருந்ததையும் – பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தவும் நடைமுறையில் சாதிக்கவும் அப்போது போல்ஷ்விக்குகள் பாராளுமன்றத்தில் பங்கெடுக்க வேண்டியிருந்தது என்றும்- அவர் கூறுகிறார். இதே கருத்தை ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகளுக்கும் வலியுறுத்துகிறார். தேர்தலில் பங்கெடுப்பது மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதாகும் என்றால் போல்ஷ்விக்குகள் பங்கெடுத்துக் கொண்டதும், ஆஸ்திரிய கம்யூனிஸ்டுகளை (அவர்கள் சோவியத்துகளை கட்டியிருந்த நிலையிலும்) பங்கெடுக்குமாறு லெனின் அறிவுறுத்தியதும் மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதற்காகவா? சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கங்களின் அனுபவம் பற்றி மா.அ.கவினருக்கு எதுவும் தெரியவில்லை என்பது மட்டுமல்ல, திரிபுவாதிகளுக்கும் மார்க்சிஸ்டுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் கூட தெரியாமல் குழம்புகின்றனர். திரிபுவாதிகளின் பாராளுமன்றப் பங்கேற்பு மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதாக இருப்பதைக் காணும் இவர்கள் கம்யூனிஸ்டுகள் பங்கெடுத்தாலும் மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதாகவே இருக்கும் எனக் கருதுகின்றனர். இவர்களால் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறையை திரிபுவாதிகளின் நடைமுறையிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை என்பது மட்டுமல்ல சர்வதேச அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவும் முடியவில்லை, லெனினியக் கோட்பாடுகளையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. இவர்களுடைய வாதத்தில் - மக்கள் புறக்கணிக்கத் தொடங்கி இருக்கும்போது பாராளுமன்றத்தில் பங்கேற்பது மக்களின் உணர்வைத் தடுத்து நிறுத்துவதாக இருக்கும் என்ற வாதத்தில்- புறக்கணிப்புவாதம் மட்டுமே இருக்கிறது. மக்கள் புறக்கணிக்கத் தொடங்கும் முன் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத்தில் பங்கெடுத்தால்–, இவர்களுடைய வாதப்படி அப்போது மக்கள் உணர்வே பெற முடியாமல் தடுப்பதாகவே இருக்கும். அதாவது நிரந்தரப் புறக்கணிப்புதான் இவர்களுடைய கோட்பாடு. இவர்கள் கூறும் காரணங்கள் அனைத்தும் அதை மெய்ப்பிக்கின்றவையே.

படிப்பகம்

www.padippkam.com



நிரந்தரப் புறக்கணிப்பிற்கு இன்னொரு காரணத்தையும் இவர்களே முன் வைக்கின்றனர். ''முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் பாராளுமன்ற நடைமுறையைத் தொகுத்து அதன் யோக்கியதையை வெளியிலிருந்தே அம்பலப்படுத்த முடியும்'' (மா.அ.க. அரசியல் தீர்மானம்)

மா.அ.க.வினரின் ''30 ஆண்டுக் கோட்பாட்டில்'' ஏதோ நியாயம் இருப்பது போல் தோன்றுகிறது. உண்மையில் இந்த வாதத்திலும் புறக்கணிப்புவாதம் மட்டுமே இருக்கிறது. முப்பது ஆண்டுகளாக இந்த நிறுவனம் இருந்து வந்தாலும் இன்னும் அம்பலப்படுத்தப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது என்ற (அவர்களே ஒப்புக் கொள்கின்ற) உண்மை மக்கள் அந்த நிறுவனத்தைக் கலைக்க இன்னும் தயாராகவில்லை என்பதையே காட்டுகிறது. கட்சி வலிமையாக இல்லாத இன்றைய நிலையில் சோவியத்துகளைக் கட்டுவது. அதை மக்கள் ஏற்றுக்கொள்வது என்ற பிரச்சினைக்கே இடமில்லை. எனவே மா.அ.க.வினரின் '30 ஆண்டு கோட்பாடு' ''பாராளுமன்றத்தைக் கலைக்கும் பலத்தை நாம் பெறாதவரை அதன் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வேலை செய்யவேண்டும்'' என்ற லெனினியக் கோட்பாட்டுக்கு எதிரான புறக்கணிப்புவாதக் கோட்பாடேயன்றி வேறல்ல.

மேலும் மா.அ.க. அரசியல் தீர்மானம் கூறுகிறது: ''தேர்தலைப் புறக்கணியுங்கள் என்ற முழக்கம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது, இம்முழக்கத்தை மக்கள்முன் வைக்கும்போது மாபெரும் எழுச்சியில் இறங்க வேண்டும், புரட்சி நுழைவாயிலில் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என சிலர் வாதிடுகின்றனர். ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய நமது நாட்டில் நாடு தழுவிய ஒரு பேரெழுச்சியின் போதுதான் இந்த முழக்கத்தை முன்வைக்கவேண்டும் என்பது தவறு. புரட்சிகர இயக்கம் ஆயுதப்போராட்டம் அளவு வளர்ந்துள்ள இடங்களில் இம்முழக்கம் மக்கள் பங்கேற்புடன் நேரடியான கிளர்ச்சிக்கான புறக்கணிப்புக்கானதாயிருக்கும், பிற இடங்களில் பிரச்சாரத்திற் கானதாக அமையும். எனவே ஒரு செயலுத்தி என்ற வகையில் நாடு தழுவிய அளவில் தேர்தலைப் புறக்கணியுங்கள் என்பது சரியே.''

மாபெரும் எழுச்சியின்போது, புரட்சியின் நுழைவாயிலில் இருக்கும் போதுதான் புறக்கணிக்கலாம் என்று சொல்கிறவர் களும், மா.அ.க.வினரும் ரசியாவின் 1905ஆம் ஆண்டு புரட்சி



யையும் ரசியப் புரட்சி வரலாற்றையும் தவறாகப் படித்திருக்கிறார்கள். 1905ஆம் ஆண்டு தேர்தலை போல்ஷ்விக்குகள் புறக்கணித்த தற்குக் காரணம் மக்கள் எழுச்சி மட்டுமல்ல மாறாக புரட்சிகர எழுச்சி ஒரு புரட்சிகர அரசை நிறுவுவதை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தபோது புதிதாக டூமாவை நிறுவுவதன் மூலம் புரட்சியின் திசையை மாற்றிவிட ஜார் திட்டமிட்டதை முறியடிப்பதற்காகவே தேர்தலைப் புறக்கணித்தார்கள் போல்ஷ்விக்குகள். 1917 அக்டோபர் புரட்சியின் போதும் அதற்கு முன்னும் பின்னும் கூட புரட்சிகர எழுச்சியே நிலவினாலும் போல்ஷ்விக்குகள் தேர்தலை புறக்கணிக்காமல் பங்கு கொண்டார்கள் என்பது வரலாறு. எனவே தேர்தல் புறக்கணிப்புக்கு புரட்சி எழுச்சியில் இருக்கிறதா இல்லையா என்பதல்ல அளவுகோல். மாறாக புரட்சியின் எழுச்சியை திசை திருப்பிவிடும் சாதனமாக பாராளுமன்ற தேர்தல் இருக்கிறதா இல்லையா என்பதேயாகும். புரட்சிகர எழுச்சியின்போது திசைதிருப்பும் சாதனமாய் இருந்தால் புறக்கணிக்கிறார்கள். பங்கெடுத்து அம்பலப்படுத்த வேண்டிய சாதனமாய் இருந்தால் பங்கெடுக்கிறார்கள் என்பதுதான் வரலாற்று உண்மை.

லெனின் கூறியிருப்பதை இவர்களுக்கு நாம் நினைவு படுத்துவோம்; ''சோவியத் குடியரசின் வெற்றிக்கு சில வாரங்களுக்கு முன்னதாகவும், இந்த வெற்றிக்கு பின்னும் கூட முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்றம் ஒன்றில் பங்கெடுத்துக் கொள்வதனால் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்திற்குத் தீங்கிழைப்பதற்கு பதிலாக இது போன்ற பாராளுமன்றங்கள் கலைக்கப்பட வேண்டியது எப்படி அவசியம் என்பதைப் பிற்பட்ட நிலையில் உள்ள வெகுஜனப் பகுதியோருக்கு நிரூபிப்பதற்கு நடைமுறையில் உதவுகிறது என்பதும், இப் பாராளுமன்றங்கள் நடைமுறையில் கலைக்கப்படுவதற்கு வகை செய்கிறது என்பதும், முதலாளித்துவப் பாராளுமன்ற முறையை அரசியல் வகையில் காலாவதி ஆக்குவதற்குத் துணைபுரிகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அனுபவத்தை உதாசீனம் செய்துவிட்டு, அதே நேரத்தில் கம்யூனிஸ்டு அகிலத்துடன் – தனது செயலுத்தியை சர்வதேச அளவில் (குறுகலான அல்லது தனிப்பட்டதான எந்த ஒரு தேசத்துக்குமான செயலுத்தியாயில்லாது சர்வதேச செயலுத்தியாய்) வகுத்துக்கொள்ள வேண்டிய கம்யூனிஸ்டு அகிலத்துடன் – இணைப்புரிமை கொண்டாடுவதானது மிகக் கடும் தவறிழைப்பதாகவும்

படிப்பகம்

www.padippkam.com



சர்வதேசியத்தை சொல்லளவில் ஏற்றுக்கொண்டு செயலில் கைவிடுவதாகவுமே அமைகிறது''

அடுத்து ''பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பது என்ற செயலுத்தியைக் கூட ஒரு திட்டமாகத்தான் உபயோகிக்க வேண்டும். ஒரு வளர்ச்சிப் போக்காக இருக்கக்கூடாது. எனவே தேர்தலைப் புறக்கணிப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட திட்டம், இலக்கு, முழக்கம் முன்வைக்கப்பட வேண்டும். அவ்வப்போது நிலவுகின்ற அரசியல் – பொருளாதார நிலைமைகளைத் தொகுத்து ஒரு செயலுத்தியின் பொதுத்திட்டம் வகுக்கப்படவேண்டும்'' என்று அதே அரசியல் தீர்மானம் கூறுகிறது.

இதில் புறக்கணிப்பை ஏற்கெனவே நிரந்தரமாகத் தீர்மானித்து விட்டு அதற்காக அவ்வப்போது திட்டம் தயாரிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்து அதிலிருந்து புறக்கணிப்பு பற்றிய தீர்மானத்தை எடுப்பதுதான் மார்க்சிய அடிப்படையிலான அணுகுமுறையாகும். புறக்கணிப்பு பற்றிய தீர்மானத்தை நிரந்தரமாகத் தீர்மானித்துவிட்டு அதற்கேற்ப செயலுத்தி திட்டம் வகுக்க வேண்டும் என்பது கால்களை வானத்தை நோக்கி நீட்டிக்கொண்டு நடக்க வேண்டும் என்பதாகும். இவ்வாறு கூறுவதில் புறக்கணிப்புவாதம்தான் வெளிப்படுகிறதே தவிர மார்க்சிய அடிப்படையிலான செயலுத்தி வெளிப்படவில்லை என்பது தெளிவு. இதுவும் லெனினியத்திற்கு விரோதமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அந்த அரசியல் தீர்மானம் மேலும் கூறுகிறது: ''கடந்த பத்தாண்டு காலமாக புரட்சிகர எழுச்சி உயர்ந்திருந்தபோதிலும் சரி, தாழ்ந்திருந்தபோதும் சரி பாராளுமன்ற ஜனநாயகத்தை மூலவுத்தி வகையிலும், செயலுத்தி வகையிலும் புறக்கணிப்பது என்ற முடிவுடன் செயல்பட்டு வந்தோம், இந்த முடிவுக்கு அடிப்படையாக இருந்த காரணங்கள் மாறாமல் அப்படியே இருக்கும்போதே நம் முடிவு களை மாற்றிக் கொள்ளும்படி முதலாளியப் புரட்சி ஒன்று நடந்து முடிந்து விட்டதா?''

முதலாளியப் புரட்சி நடக்காததால் தேர்தல் புறக்கணிப்பு சரியானது என்பது இதன் பொருள். அதாவது முதலாளியப் புரட்சி நடக்காத நாடுகளில் தேர்தலில் பங்கெடுக்கக் கூடாது என்கிறது இந்த



அரசியல் தீர்மானம். ஆனால் முதலாளியப் புரட்சி நடக்காத ரசியாவில் போல்ஷ்விக்குகள் பங்கு கொண்டார்கள் என்பது வரலாற்று உண்மை. எனவே தேர்தல் புறக்கணிப்புக்கு முதலாளியப் புரட்சி ஒன்று நடந்து விட்டதா இல்லையா என்பதை ஒரு அளவுகோலாக மா.அ.க.வினர் குறிப்பிடுவது வரலாற்று உண்மைக்கும், லெனினிய நடைமுறைக்கும் விரோதமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மேலும் முதலாளியப் புரட்சி நடப்பது என்பது ஒரு மூலவுத்தி விசயம். மூலவுத்தி வகையான நிகழ்ச்சி (முதலாளியப் புரட்சி) ஒன்று இந்திய வரலாற்றில் நடக்கும்வரை தேர்தலைப் புறக்கணிப்பது என்று தீர்மானித்த பின்னர் செயலுத்தி வகையில் தீர்மானிப்பதற்கு எதுவும் இல்லை. எனினும் செயலுத்தி வகையில் புறக்கணிப்பது எனத் தீர்மானித்ததாக இந்த அரசியல் தீர்மானம் வேடிக்கையாகக் குறிப்பிடுகிறது.

பாராளுமன்றம் மற்றும் தேர்தல் பற்றிய லெனினிய அணுகுமுறையை மறுத்து மா.அ.க.வினர் ஜுன் 1981 புரட்சிப்புயல் இதழில் மேலும் சில வாதங்களை புறக்கணிப்புவாதத்துக்கு ஆதரவாக முன்வைத்துள்ளனர்.

முதலாவதாக, சமச்சீராக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பயன்படும் போராட்ட வடிவங்களில் ஒன்றுதான் நாடாளுமன்றங்களில் பங்கேற்பது, அம்பலப்படுத்துவது என்கின்றனர். இது மா.அ.க.வினரின் மற்றொரு புதிய கண்டுபிடிப்பு. ஜார்கால ரஷ்யா சமச்சீரான முதலாளித்துவ வளர்ச்சிபெறாத நாடாக இருந்தபோது தான் அந்நாட்டில் போல்ஷ்விக்குகள் டூமாவில் பங்கெடுத்தார்கள். சீனம் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி பெற்ற காலனி, அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ நாடாக (முதலாளித்துவ நாடாக அல்ல) இருந்த போதுதான் தாம் பங்கெடுத்துக் கொள்வதற்கு ஒரு பாராளுமன்றம் இல்லை என்று மாவோ குறிப்பிட்டார். இவ்வுண்மைகளே மா.அ.க.வினரின் புதிய கண்டுபிடிப்பை(!?) மறுப்பதற்கு போதுமான ஆதாரங்களாகும்.

இரண்டாவதாக, ''ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய நாடுகளில் சில பகுதிகளில் அரசியல்; ஆயுதப்போராட்டங்களை வளர்த்து அதிகாரத்தை கைப்பற்றுவது, அதற்காக கட்சி தனது சக்திகளைக் குவித்து வேலை செய்வது என்பது புரட்சியின் துவக்கத்திலிருந்தே நிகழ்ச்சி

படிப்பகம்

www.padippkam.com



நிரலில் இருக்கிறது. இத்தகைய நிலையில் பாட்டாளி வர்க்கக் கட்சி சட்டப்பூர்வமான அந்தஸ்தை ஒருபோதும் பெறமுடியாது. ஆனால் தேர்தலில் பங்கேற்பது என்றால் சட்டப்பூர்வ அந்தஸ்து இருந்தால் தான் முடியும்'' என்று மா.அ.க.வினர் கூறுகின்றனர். அரசியல் போராட்டத்தின் உச்ச வடிவம் ஆயுதப் போராட்டம் என்றே மார்க்சிய– லெனினிய – மாவோ சிந்தனை போதிக்கிறது. ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய நாடுகளில்கூட (தளப்பிரதேசங்களைக் கட்டினாலும் கூட அங்கும்) அரசியல் போராட்டத்தின் உச்சவடிவமாகவே ஆயுதப் போராட்டம் இருக்க முடியுமேயன்றி – அரசியல் போராட்டத்துடன் ஆயுதப் போராட்டமும் துவக்கத்திலிருந்தே நிகழ்ச்சி நிரலில் இருக்க முடியாது. அவ்வாறு இருக்கும் எனக் கூறுவது அரசியல் போராட்டத்தின் உச்ச வடிவமே ஆயுதப் போராட்டம் என்ற மா–லெ–மா சிந்தனை போதிக்கும் உண்மையை மறுப்பதாகும். ஆயுதப் போராட்டம் தொடங்கப் போதுமான அளவு அரசியல் போராட்டம் கட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை மறுத்து அரசியல் போராட்டமின்றியே ஆயுதப் போராட்டம் தொடங்க முடியும், தொடங்க வேண்டும் என்று கூறும் இடது சந்தர்ப்பவாதிகளின் கோட்பாட்டை முன்னிறுத்துவதாகும்.

அது மட்டுமல்ல சட்டப்பூர்வமான அந்தஸ்து இருந்தால் தான் பாராளுமன்றத் தேர்தலில் பங்கேற்பது, அம்பலப்படுத்துவது முடியும் என மா.அ.க.வினர் கூறுகின்றனர். போல்ஷ்விக் கட்சி ரஷ்யாவில் டூமாவில் பங்கெடுத்த போது அது சட்டப்பூர்வ அந்தஸ்து பெற்ற கட்சி அல்ல. தலைமறைவாகவே செயல்பட்டது என்ற சாதாரண வரலாற்று உண்மையைக் கூட விடாப்பிடியாக பார்க்க மறுத்து மேற்கண்டவாறு வாதிடுவதன் மூலம் மா.அ.க.வினர் புறக்கணிப்பு வாதத்தை நியாயப்படுத்த முயலுவது வேடிக்கைதான்.

ஆரம்பத்திலிருந்தே ஆயுதப் போராட்டம் நிகழ்ச்சி நிரலில் இருக்கும் என்பதால் ஆளும் வர்க்கங்கள் கட்சியை சட்டப்பூர்வமாக இயங்க அனுமதிக்க மாட்டார்கள்; அதனால் சட்டப்பூர்வ தேர்தல்களில் பங்கேற்பது இயலாது என்பது மா.அ.க.வினர் கருத்து. இவர்களுடைய வாதப்படி கட்சி சட்டப்பூர்வமாக இயங்க ஆளும்வர்க்கங்கள் அனுமதித்தால் மட்டுமே சட்டப்பூர்வ முறையை – தேர்தலை – பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். இது அப்பட்டமான இடது சந்தர்ப்பவாதக் கருத்தாகும். ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக



தலைமறைவாக செயல்படும் கட்சி புரட்சியின் வெற்றிக்கு சட்டவிரோத முறைகளுடன் கூடவே சட்டப்பூர்வ முறைகளையும், தலைமறைவான நடவடிக்கைகளுடன் வெளிப்படையான நடவடிக்கைகளையும் இணைப்பது அவசியம் என லெனினியம் போதிக்கிறது. முதலாளித்துவ நாடாக இருந்தாலும் வேறு எந்த நாடாக இருந்தாலும் லெனினியத்தின் இப்போதனை முற்ற முழுக்க பொருந்துவதாகும். ஏற்றத் தாழ்வான முதலாளிய வளர்ச்சி பெற்ற ருஷ்யாவிலும் சரி, ஏற்றத் தாழ்வான வளர்ச்சி பெற்ற காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ சீனத்திலும் சரி, காலனிய, நவீன காலனிய வியட்நாமிலும் சரி இந்த லெனினிய உண்மைகள் பிரயோகிக்கப்பட்டதால்தான் புரட்சி வெற்றியடைய முடிந்தது. மா.அ.க.வினர் கூறுவது போல் கட்சி தலைமறைவாய் இருக்கும் போது சட்டப்பூர்வ முறைகளையும் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்திருந்தால் அங்கெல்லாம் புரட்சி வெற்றி பெற்றிருக்க முடியாது. இந்த லெனினிய போதனையை முதலாளிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என மா.அ.க.வினர் கூறுவது ரசிய, சீன, வியட்நாமியப் புரட்சி வரலாறுகள் போதிக்கும் உண்மைகளுக்கு எதிரானதும், லெனினிசத்தின் சர்வ தேசத் தன்மையை மறுப்பதும் ஆகும். சமச்சீரான வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளில் மட்டுமே சட்டப்பூர்வ முறைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும், வேண்டும் என்றும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுள்ள நாடுகளில் சட்டப்பூர்வமான முறைகளைக் (தேர்தல் பங்கேற்பு அல்லது புறக்கணிப்பு என்பது அதில் ஒன்றே) கட்சி பயன்படுத்திக் கொள்ள முடியாது, கூடாது என்றும் மா.அ.க.வினர் கூறுவது லெனினியத்திற்கு எதிரானது, வரலாற்று உண்மைகளுக்குப் புறம்பானதாகும்.

இறுதியாக, ''இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும், அரசியல் சட்டத்திற்கும் எதிராக எந்தவித உரையையும் இந்தியப் பாராளுமன்றத்தில் ஆற்ற முடியாது, பொதுக்கூட்டங்களில் கூட பேச முடியாது'' என்பதால் புறக்கணிப்புவாதம் சரியானது என்கின்றனர்.

இந்தியாவில் மட்டுமல்ல எந்த நாட்டிலும்– மிக வளர்ந்த முதலாளித்துவ நாட்டிலும் கூட அந்நாட்டின் பிரதேச ஒருமைப் பாட்டுக்கும் அரசியல் சட்டத்துக்கும் எதிராக உரையாற்ற அந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் சட்டப்பூர்வமாக அனுமதிக்கவில்லை. மா.அ.க.வினர் வாதப்படி பார்த்தால் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுள்ள

படிப்பகம்

www.padippkam.com



நாடுகளில் மட்டுமல்ல முதலாளித்துவ வளர்ச்சியில் முன்னேறிய நாடுகளில் கூட புறக்கணிப்புவாதமே சரியானதாகும். இது, தேர்தல் பங்கேற்பு என்ற போராட்டமுறை முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று அவர்களே முன்பு ஒப்புக்கொண்டதற்கு முரண்பாடாகும். லெனினிய உண்மைகளுக்குப் புறம்பானதாகும். எந்த நாட்டின் ஆளும் வர்க்கங்களும் அந்நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும், அரசியல் சட்டத்திற்கும் எதிராக அந்நாடுகளின் பாராளுமன்றங்களில் உரையாற்ற கம்யூனிஸ்டுகளை அனுமதிக்கும் என எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமே. எந்த நாட்டின் பாராளுமன்றத்தையும் தமக்குரிய பிரச்சார மேடைகளாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது கம்யூனிஸ்டு புரட்சியாளர்களின் பொறுப்பே அன்றி ஆளும் வர்க்கங்கள் கொடுக்கும் அனுமதி அல்ல. அதனால் தான் மிகப் பிற்போக்கான பாராளுமன்றங்களில் கூட கம்யூனிஸ்டுகள் பங்கேற்பதை லெனினியம் ஆதரிக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறும், பிற உலகப் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அனுபவமும் இதையே நிரூபிக்கின்றன. ஆனால் புறக்கணிப்புவாதச் சேற்றில் மூழ்கி இருக்கும் மா.அ.க.வினர் லெனினியத்தையோ, வரலாற்றுண்மை களையோ பார்க்க முடியாமல் போனதில் வியப்பில்லை. புறக்கணிப்புவாதத்தை (லெனினியத்தை அல்ல) உயர்த்திப் பிடித்து அதற்கு வரலாற்றுச் சான்றுகளைத் தேடுவதாலும், தத்துவார்த்த முலாம் பூச முயலுவதாலும் மா.அ.க.வினர் தவிர்க்கமுடியாத முரண்பாடுகளில் சிக்கிக்கொண்டு விழிக்கிறார்கள்.

குறிப்பு :LCW என்று குறிப்பிட்டுள்ளது Lenin Collected Works (லெனின், தொகுப்பு நூல்கள் - மாஸ்கோ பதிப்பு) என்பதையும் அதனுடன் குறிக்கப்பட்டுள்ள எண்கள் தொகுதி எண்ணையும் அதன் பக்க எண்ணையும் குறிக்கும்.

# பாராளுமன்றப் பல்லக்கில் 'மார்க்சிஸ்ட்' கட்சி

படிப்பகம்

www.padippkam.com

# 1

# மார்க்சிஸ்ட் கட்சியின் மக்கள் ஜனநாயகம் மந்திர வித்தைக்காரனின் மாயாஜாலப் பிரகடனம் *

'மார்க்சிஸ்ட்' கட்சியின் பாராளுமன்றவாதத்தை அம்பலப் படுத்தும் போதெல்லாம் பாராளுமன்றத்தை புரட்சிகரமான முறையில் பயன்படுத்துவதற்கும், பாராளுமன்றத்தை அம்பலப்படுத்துவதற்குமே அதில் பங்கெடுப்பதாக அக்கட்சியின் தலைவர்கள் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள். சமீபத்தில் 'மனஓசை'-க்கு திருவாளர் திருத்தல்வாதி ஆரோக்கியசாமி செம்மலரில் எழுதிய பதில்களும், மார்க்சிய-லெனினிய அமைப்புகளுக்கு திருவாளர் திருத்தல்வாதி பி.ஆர்.பரமேஸ்வரன் தீக்கதிரில் எழுதிய பதிலும் அக்கட்சியின் பாராளுமன்றவாதத்தை புரட்சிகரமானது எனக் கூறும் முயற்சியேயாகும்.

பாராளுமன்றத்தைப் புரட்சிகரமான முறையில்-புரட்சிகர செயலுத்தி என்ற முறையில்-கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று லெனின் போதித்திருக்கிறார் என்பது உண்மையே; ஆனால் பாராளுமன்றத்தைப் புரட்சிகரமான முறையில் பயன்படுத்துவதற்கு முதல் நிபந்தனை என்னவெனில் அதைப் பயன்படுத்தும் கட்சி புரட்சிகரமானதாக இருக்க வேண்டும் என்பதாகும். ஒரு திருத்தல்வாதக் கட்சியால் பாராளுமன்றத்தைப் புரட்சிகரமான முறையில் பயன்படுத்த முடியாது.

ஒரு கட்சி பாராளுமன்றத்தில் பங்கெடுக்கும் காரணத்தால் அது ஒரு திருத்தல்வாதக் கட்சி என்று மார்க்சியவாதிகள் கூறமாட்டார்கள். ஆனால் ஒரு திருத்தல்வாதக் கட்சியால் பாராளுமன்றத்தைப் புரட்சிகரமான முறையில் பயன்படுத்த முடியாது என்பதை அனைவருமே ஒப்புக்கொள்வர்.

* புரட்சிக்கனல் 1985 ஏப்ரல் இதழில் வெளிவந்த கட்டுரை

படிப்பகம்

www.padippkam.com



இந்தியாவில் சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதை நோக்கமாகவும், மக்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதை உடனடி இலட்சியமாகவும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் பிரகடனப்படுத்தியிருப்பதால் அக்கட்சி ஒரு உண்மையான புரட்சிகரக் கட்சி என அக்கட்சியில் உள்ள பெரும்பாலான அணிகள் நம்புகிறார்கள். ஆனால் அக்கட்சியின் திட்டத்தை சற்று பரிசீலித்தால் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மக்கள் ஜனநாயகம் மந்திரவித்தைக்காரனின் மாயாஜாலப் பிரகடனம் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அதாவது பாம்புத்தோல் உயிர் பெற்றுவரப்போவதாக மாயாஜாலப் பிரகடனம் செய்துவிட்டு வேறு சில வித்தைகள் காட்டி கூடியிருப்பவர்களிடம் பணம் கறந்தவுடன் பாம்புத் தோலைச்சுருட்டி கூடையில் வைத்துக் கொண்டு சென்றுவிடும் மந்திரவித்தைக்காரனைப் போன்றது தான் 'மார்க்சிஸ்ட்' கட்சி என்பதை அதன் திட்டத்தை சற்று பரிசீலித்தாலே புரிந்துகொள்ள முடியும்.

## இலட்சியம் மக்கள் ஜனநாயகம், பாதுகாப்பது பாராளுமன்ற ஜனநாயகம்..

'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் 87 கூறுகிறது: "................சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் நிர்மாணிக்கும் தன்னுடைய நோக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது............ ஒரு சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பது என்ற நோக்கத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில்............ தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் சகல உண்மையான நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஆகியவற்றின் கூட்டணியை அஸ்திவாரமாகக் கொண்ட மக்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதை உடனடி இலட்சியமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் முன்வைக்கிறது. இந்த இலட்சியமானது முதலாவதாக இன்றைய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அரசையும் அரசாங்கத்தையும் அகற்றும்படி கோருகிறது. மேலும், உறுதியான தொழிலாளி–விவசாயி கூட்டணியின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உள்ள ஒரு மக்கள் ஜனநாயக அரசையும் அரசாங்கத்தையும் ஸ்தாபிப்பதன் மூலம் முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசாங்கத்தை அகற்றவும் கோருகிறது......................"

இதன் மூலம், தனது நோக்கம் நாட்டில் சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பது, உடனடியாக மக்கள் ஜனநாயகத்தை



நிறுவுவது என 'மார்க்சிஸ்ட்' கட்சி பிரகடனப்படுத்துகிறது. ஆனால், இதை எவ்வாறு சாதிப்பது? மக்கள் ஜனநாயக அரசையும் அரசாங்கத்தையும் நிறுவ வேண்டுமானால் இன்று ஆளும் வர்க்கங்களின் அரசியல் அமைப்பாய் இருக்கும் முதலாளிய பாராளுமன்றத்தின் போலி ஜனநாயகத் தன்மையை மக்களுக்கு அம்பலப்படுத்துவதும், இந்த பாராளுமன்ற அரசியல் அமைப்பைக் கலைத்துவிட்டு புதிய மக்கள் ஜனநாயக சோவியத் அரசமைப்பை நிறுவ வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதும், அதற்காக மக்களை அணிதிரட்டிப் போராடுவதும் அவசியமாகும். கட்சியின் பணிகள் அனைத்தும் இத்திசையிலேயே திட்டமிட்டு அமைக்கப்பட வேண்டும். ஆனால், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம்72 இதற்கு நேர்மாறாக பின்வருமாறு கூறுகிறது. "நாடாளுமன்ற அமைப்பிற்கும், ஜனநாயகத்திற்கும் **உழைப்பாளி மக்களிடமிருந்தும், அவர்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கும் கட்சிகளிடமிருந்தும் பயமுறுத்தல் வருவதில்லை.** பயமுறுத்தல் சுரண்டும் வர்க்கங்களிடமிருந்தே வருகின்றது. இப்படிப்பட்ட பயமுறுத்தல்களுக்கு எதிராக நாடாளுமன்ற ஸ்தாபனங்களையும் ஜனநாயக ஸ்தாபனங்களையும் மக்களின் நலனை முன்னிட்டு பாதுகாக்க வேண்டியது முக்கியத்துவம் உடையதாகும்." (அழுத்தம் எமது)

முதலாளிய நாடாளுமன்ற அமைப்பிற்கு உழைப்பாளி மக்களிடமிருந்தும் அவர்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கும் கட்சிகளிடமிருந்தும் ஆபத்து வருவதில்லை என்பது உண்மையா? உண்மை இதற்கு நேர் எதிரானதாகும். ஏனெனில் பாட்டாளி வர்க்கக் கட்சி ஏற்கெனவே வரலாற்று வகையில் காலாவாதியாகிவிட்ட பாராளுமன்ற அமைப்பை அரசியல் வகையிலும் காலாவதியாகச் செய்வதையும் அதைக் கலைத்துவிட்டு அவ்விடத்தில் உழைக்கும் மக்களின் சோவியத் வடிவ மக்கள் ஜனநாயக அரசமைப்பை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டு மக்களிடையே செயல்படுகிறது. மேலும் முதலாளித்துவ வர்க்கங்களுக்கு ஜனநாயகம் தரக்கூடிய, மக்களுக்கு போலியான ஜனநாயக நிறுவனமாகத் திகழ்கின்ற பாராளுமன்ற அமைப்பு மக்களின் நலன்களைக் காக்க வக்கற்ற நிறுவனம் என்பதையும் அதை உழைக்கும் மக்கள் தூக்கியெறிந்து விட்டு தமக்கான அரசியல் அதிகார நிறுவனங்களை நிறுவுவார்கள் என்பதையும் வரலாற்று அனுபவங்கள் எடுத்துரைக்கின்றன. எனவே, முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்புக்கு உழைக்கும் மக்களும் அவர்களுடைய நலனைப் பிரதிபலிக்கும் கட்சியுமே இறுதி முடிவு கட்டக்கூடியவர்களாவர்.

படிப்பகம்

www.padippkam.com



முதலாளித்துவ அமைப்புகளிலேயே அதிக ஜனநாயகம் உள்ள அமைப்பு பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையே. ஆனால், பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ அமைப்புக்குள்ளாகவே அதிக ஜனநாயகமுள்ள அமைப்புக்காகப் போராடவில்லை. அது எவ்வளவு ஜனநாயகம் உள்ளதாக இருப்பினும் முதலாளி வர்க்க சர்வாதிகாரமே என்பதை பாட்டாளி வர்க்கம் புரிந்து கொண்டுள்ளது. எனவே, எப்போதுமே பாட்டாளி வர்க்கம் பாராளுமன்ற ஜனநாயகத்துக்காக அல்ல உழைக்கும் மக்களுக்கு முழு ஜனநாயகம் தரக்கூடிய சோவியத் ஜனநாயகத்துக்கே போராடுகிறது. பாராளுமன்ற அமைப்பை – அது இருக்குமாயின்–இப்போராட்டத்தில் ஒரு பிரச்சார மேடையாய் பயன்படுத்திக்கொள்கிறது. சுரண்டும் வர்க்கங்களால் பாராளுமன்ற அமைப்புக்கு பயமுறுத்தல் வரும்போது கூட அதைக் காக்கும் கடமையை பாட்டாளி வர்க்கம் எடுத்துக்கொள்வதில்லை. முதலாளித்துவ அரசியல் அமைப்பில் ஏற்பட்டிருக்கும் அத்தகைய நெருக்கடியான நிலைமைகளில் பாட்டாளி வர்க்க அரசியல் அமைப்பை மக்களிடையே எடுத்துச் செல்வதில் தீவிர கவனம் செலுத்துகிறது.

(உ-ம்.) ரஷ்யாவில் புலிஜியன் டூமாவை ஜார் அறிமுகப்படுத்தியபோது அந்த முதலாளிய நிறுவனத்தைப் புறக்கணித்துவிட்டு தற்காலிக புரட்சி அரசு, அரசியல் நிர்ணய சபை என்ற முழக்கத்தையே ரஷ்ய போல்ஷ்விக் கட்சி முன்வைத்தது. 1917 பிப்ரவரி புரட்சியில் நிலப்பிரபுத்துவ அரசு தூக்கி எறியப்பட்டு முதலாளிய அரசு அமைந்தபோது அதைத்தூக்கி எறிந்துவிட்டு தொழிலாளர்–விவசாயிகள் ஜனநாயக சர்வாதிகாரம் அமைக்க போல்ஷ்விக் கட்சி அறைகூவல் விடுத்தது. சீனத்தில் பாராளுமன்றமே இல்லாதபோது அத்தகைய பாராளுமன்ற அமைப்புக்காக போராட வேண்டும் என சென்ட் யூ ஷி முன்வைத்த போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, அதை நிராகரித்து தொழிலாளர் - விவசாயிகள் குடியரசு என்ற முழக்கத்தை முன்வைத்தது.

ஆனால், இதற்கு மாறாக 'மார்க்சிஸ்ட்' கட்சித் திட்டம் பாராளுமன்ற அமைப்புக்கு உழைக்கும் மக்களிடமிருந்தும் அவர்களுடைய கட்சியிடமிருந்தும் அச்சுறுத்தல் வராது என உறுதியளிக்கிறது. அது மட்டுமல்ல, அவ்வமைப்புக்கு சுரண்டும் வர்க்கங்களிடமிருந்து பயமுறுத்தல் வரும்போது அதைக் காப்பதை தனது முக்கிய கடமையாக எடுத்துக் கொண்டுள்ளது.



மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதை தனது உடனடி இலட்சியம் என பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் அதை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்ற அமைப்பின் போலி ஜனநாயகத் தன்மையை அம்பலப்படுத்துவது, அதைக் கலைக்க வேண்டியதன் அவசியத்தையும் சோவியத் ஜனநாயக அரசமைப்பை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் மக்களுக்கு பிரச்சாரம் செய்து அணிதிரட்டுவது ஆகியவற்றை முக்கிய கடமையாக எடுத்துக் கொள்வதற்கு பதிலாக பாராளுமன்ற அமைப்புக்கு உழைக்கும் மக்களிடமிருந்தும், சுரண்டும் வர்க்கங்களிடமிருந்தும் ஆபத்து வராமல் காப்பதை தனது முக்கிய கடமையாக எடுத்துக் கொண்டுள்ளது.

இந்த முக்கிய கடமையை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கு மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவது உடனடி இலட்சியம் என்ற பிரகடனம் அதன் திருத்தல்வாதத்தை மூடிமறைப்பதற்கான கவசம் என்பதைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

## இடதுசாரி ஜனநாயக முன்னணி பாராளுமன்றவாத முன்னணியே

'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் 112 கூறுகிறது. "துரிதமாக மாறிக் கொண்டிருக்கும் அரசியல் நிலைமைகளின் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டு பல்வேறு இடைக்கால கோஷங்களைக் கட்சி உருவாக்க வேண்டிவரும் என்பது தெளிவு. தற்போதைய ஆளும் வர்க்கங்களைப் பதவியிலிருந்து அகற்றி தொழிலாளி வர்க்க, விவசாய மக்களின் உறுதியான கூட்டணியை அஸ்திவாரமாகக் கொண்ட ஒரு புதிய ஜனநாயக அரசையும் அரசாங்கத்தையும் ஸ்தாபிக்க வேண்டிய கடமையை மக்கள் முன்வைத்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் மக்களுக்கு உடனடி நிவாரணத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு குறைந்தபட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை உருவாக்க சகல வாய்ப்புகளையும் கட்சி பயன்படுத்தும்."

இந்த அடிப்படையிலேயே இடதுசாரி ஜனநாயக முன்னணி என்ற முழக்கத்தை 'மார்க்சிஸ்ட்' கட்சி முன் வைத்துள்ளது. அக்கட்சியின் விஜயவாடா காங்கிரஸ் அரசியல் தீர்மானம் இன்றைய அரசியல் நிலைபற்றி "பாராளுமன்ற முறையைக் கைவிட்டு ஒரு எதேச்சதிகார முறைக்கு ஆளும் வர்க்கங்கள் முயன்று

படிப்பகம்

www.padippkam.com



கொண்டிருக்கின்றன" என்று வரையறுத்துள்ளது. இந்நிலையில்—பாராளுமன்ற முறைக்கு ஆளும் வர்க்கங்களிடமிருந்து ஆபத்து ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலையில்—ஆளும் வர்க்கங்களின் எதேச்சதிகார முயற்சிக்கு எதிராக பாராளுமன்ற அமைப்பைப் பாதுகாப்பது (திட்டம் 72-ன்படி) கட்சியின் மிக முக்கியக் கடமையாகிறது. இக்கடமையை இடதுசாரி ஜனநாயக முன்னணி மூலம் 'மார்க்சிஸ்ட்' கட்சி நிறைவேற்றும். மேலும் மத்தியிலும், மாநிலத்திலும், பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் பெரும்பான்மை பெற்று மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு குறைந்தபட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை இடதுசாரி ஜனநாயக முன்னணி மூலம் 'மார்க்சிஸ்ட்' கட்சி அமைக்கும்.

இத்தகைய அரசாங்கம் அமைவதற்கு ஒரே நிபந்தனை பெருவாரியான மக்கள் இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கு வாக்களிக்கவேண்டும் என்பதுதான். எனவே 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பணிகள் அனைத்தும் இடதுசாரி ஜனநாயக முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகள் பெறுவதையும் பெரும்பான்மை பெறுவதையும் நோக்கமாகக் கொண்டே முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் பாராளுமன்ற அமைப்பை அம்பலப்படுத்துவதும், அதைக் கலைக்க வேண்டியதன் அவசியத்தையும் புதிய சோவியத் ஜனநாயக அரசை அமைக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரச்சாரம் செய்வதும் இடதுசாரி ஜனநாயக முன்னணி பெறும் வாக்குகளையும் பாராளுமன்ற சீட்டுகளையும் பாதிக்கும் என்பதால் 'மார்க்சிஸ்ட்' கட்சி இத்தகைய பிரச்சாரங்களையும் எதிர்க்கிறது. மாறாக அதிக வாக்குகளும் சீட்டுகளும் பெறுவதற்கு உதவியாக இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசுகள் மாநிலங்களில் செய்த சாதனைப் பட்டியல்களை விளம்பரப்படுத்துகிறது. மாநிலங்களில் மேலும் அதிக சாதனை செய்ய இயலாததற்கு அதிகாரம் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்துள்ளதே காரணம் எனக் கூறுகிறது. இவ்வாறு பிற மாநிலங்களிலும், மத்தியிலும், சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் இடதுசாரி ஜனநாயக முன்னணியை பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கும்படி மக்களைக் கோருகிறது. இவ்வாறு மக்கள் ஜனநாயகத்தை அமைப்பதை தனது உடனடி இலட்சியமாகக் கட்சித் திட்டத்தில் அறிவித்துள்ள 'மார்க்சிஸ்ட்' கட்சி, அதை நோக்கி முன்னேறுவதற்கு சாதகமாக பாராளுமன்ற அமைப்பை அதன் போலி ஜனநாயகத் தன்மையை அம்பலப் படுத்துவது, அதை கலைத்துவிட்டு சோவியத் ஜனநாயக அமைப்பை



நிறுவுவதன் அவசியத்தை மக்களுக்குப் பிரச்சாரம் செய்து அணி திரட்டுவது ஆகியவற்றுக்கான சாதனமாக இடதுசாரி ஜனநாயக முன்னணியைப் பயன்படுத்தாது; மாறாக மக்களுக்கு கூடுதல் நன்மை செய்ய பாராளுமன்றத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி பெரும்பான்மை பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும்; பாராளுமன்ற அமைப்பின் மீது நம்பிக்கையூட்டும்; ஒரு பாராளுமன்ற அரசாங்கம் அமைக்க வேண்டியதன் 'அவசியத்தையும்' பாராளுமன்ற அரசியல் அமைப்பைக் கட்டிக்காக்க வேண்டியதன் 'அவசியத்தையும்' இடதுசாரி ஜனநாயக முன்னணி மூலம் 'மார்க்சிஸ்ட்' கட்சி மக்களுக்கு உணர்த்தும்.

குறைந்தபட்சம் இடதுசாரி ஜனநாயக முன்னணி மத்தியில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று அமைச்சரவை அமைக்கும்வரை 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நடைமுறை மேற் கண்டவாறுதான் இருக்கும்.

மக்கள் ஜனநாயகம் அமைப்பதை உடனடி இலட்சியமாகக் கட்சித் திட்டம் பிரகடனப்படுத்தியிருந்தாலும்கூட அதற்கு எதிரான திசையில் உள்ள கட்சியின் மேற்கண்ட நடைமுறையை (அது திட்டம் 112-ன்படி அமைந்திருப்பதால்) அது எவ்வகையிலும் பாதிப்பதில்லை.

சிலர் இடதுசாரி ஜனநாயக முன்னணி ஒரு புரட்சிகர ஐக்கிய முன்னணி என்றும் இத்தகைய ஐக்கிய முன்னணி இன்றி எந்த நாட்டிலும் புரட்சி இயக்கம் வெற்றி பெற்றதில்லை என்றும் கூற முற்படுகிறார்கள். இவர்கள் புரட்சிகர ஐக்கிய முன்னணிக்கும், பாராளுமன்றவாத ஐக்கிய முன்னணிக்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் இவ்வாறு கூறுகிறார்கள்.

சீனத்தில் கூட மக்கள் ஜனநாயக முன்னணி கட்டப்பட்டு மக்கள் ஜனநாயகப் புரட்சி நடத்தி முடிக்கப்படும் முன்னதாகவே மாறிவந்த அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இடைக் கட்டங்களில் முழக்கங்களும் ஐக்கிய முன்னணிகளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் முன்வைக்கப்பட்டன. வடக்குப் படையெடுப்பின்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கோமிண்டாங் கட்சியுடன் இணைந்து நின்று போரிட்டது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டியது.

இவ்வாறு வெற்றிபெற்ற ஒவ்வொரு நாட்டுப் புரட்சி இயக்கமும் இடைக் கட்டங்களில் பல்வேறு ஐக்கிய முன்னணிகளைக் கட்டியே புரட்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ளன. ஆனால், இத்தகைய ஐக்கிய

www.padippkam.com



முன்னணிகள் அனைத்தும் ஆளும் வர்க்கங்களின் அதிகார அமைப்பை நொறுக்கி எறிந்துவிட்டு ஐக்கிய முன்னணி வர்க்கங்களின் புரட்சிகர ஜனநாயக அரசியல் அதிகார அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இதனால், இத்தகைய ஐக்கிய முன்னணிகள் இயல்பாகவே ஆயுதப் போராட்டங்களுக்கான ஐக்கிய முன்னணியாக அமைந்தன.

ஆனால், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் திட்டம் ஏகாதிபத்திய மூலதனத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் முற்றாக ஒழிப்பது பற்றி படோடோபமாக அறிவிக்கும் அதே நேரத்தில் இன்றைய ஆளும் வர்க்கங்களின் அதிகார வர்க்க அரசியல் அமைப்பை வீழ்த்துவது பற்றியோ பாராளுமன்ற அமைப்பின் போலித்தனத்தை அம்பலப்படுத்திக் கலைப்பது பற்றியோ, 'இடதுசாரி ஜனநாயக சக்திகளின்' புரட்சிகர ஜனநாயக அரசியல் அமைப்பை நிறுவுவது பற்றியோ எதுவும் கூறாது மவுனம் சாதிக்கிறது. ஏனெனில் இதற்கு அத்தகைய நோக்கம் எதுவும் இல்லை. இதன் நோக்கம் எல்லாம் மத்தியிலும், மாநிலத்திலும் பாராளுமன்ற, சட்டமன்றங்களில் பெரும்பான்மை பெறுவதும் அமைச்சரவை அமைப்பதும்தான். இதற்கு ஆயுதப் போராட்டங்கள் தேவையில்லை. பெரும்பான்மையான மக்களின் வாக்குச் சீட்டுகள்தான் தேவை என்பதால் இடதுசாரி ஜனநாயக முன்னணி என்பது ஒரு பாராளுமன்ற முன்னணியாக, ஓட்டுப் பொறுக்குவதற்கான முன்னணியாக, இருக்கிறதேயன்றி புரட்சிகர ஐக்கிய முன்னணியாக ஆயுதப் போராட்டத்திற்கான ஐக்கிய முன்னணியாக இல்லை.

## தேசிய ஜனநாயக அரசு என்ற குருச்சேவ் திருத்தல்வாதக் கோட்பாடு:

'மார்க்சிஸ்ட்' கட்சித் திட்டம் கூறுகிறது: "நாம் இருக்கக்கூடிய சரித்திர ரீதியான சூழ்நிலைமைகளில் சக்திவாய்ந்த உலக சோசலிச அமைப்பின் துரித வளர்ச்சியினாலும் உலக முதலாளித்துவ அமைப்பு வேகமாக சீர்குலைந்து வருவதினாலும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள, அபிவிருத்தியடையாத நாடுகளில் சுதந்திரம் கிடைத்த பிறகு ஒரு தேசிய ஜனநாயக அரசு அமைப்பதற்கான புதிய, பெரிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன. வளர்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர் வர்க்கம் அந்த அரசின் மீது படிப்படியாக தன் தலைமையை



ஸ்தாபிப்பதன் மூலம் நாட்டை முதலாளித்துவமற்ற பாதையில் அழைத்துச் சென்று முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தாவிக்கொண்டு சோசலிசத்திற்குப் போய்ச் சேரமுடியும்."

தேசிய ஜனநாயக அரசு என்று இவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள்? அந்தந்த நாடுகளில் இருக்கும் முதலாளியக் கட்சிகளின் 'முற்போக்குப்' பிரிவும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து மத்திய அமைச்சரவையில் பதவி ஏற்பதைத்தான் இவர்கள் தேசிய ஜனநாயக அரசு என்று வர்ணிக்கிறார்கள். இவ்வாறு பதவியேற்றபின் படிப்படியாக கம்யூனிஸ்ட் கட்சி அந்த முதலாளியக் கட்சிகளின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவி - இவ்வாறு பாட்டாளி வர்க்கத் தலைமையை அந்த அரசு மீது நிறுவி, முதலாளித்துவமற்ற பாதையில் நாட்டை சோசலிசத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி அழைத்துச் செல்லுமாம்! சோசலிச முகாம் துரித வளர்ச்சியடைந்து வருவதாலும், உலக முதலாளித்துவம் சீர்குலைவுக்கு உள்ளாகி இருப்பதாலும், பின்தங்கிய சுதந்திரமடைந்த நாடுகளில் இத்தகைய புதிய, பெரிய வாய்ப்புகள் உள்ளனவாம். இது புரட்டல்வாதி குருச்சேவ் முன்வைத்த சமாதான சகவாழ்வு, சமாதானப் போட்டி, சமாதான மாற்றம் என்ற திருத்தல்வாதக் கருத்தை அடியொற்றி டாங்கே, ஜோஷி ஆகிய திருத்தல்வாதிகள் 1961 விஜயவாடா கட்சிப் பேராயத்தில் முன்வைத்த வர்க்க சமரச, பாராளுமன்றவாத கொள்கையேயாகும். இத்தகைய தேசிய ஜனநாயக அரசு அமைக்க பாராளுமன்ற அமைப்பை அம்பலப்படுத்தவோ, அதிகாரவர்க்க அரசு எந்திரத்தை நொறுக்கி எறியவோ, அதற்காக மக்களை ஐக்கிய முன்னணி கட்டி ஆயுதமேந்திய போராட்டத்திற்கு அணிதிரட்டவோ வேண்டியதில்லை. 'முற்போக்கு' முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்து ஓட்டுப் பொறுக்குவதற்கான கூட்டணிகள் அமைத்தாலே போதும், எல்லாம் பழைய அரசியல் அமைப்புக்குள்ளாகவே சமாதான வழிமுறைகள் மூலமாகவே, பாராளுமன்றப் பாதை என்னும் ராஜபாட்டை வழியே, முதலாளித்துவமற்ற பாதை வழியே நாட்டை சோசலிசத்திற்கு, கம்யூனிஸ்டு கட்சி அழைத்துச் சென்றுவிடும். நாட்டில் சோசலிசத்தைக் கொண்டுவருவதற்கு எவ்வளவு சுலபமான, மென்மையான, சுகமான பாதை!

இத்தகைய திருத்தல்வாதப் பாதையை பின்தங்கிய நாடுகளுக்கான பொதுவான கோட்பாடாக 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது திட்டத்தில் (84) போதிக்கிறது. அதே நேரத்தில் (திட்டம் - 85இல்) 'இந்தியாவில் உள்ள நமக்கு இத்தகையதொரு நிலைமை

படிப்பகம்

www.padippkam.com



தடுக்கப்பட்டிருக்கிறது' என்பதால் நமது நாட்டுக்கு தேசிய ஜனநாயகப் பாதையை நிராகரிப்பதாகக் கூறி, உண்மையில் அதை மூடி மறைப்பதற்கான கவசமாக மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதை தனது உடனடி இலட்சியமாக (திட்டம் 87) முன் வைக்கிறது!

## புரட்சிக்குச் சமாதானப்பூர்வ வழியில் முயற்சி

'மார்க்சிஸ்டு' கட்சியின் திட்டம் மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதை உடனடி இலட்சியமாக அறிவித்திருக்கிறது. ஆனால், மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவது அவர்கள் கூறும் தேசிய ஜனநாயகத்தை நிறுவுவதைப் போன்றதல்ல. அவர்கள் கூறும் தேசிய ஜனநாயகம் ஒரு பாராளுமன்ற கூட்டணி அமைச்சரவை அமைப்பதைக் குறிக்கிறது. ஆனால், மக்கள் ஜனநாயகம் என்பது முதன்மையாக நிலவும் அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு புதிய ஜனநாயக அரசு அமைப்பை – பாராளுமன்ற போலி ஜனநாயக அதிகார வர்க்க ஆட்சி முறையைத் தகர்த்தெறிந்துவிட்டு தொழிலாளி - விவசாயிகள் கூட்டை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு வர்க்கங்களின் சோவியத் வடிவ மக்கள் ஜனநாயக அரசு அமைப்பை – நிறுவுவதைக் குறிக்கிறது. இதை சமாதானப்பூர்வமான முறையில் நிறைவேற்ற ஆளும் வர்க்கங்கள் அனுமதிக்காது. மக்களின் புரட்சிகர பலாத்காரத்தின் மூலமே, ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலமே மக்கள் ஜனநாயகத்தை நிறுவமுடியும். எனவே, மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதை தனது உடனடி இலட்சியமாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சி, நிலவும் அரசியல் அமைப்பை நொறுக்கி எறிந்துவிட்டு புதிய ஜனநாயக அரசியல் அமைப்பை நிறுவுவதற்காக மக்களை அரசியல் - ஆயுதப் போராட்டங்களுக்கு தயார்படுத்துவதையே தனது பணியாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை மார்க்சியத்தின் அரிச்சுவடி தெரிந்தவர்கள் கூட கூறிவிடுவார்கள்.

ஆனால், 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் இதற்கு நேர்மாறாக கூறுகிறது: "மக்கள் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதையும், சோசலிசத்திற்கு மாறிச் செல்வதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சமாதானப்பூர்வமான வழிமுறைகள் மூலம் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறது."

மார்க்சியத்தின் அரிச்சுவடி மட்டுமே தெரிந்தவர்கள் கூட மா-லெ விஞ்ஞானப்பூர்வ முடிவின் அடிப்படையில் மக்கள் ஜனநாயகத்தை சமாதானப்பூர்வமான முறையில் சாதிக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியும்போது, 'மார்க்சிஸ்ட்' கட்சி மா-லெ விஞ்ஞானப்பூர்வ முடிவுகளுக்கு நேர் எதிராக சமாதானப்பூர்வ வழிமுறைகள் மூலம் நிறைவேற்ற முயற்சிப்பதாகக் கூறுகிறது.



இவ்வாறு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டம் மக்கள் ஜனநாயகப் புரட்சியை தனது உடனடி இலட்சியமாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் அதே வேளையில் அதற்கு எதிராக 1. பாராளுமன்ற அமைப்புகளைக் கட்டிக்காப்பது, 2. மக்களின் உடனடி நிவாரணங்களுக்காக பாராளுமன்ற அரசாங்கத்தை அமைப்பது, 3. பின்தங்கிய நாடுகளுக்கான பொதுக்கோட்பாடாக 'தேசிய ஜனநாயக அரசு' என்ற கருத்தோட்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பது, 4. மக்கள் ஜனநாயகத்தை சமாதானப்பூர்வமான வழிமுறைகளில் நிறைவேற்ற முயற்சிப்பது ஆகிய கொள்கைகளையும் கொண்டிருக்கிறது. மக்கள் ஜனநாயகப் புரட்சியுடன் எவ்வித ஒட்டுறவும் இல்லாத, அதற்கு எதிராக மக்களை வழிநடத்திச் செல்கின்ற இந்த திருத்தல்வாத, பாராளுமன்றவாதக் கொள்கைகள்தான் அக்கட்சியின் நடைமுறை வழிகாட்டிகள்.

எனவே, 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திட்டத்தில் உள்ள மக்கள் ஜனநாயகம் வெறும் சொல்லலங்காரம் மட்டுமே; மந்திரவித்தைக்காரனின் மாயாஜாலப் பிரகடனம் மட்டுமே; உண்மையில் அக்கட்சியின் நடைமுறைகள் அனைத்தும் மக்கள் ஜனநாயக நோக்கத்துடன் அல்ல, அக்கட்சித் திட்டம் பின்தங்கிய நாடுகளுக்கான பொதுவழியாக ஏற்றுக்கொண்டிருக்கும் 'தேசிய ஜனநாயக' நோக்கத்துடனேயே இசைவுள்ளதாக உள்ளன. 'தேசிய ஜனநாயக அரசு' அமைப்பதற்கு பாராளுமன்ற அமைப்பு காக்கப்பட வேண்டும். அதன் மீது மக்கள் நம்பிக்கை வளரவேண்டும். முதலாளித்துவக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டு அமைக்கப்படவேண்டும். மேலும், பாராளுமன்ற வழியிலேயே சமாதானப்பூர்வமாகவே மக்களை வழிநடத்த வேண்டும். இதைத்தான் 'மார்க்சிஸ்ட்' கட்சி நடைமுறைப்படுத்தி வருகிறது. இவ்வாறு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நடைமுறை தேசிய ஜனநாயக நோக்கத்துடன் இசைவுடையதாய் இருப்பதால் தான் 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கும் நேரடியாக தேசிய ஜனநாயக நோக்கத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் ராஜேஸ்வரராவ் கட்சிக்கும் 'இடதுசாரி ஜனநாயக முன்னணி' பொது மேடையாக உள்ளது. ✪

படிப்பகம்

www.padippkam.com



# 2

# பாராளுமன்றத்தில் 'மார்க்சிஸ்டு'களின் புரட்சி *

'மார்க்சிஸ்ட்' கட்சி அமைக்கும் தேர்தல் கூட்டணிகள், அமைச்சரவைகள், இடதுசாரி ஜனநாயக முன்னணி இவை அனைத்தும் மக்கள் ஜனநாயகப் புரட்சியை நோக்கமாகக் கொண்டவை என்றும், அதன் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்றும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் சார்பில் பரமேஸ்வரன் விளக்கம் தருகிறார்.

மக்கள் ஜனநாயகப் புரட்சியை நடத்த வேண்டுமானால் இன்று ஆளும் வர்க்கங்களின் அரசியல் அமைப்பாய் இருக்கும் முதலாளிய பாராளுமன்றத்தின் போலி ஜனநாயகத் தன்மையை மக்களுக்கு அம்பலப்படுத்துவதும், இந்த பாராளுமன்ற அரசியல் அமைப்பைக் கலைத்துவிட்டு, அதிகார வர்க்க ஆட்சி அமைப்பை நொறுக்கி எறிந்து விட்டு, புதிய மக்கள் ஜனநாயக சோவியத் அரசமைப்பை நிறுவ வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதும், அதற்காக மக்களை அணி திரட்டிப் போராடுவதும் அவசியமாகும். கட்சியின் பணிகள் அனைத்தும் இத்திசையிலேயே திட்டமிட்டு அமைக்கப்பட வேண்டும்.

'மார்க்சிஸ்ட்' கட்சியின் மந்திரிசபை பங்கேற்பு, தேர்தல் கூட்டு, இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆகிய அனைத்தும் மேற்கண்ட அடிப்படையில் அமைந்துள்ளனவா?

மேற்கு வங்க 'மார்க்சிஸ்ட்' முதலமைச்சர் ஜோதிபாசு கூறுகிறார்: "கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள அனைத்து மக்களும் இந்த அரசு நமக்கான அரசு, முன்பு இருந்த அரசு போல இந்த அரசு போலீசையும் நிர்வாகத்தையும் நமக்கு எதிராக பயன்படுத்தாது. இந்த அரசினால் நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். அதனால் மகத்தான ஆதரவு அளிக்கிறார்கள்..... இன்று நிர்வாகமும் போலீசும் ஏழை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஆதரவாக இருக்கின்றன." (சென்னையில் ஜோதிபாசு பேருரை, செப்.-1978 இ.க.க.(மா) தமிழ் மாநிலக்குழு வெளியிடு)

'மார்க்சிஸ்ட்' ஜோதிபாசு மந்திரியானவுடன், அரசின் வர்க்கத்தன்மையே மாறிவிட்டதாம். போலீசும், நிர்வாகமும் மக்களுக்கானதாக மாறிவிட்டதாம். 'மார்க்சிஸ்ட்' கட்சி மந்திரிசபை அமைத்தும், அம்மாநில போலீசும் நிர்வாகமும் மக்களுக்கு ஆதரவாக இருந்தும் இன்னும் அங்கே புரட்சிகரமான சமுதாயம் அமையவில்லையே என்ற கேள்வி எழும் முன்பாக அக்கட்சியின் பொதுச்செயலர் நம்பூதிரிபாட் அதற்கு பதில் கூறுகிறார்.

"1957-59இல் கேரளாவிலும், 1967-69இல் கேரளா, மே.வங்கத்திலும், மீண்டும் இப்போது கேரளா, மே.வங்கம், திரிபுராவிலும் தேர்தல் மூலம் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது என்ற தவறான கருத்து கேள்வியாளருக்கு இருப்பதாகத் தெரிகிறது. அது சரியல்ல. அரசு அதிகாரத்தின் மையமாக உள்ள பலாத்காரக் கருவிகள் – இராணுவம், போலீசு, நீதிமன்றங்கள், அதிகார வர்க்கத்தை இயக்கும் ஆட்சி இயந்திரம் ஆகியவை – மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது." (கம்யூனிஸ்ட் இயக்கமும் நாடாளுமன்ற அரசியலும், பக். 1)

"விஞ்ஞான ரீதியான அர்த்தத்தில் அவை (மாநில அமைச்சரவைகள்) அரசு அமைப்புகள் அல்ல; ஆட்சி அமைப்புகள் மட்டுமே. அரசு அமைப்பின் மையமான போலீஸ், இராணுவம், நீதிமன்றம், சிறை, ஆகியவற்றின் மீது உண்மையான கட்டுப்பாடு மத்திய அரசுக்கு; மேலெழுந்தவாரியான அதிகாரம் மாநில அரசுக்கு என்பதுதான் இந்திய அரசியல் சட்ட அடிப்படையிலான நிலை" (மேற்படி நூல் பக். 8)

எனவே நம்பூதிரிபாட் கருத்துப்படி அரசு அமைப்பின் மையமான போலீஸ், இராணுவம், நீதிமன்றம், சிறை ஆகியவற்றின் மீது உண்மையான கட்டுப்பாட்டைப் பெறவேண்டுமானால் மாநில அமைச்சரவைகளைக் கைப்பற்றினால் போதாது; தேர்தலில் மத்திய அமைச்சரவையைக் கைப்பற்றவேண்டும்.

* புரட்சிக்கனல் 1985 நவம்பர் இதழில் வெளிவந்த கட்டுரை

படிப்பகம்

www.padippkam.com



அதை நோக்கமாகக் கொண்டே அவர்கள் தேர்தலில் பங்குகொள்கிறார்கள். அமைச்சரவையில் பங்கெடுக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை சட்டமன்றங்களும் பாராளுமன்றங்களும் போலி ஜனநாயகத் தன்மை கொண்டதோ, அதிகார வர்க்க அரசு எந்திரம் மக்கள் விரோதமானதோ அல்ல. இவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்துவிட்டால் அவை உண்மையான ஜனநாயகத் தன்மை கொண்டதாகவும், மக்களுக்கு உதவும் கருவியாகவும் மாறிவிடும். எனவே அவற்றை மக்கள் முன் அம்பலப்படுத்தும் பிரச்சினையோ, அதிகாரவர்க்க அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு சோவியத் ஜனநாயக அரசமைப்பை நிறுவுவதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் பிரச்சினையோ எழவேயில்லை. எனவே இவர்கள் அப்படி செய்யவில்லையே என்று யாரும் குற்றம் கூற முடியாது. ஆனால் இவர்களுக்கும் மக்கள் ஜனநாயகப் புரட்சி நோக்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை மட்டும் யார் வேண்டுமானாலும் நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

அடுத்து, ஐக்கிய முன்னணி பற்றி 'மனஓசை' எழுதியிருந்ததை விமர்சித்து தேர்தல் கூட்டு கூட ஐக்கிய முன்னணிதான் என்றும் பிரதான எதிரியைத் தனிமைப்படுத்தி வீழ்த்துவதற்காகவே அத்தகைய ஐக்கிய முன்னணி கட்டப்படுகிறது என்றும் கூறுகிறார் பரமேஸ்வரன்.

ஐக்கிய முன்னணி, தேர்தல் கூட்டு ஆகியவை பற்றி புரட்டல்வாத அறிவை மட்டுமே பெற்றிருக்கும் பரமேஸ்வரன் மார்க்சிய அடிப்படையிலான விளக்கமறியாமல் இருப்பதில் வியப்பில்லை.

ஐக்கிய முன்னணி என்பது பிரதான எதிரியை எதிர்க்கும் வர்க்கங்கள் குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு போராடி வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அமைப்பாகும்; ஒவ்வொரு கட்டத்திலும் பிரதான எதிரியைக் கணித்து, குறிப்பான அரசியல், பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து புரட்சிகரக் கட்சி இத்தகைய ஐக்கிய முன்னணியைக் கட்டுகிறது.

தேர்தல் கூட்டு என்பது அத்தகையதல்ல. தேர்தல் பங்கேற்பைப் போலவே அதுவும் பாராளுமன்றத்தை அம்பலப் படுத்துவதற்கான வழிமுறையேயாகும். தேர்தல் மூலம் மந்திரி சபையைக் கைப்பற்றுவதையே அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகக் கருதும் புரட்டல்வாதிகளுக்கு தேர்தல் கூட்டு கூட ஒரு ஐக்கிய முன்னணியாகத் தெரிவதில் வியப்பில்லை.



இது ஒருபுறம் இருக்க, 'மார்க்சிஸ்ட்' பரமேஸ்வரன் தனது கட்சி தேர்தல் கூட்டணி அமைப்பது புரட்சிகரமான முறையில்தான் என்று நிரூபிக்க லெனின் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதியதை மேற்கோள் காட்டுகிறார்.

1919இல் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வந்த தொழிற்கட்சிக்கு எதிராக கன்சர்வேடிவ் கட்சியும், லிபரல் கட்சியும் கூட்டுச் சேர்ந்தன. கன்சர்வேட்டிவ் கட்சியும், லிபரல் கட்சியும் மக்கள் வெறுப்புக்குள்ளான கட்சிகளாகவும், தொழிற்கட்சி மக்கள் ஆதரவு பெருகி வரும் – தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புள்ள கட்சியாகவும் இருந்தன. இந்நிலையில் கன்சர்வேடிவ் கட்சிக்கும், லிபரல் கட்சிக்கும் இடையிலான கூட்டுக்கு எதிராக தொழிற் கட்சியுடன் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் கூட்டணி அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும், மூன்றாவது அகிலத்தின் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தேர்தல் பங்கேற்பு என்ற அடிப்படையிலும் கம்யூனிஸ்டுகள் ஐக்கியப்பட வேண்டும் என்றும் லெனின் எழுதினார்.

கன்சர்வேடிவ் கட்சியையும், லிபரல் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் லாயிட் ஜார்ஜையும், சர்ச்சிலையும் தோற்கடிக்க தொழிற்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஹெண்டர்சன், ஸ்னோடன் ஆகியோருக்கு கம்யூனிஸ்டுகள் உதவ வேண்டும் என்றார் லெனின். அவர் எழுதினார், "பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற செயல்பாட்டில் பங்கு கொண்டு ஆக வேண்டும். பாராளுமன்றத்தின் உள்ளிருந்து கொண்டு ஹெண்டர்சன், ஸ்னோடன் அரசாங்கத்தின் விளைவுகளைத் தொழிலாளி மக்கள் நடைமுறையில் கண்டுணருவதற்குத் துணை புரிய வேண்டும். லாயிட்ஜார்ஜ், சர்ச்சில் இவர்களது ஒன்றுபட்ட சக்தியைத் தோற்கடிக்க ஹெண்டர்சன்களுக்கும், ஸ்னோடன்களுக்கும் உதவ வேண்டும்." (லெனின், தமிழ் தேர்வு நூல் தொகுதி 10, பக். 290)

தொழிற்கட்சி தேர்தலில் வெற்றி பெற கம்யூனிஸ்டுகள் உதவ வேண்டும் என்று லெனின் கூறியதன் நோக்கம் தொழிற்கட்சி மீது நம்பிக்கை கொண்டிருக்கும் மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தொழிற்கட்சி அமைக்கும் அரசாங்கத்தின் மக்கள் விரோதத் தன்மையைப் புரிந்து கொள்ள உதவ வேண்டும் என்பதாகும். இதைப்

படிப்பகம்

www.padippkam.com



பிரச்சாரத்தின் மூலம் மட்டும் செய்யமுடியாது. மேலும் மற்றொரு நோக்கமும் இருந்தது. அதாவது, மக்களிடையே தொழிற்கட்சிக்கு பெரும் செல்வாக்கு ஏற்பட்டிருந்த நிலையில் அதனுடன் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் கூட்டு அமைத்துக் கொள்வது புரட்சிகர அரசியலை - திருத்தல்வாத அரசியலை அல்ல - மக்களிடையே எடுத்துச் செல்ல கூடுதல் வாய்ப்புள்ளதாக அமையும் என்பதும் ஆகும்.

எனவேதான், கன்சர்வேடிவ் கட்சிக்கும் லிபரல் கட்சிக்கும் எதிராக தொழிற்கட்சியுடன் தேர்தல் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ளும்படி ஆலோசனை கூறிய லெனின், அந்தத் தேர்தல் கூட்டணிக்குப் பின்வரும் 'சமரச' தேர்தல் உடன்பாட்டை முன்வைக்க வேண்டும் என்றார். "நாம் கூட்டாகச் சேர்ந்து லாயிட் ஜார்ஜ்களுக்கும் கன்சர்வேடிவ்களுக்கும் இடையிலான கூட்டணியை எதிர்த்துப் போராடுவோம். தொழிற்கட்சிக்கும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளின் விகிதாச்சாரத்தில் (தேர்தல்களில் அல்ல விசேசமானதொரு வாக்கெடுப்பில்) பாராளுமன்ற இடங்களை நாம் பகிர்ந்து கொள்ளலாம். கிளர்ச்சி, பிரச்சாரம், அரசியல் செயல்பாடு இவற்றில் எப்போதும் போல முழுநிறை சுதந்திரம் பெற்றவர்களாகவே இருக்கலாம். இக்கடைசி நிபந்தனை இல்லாமல் நாம் ஒரு கூட்டணிக்கு உடன்பட முடியாது. ஏனெனில் அவ்வாறு செய்வது துரோகச் செயலாகிவிடும். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் ஹெண்டர்சன்களையும், ஸ்னோடன்களையும் அம்பலப்படுத்துவதற்கு பூரண சுதந்திரம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்." (மேற்படி நூல் பக். 299)

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்தல் கூட்டணி அமையுமானால் இது கம்யூனிஸ்டுகளுக்கு ஆதாயமே. ஏனெனில் இது தொழிற்கட்சி அரசாங்கத்தை விரைவில் அமைக்க அதற்கு உதவுவதுடன் அதை எதிர்த்து சிறிதும் தயங்காமல், தவறாமல் கம்யூனிஸ்டுகள் செய்யும் பிரச்சாரத்தை மேலும் விரைவில் மக்கள் புரிந்து கொள்ள இதன் மூலம் கம்யூனிஸ்டுகள் உதவ முடியும்.

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் தொழிற்கட்சி உடன்பாட்டுக்கு வரவில்லையானால் அது கம்யூனிஸ்டுகளுக்கு இன்னும் கூடுதலான ஆதாயமே என்றார் லெனின். ஏனெனில் தொழிற்கட்சி தொழிலாளி வர்க்க ஒற்றுமையை விட முதலாளிகளுடனான தமது நெருங்கிய ஒற்றுமையையே மேலானதாகக் கருதுகிறது என்பதை இதன் மூலம் அம்பலப்படுத்த முடியும்.



அப்போது கூட கம்யூனிஸ்டுகள் (தொழிற்கட்சிக்கு பாதகமற்ற முறையில்) தாம் வேட்பாளரை நிறுத்தும் தொகுதிகள் தவிர பிற தொகுதிகள் அனைத்திலும் தொழிற்கட்சிக்கே வாக்களிக்கும்படி கோருவார்கள். இதுவும் கம்யூனிசப் புரட்சிப்பணிக்கு ஆதாயம் தருவதேயாகும் என்பதை விளக்கி லெனின் பின்வருமாறு கூறுகிறார்: "மக்களை அணுகுவதும்கூட, தாம் கூறுவதை செவிகொடுத்து கேட்கச் செய்வதும்கூட தற்போது பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு மிகவும் கடினமாய் உள்ளது. நான் கம்யூனிஸ்டாக அவர்கள் முன்நின்று ஹெண்டர்சனை ஆதரித்தும், ஜார்ஜை எதிர்த்தும் வாக்களிக்கும்படி அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேனாகில் கட்டாயம் அவர்கள் நான் கூறுவதைச் செவி கொடுத்துக் கேட்பார்கள். மக்களுக்குப் புரியும்படியான முறையில் விளக்கிக் கூறுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். சோவியத்துகள் பாராளுமன்றங்களைக் காட்டிலும் எப்படிச் சிறந்தவை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சர்ச்சிலின் சர்வாதிகாரத்தை (முதலாளித்துவம் 'ஜனநாயகம்' என்ற பெயரில் மூடி மறைக்கப்பட்டிருப்பது இது) காட்டிலும் எப்படி சிறந்தது என்பதை மட்டுமின்றி, என்னுடைய வாக்கைக் கொண்டு நான் ஹெண்டர்சனுக்கு ஆதரவாக இருக்க விரும்புவது தூக்குக்கயிறு தூக்கிலிடப்பட்ட மனிதனுக்கு ஆதரவாக இருப்பது போன்றதாகும் என்பதையும் நான் விளக்கிக் கூற சந்தர்ப்பம் கிடைக்கும். அரசாங்கத்தை நிறுவும் நிலையை ஹெண்டர்சன் நெருங்க நெருங்க நான் சொல்வது சரி என்பது மேலும், மேலும், தெளிவாக நிரூபிக்கப்படும் வெகுசனங்களை என் பக்கத்துக்கு வரச்செய்யும். ஹெண்டர்சன்கள், ஸ்னோடன்கள் இவர்களது அரசியல் அழிவைத் துரிதப்படுத்தும்." (மேற்படி நூல், பக். 297-98)

கம்யூனிஸ்டுகள் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கேற்பதன் நோக்கமும் தேர்தல் கூட்டணி அமைப்பதன் நோக்கமும் பாராளுமன்ற இடங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பதோ, மந்திரி சபையைக் கைப்பற்ற வேண்டும் என்பதோ அல்ல. அதற்கு மாறாக சோவியத் அதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் குறித்து மக்களுக்கு அதிகபட்சமாக பிரச்சாரம் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதும் மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் முதலாளிய பாராளுமன்ற அமைப்பின் மக்கள் விரோதத் தன்மையைப் புரிந்துகொள்ள உதவ வேண்டும் என்பதுமேயாகும் என்பதை லெனின் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

www.padippkam.com



எனவேதான், பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் தொழிற் கட்சியுடன் தேர்தல் கூட்டு அமைக்கும்போது கிளர்ச்சி, பிரச்சாரம், செயல்பாடு ஆகியவற்றில் முழுநிறை சுதந்திரம் பெற்று இருக்க வேண்டும்; கூட்டாளி கட்சியையே கூட முழுமையாக அம்பலம் செய்வதற்கு முழுமையான சுதந்திரம் பெற்று இருக்க வேண்டும்; அவ்வாறு இல்லையாயின் அது முழுதுரோகம் என்றும் மேலும் இந்தத் தேர்தல் சந்தர்ப்பங்களை சோவியத் அமைப்புகளைப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்வதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் லெனின் குறிப்பிட்டார். இது தேர்தல் கூட்டுகளில் புரட்சிகரக் கட்சி கடைப்பிடிக்கும் செயலுத்தி ஆகும்.

ஆனால், பிரட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு லெனின் தேர்தல் கூட்டு பற்றி எழுதியதை மேற்கோள் காட்டும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தேர்தல் கூட்டுகள் எப்படிப்பட்டவை? அவை புரட்சிகர செயலுத்தி வகைப்பட்டதா அல்லது முதலாளியக் கட்சிகளின் செயலுத்தி வகைப்பட்டதா?

பாராளுமன்ற, சட்டமன்றங்களில் கூடுதல் இடம் பெறுவதையும், மந்திரி சபையைக் கைப்பற்றுவதையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டு 'மார்க்சிஸ்ட்' கட்சி சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களில் பங்கெடுக்கிறது; தேர்தல் கூட்டணிகளை அமைக்கிறது. சோவியத் அதிகாரம் பற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதோ, பாராளுமன்றத்தை அம்பலப்படுத்தும் வாய்ப்பாகப் பயன்படுத்துவதோ அதன் நோக்கமாக இல்லை. இது அக்கட்சியின் ஆவணங்களையும், நடைமுறைகளையும் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட வேண்டிய விசயமாக இல்லை. எனவே, 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பாராளுமன்ற பங்கேற்பும், தேர்தல் கூட்டும் சந்தேகத்திற்கு இடமின்றி முதலாளியக் கட்சிகளின் செயலுத்தி வகைப்பட்டதுதான். இதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. புரட்சிகரக் கட்சிகள் மட்டுமே புரட்சிகர செயலுத்திகளைக் கையாளமுடியும். திரிபுவாதக் கட்சியால் முதலாளிய செயலுத்தியையே கையாளமுடியும்.

பிரதான எதிரியாகிய இந்திரா காங்கிரசுக்கு எதிராகவே பாராளுமன்ற பங்கேற்பு, தேர்தல் கூட்டு அமைப்பதாகவும் இதில் சந்தர்ப்பவாதமாக 'மார்க்சிஸ்ட்' கட்சி நடந்து கொண்டதில்லை என்றும் அக்கட்சியில் சிலர் கருதலாம். இந்திரா காங்கிரசுக்கு எதிராகவே தேர்தல் பங்கேற்பு, தேர்தல் கூட்டு என்பதில் 'மார்க்சிஸ்ட்' கட்சி உறுதியாக இருக்கிறது என்பதை உண்மை என்று ஏற்றுக்கொண்டால்



கூட அக்கட்சி எக்காலத்திலும் தேர்தல் நடவடிக்கைகளை சோவியத் அதிகாரத்தைப் பற்றி பிரச்சாரம் செய்வதற்கான வாய்ப்பாகவும், பாராளுமன்ற 'ஜனநாயகத்தை' அம்பலப்படுத்தவும் பயன்படுத்தியதே இல்லை என்ற உண்மை அக்கட்சி ஒரு முதலாளியக் கட்சியே என்பதை அம்பலப்படுத்திவிடுகிறது.

அடுத்து, 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இடதுசாரி ஜனநாயக முன்னணி ஒரு புரட்சிகர முன்னணியல்ல, ஒரு பாராளுமன்றவாத முன்னணியே என்று கூறப்படுவதை மறுத்து அவருடைய கட்சி ஆவணங்களிலிருந்து மேற்கோள் கொடுத்திருக்கிறார் பரமேஸ்வரன். "இடதுசாரி ஜனநாயகச் சக்திகளின் ஒற்றுமைக்கான போராட்டமானது மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகும்" என்று அவர்களுடைய கட்சியின் ஜலந்தர் காங்கிரஸ் தீர்மானம் கூறியிருப்பதால், இடதுசாரி ஜனநாயக முன்னணி ஒரு பாராளுமன்றவாத முன்னணியல்ல ஒரு புரட்சிகர முன்னணியே என ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்.

நாம் அவரிடம் கேட்கிறோம். இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கான திட்டம் ஒன்றை 'மார்க்சிஸ்ட்' கட்சியின் 11வது காங்கிரஸ் (விஜயவாடா காங்கிரஸ்) அரசியல் தீர்மானம் முன்வைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் 'மார்க்சிஸ்ட்' கட்சி இடதுசாரி ஜனநாயக முன்னணியைக் கட்டுகிறது. இத்திட்டம் நிலப்பிரபுத்துவ ஒழிப்பு, ஏகபோக ஒழிப்பு, ஏகாதிபத்திய ஆதிக்க ஒழிப்பு ஆகிய அடிப்படையான பொருளாதாரத்துறை நடவடிக்கைகளை முன்வைக்கிறது. ஆனால், அரசியல் துறையில் ஜனாதிபதி ஆட்சி எதிர்ப்பு, எதேச்சதிகாரத்திற்கு எதிர்ப்பு, தேசியப் பாதுகாப்புச் சட்டம் (NSA), அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டம் (ESMA) போன்ற கருப்புச் சட்டங்களுக்கு எதிர்ப்பு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பதாக மட்டுமே இருக்கிறது. சாராம்சத்தில் இன்றைய பாராளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்கிறது. இன்னும் சரியாகச் சொன்னால் ஆளும் வர்க்கங்களிடம் இருந்து தோன்றும் ஆபத்திலிருந்து பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பதை 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது கடமையாக எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதாவது இன்றைய பாராளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ளாகவே நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம், ஏகபோகம்

படிப்பகம்

www.padippkam.com



ஆகியவற்றை 'ஒழிப்பது' என்ற திட்டத்தின் அடிப்படையிலேயே இடதுசாரி ஜனநாயக முன்னணியைக் கட்ட 'மார்க்சிஸ்ட்' கட்சி செயல்பட்டு வருகிறது.

வேறொரு வகையில் சொன்னால், இடதுசாரி ஜனநாயக முன்னணி, பாராளுமன்ற ஜனநாயகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு மக்கள் சோவியத் ஜனநாயகத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு மக்களை அணிதிரட்டாது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு என்ற கவர்ச்சிகரமான பொருளாதாரத்துறை முழக்கங்களை வைத்து மக்களை பாராளுமன்ற அரசியல் அமைப்புக்காகவே அணிதிரட்டும்.

இத்தகைய பாராளுமன்றவாத முன்னணியைத்தான் ஜனநாயகப் புரட்சிப் போராட்டத்தின் பிரிக்கமுடியாத பகுதி என்கிறது 'மார்க்சிஸ்ட்' கட்சி.

படிப்பகம்